
# பொருளியல் நோக்கு

1982
மே



புகையிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகையிலைச் செய்கையும் ஊக்குவிப்பும்

புகையிலை உயிர்களுக்கு ஆபத்தை விளைவிப்பது மாத்திரமல்ல இந்நாட்டின் செழிப்பான நிலங்களும் பாதிப்புக்குள்ளாயின எனலாம். கண்டி மாவட்டத்திலுள்ள ஹேவாஹெட்ட பகுதியிலும், வடமேல் மாகாணத்திலுள்ள தாழ்ந்த சமவெளிகளிலும் சுமார் 40,000 ஏக்கர் காணி ஆண்டுதோறும் உபயோகிக்கப்படுவதாக புகைத்தல்—ஆரோக்கியம் பற்றிய இலங்கைச் சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். ஒருவர் இப்பகுதிக்கு விஜயம் செய்வாரானால் புகையிலைச் சாகுபடிக்காக ஹேவாஹெட்டையில் உள்ள காணிகள் எந்த அளவுக்கு முற்றாக உரித்து வெறுமையாக்கப்பட்டு, மலையுச்சிகள் திறந்து விடப்பட்டுள்ளனவென்பதைக் காண முடியும். தாழ்ந்த சம வெளிகளில் செழிப்பான நெல் வயல்கள் புகையிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு கணிசமான தொகைகளை உதவிப் பணமாகக் கொடுப்பதன் மூலம் இலங்கைப் புகையிலைக் கம்பெனியும் இலங்கைப் புகையிலைக் கூட்டுத்தாபனமும் புகையிலை சாகுபடிக்கு ஊக்கமளிக்கின்றன. புகையிலைச் செய்கை விவசாயிகளுக்கு கணிசமான வருமானத்தை உண்டாக்குகிறது. மாற்று உணவுப் பயிர்களை விளைவிக்க குடியானவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதில்லை. தும்பறை மலையுச்சிப் பகுதிகளில் சகல மரங்களும் அழிக்கப்பட்டுள்ளதால் அவை மண்ணரிப்புக்குள்ளாகிறது. இதனால் செழிப்பான மண் அரிப்புக்குள்ளாகி ஆற்று வடி நிலங்களில் போய் படிகிறது. இப்பிரதியிலுள்ள எமது விசேட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி புகையிலை, அதன் உற்பத்திப் பொருட்களால் அரசாங்கம் பெறும் கலால் வரி இந்நாட்டு மக்கள் புகைப்பதால் ஏற்படும் ஆரோக்கியமின்மையை ஈடாக்க முடியாது.

புகைபிடிக்கும் பழக்கத்தையும் புகையிலை உற்பத்திப் பொருட்களின் விற்பனையையும் விளம்பரத்துறை ஊக்குவித்ததைப் போல் வேறு ஒரு காரணியும் ஊக்குவிக்கவில்லை எனலாம். புகைத்தலின் அபாயத்தை எடுத்துக் கூறும் பிரசாரமானது சிகரற் விற்பனையின் அடிமட்ட நிலையைத் தாக்கியுள்ளது. இது சிகரற் விளம்பர செயற்றிறனை அகற்ற முயற்சிக்கிறது எனலாம். ஆனால் சிகரற் உற்பத்தியாளர் பல்வேறு வழிமுறைகளினால் அதாவது கலை, விளையாட்டுத் துறைகளுக்கு ஆதரவு நல்குவதன் மூலம் தமது பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். வலது பக்கத்திலுள்ள படம் இதற்கான சிறந்த உதாரணமாக அமைகிறது. புகைத்தலுக்கு எதிரான பிரசாரத்தைச் செய்பவர்கள் தமது செய்தியைப் பரப்ப விளம்பரத் துறையை உபயோகிப்பதை கீழ் உள்ள படம் சித்திரிக்கின்றது.





**A John Player invitation to**
an exhibition of paintings and drawings by

# Senaka Senanayake



Senaka Senanayake is the best internationally known painter and sculptor in Sri Lanka today.

Since his first exhibition held in 1959 when he was only 8 years old, Senaka Senanayake's work has been continually exhibited on invitation from recognised art institutions.

To date he has held over 95 one-man exhibitions in eighteen countries.

His work is on display in prestigious institutions around the world including the United Nations Building in New York, the White House, the Berlin State Museum, the Lidice Museum and the Dallas Museum of Fine Arts.

We are privileged to be associated with the exhibition.

Lionel Wendt
19-23 November 1981




**The sign of rich good taste around the world**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1269

# பொருளியல் நோக்கு

மலர் 8 இதழ் 2 மே 1982

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

## நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

14 மகாவலிப் பிரதேச நீர்ப்பற்றுக்குறை தரும் பாடங்கள்

16 விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் மறுசேர்மான டி.எஸ்.ஏ. பரம்பரையலகுகள் இணைப்பு முறை

## விசேஷ அறிக்கை

3 புகையிலை

## சிறப்புக் கட்டுரைகள்

உபாலி விதானபத்திரன 18 இலங்கையிலுள்ள உள்நாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் சில அம்சங்கள்

எம்.டபிள்யு.ஜே. ஜி. மெண்டிஸ் 24 இலங்கையில் பெரு நகரங்கள்

29 கலாசார சொத்துக்களை சொந்த நாடு களுக்குத் திருப்பிக் கொடுத்தல்

- சென்ற இதழில் வெளியான 'பணத்தின் பெறுமதி ரூபாவின் இரு பக்கங்களையும் பற்றி ஒரு பொதுப்படுத்திய கருத்து' என்ற கட்டுரையை எழுதியவர்:

—எஸ். ரி. ஜி. பெர்ணாண்டோ

## அடுத்த இதழில்

- சுதந்திர வர்த்தக வலயம்
- இலங்கையில் சக்தித்திட்டமிடலும் முகாமைத்துவமும்
- மகாவலி திசை திருப்பும் திட்டம்

## அட்டைப்படம்

—எஸ். எச். சரத்.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

மார்ச்

1 வெனிசுவெலாவின் கனரக, விசேஷ கனரக சுத்திகரிக்காத எண்ணெயின் விலையில் பீப்பா ஒன்றுக்கு 2.50 அமெரிக்க டாலர் குறைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் எரிசக்தி—சுரங்கங்கள் அமைச்சு அறிவித்தது. இந்த வெட்டினால் விலைகள் பீப்பா ஒன்றுக்கு 18.90 டாலருக்கும் 27.12 டாலருக்குமிடையே ஒரு நிரைக்குக் கொண்டுவரப்படும்.

வட கடல் எண்ணெய்க்கு நிலவும் 35 டாலருக்கும் 31 டாலருக்கும் இடைப்பட்ட விலைகளில் ஒரு கடும் 4 டாலர் வெட்டை ஏற்படுத்துவதென பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரிட்டிஷ் தேசிய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் யோசனை தெரிவித்துக் கொண்டிருந்ததென எண்ணெய் அமைச்சு வட்டாரங்கள் லண்டனில் கூறின.

4 தங்கத்தின் விலை 2½ வருடங்களில் முதல் முறையாக லண்டனில் அவுன்ஸ் ஒன்று 350 அமெரிக்க டாலருக்குக் கீழே வீழ்ச்சியுற்றது. இது முற்றுப்பெறும் அறிகுறிகளே இல்லாமல் நீண்ட காலமாக ஏற்பட்டுவரும் விலைவீழ்ச்சியின் ஒரு தொடர்ச்சியாகும். 1979 செப்டம்பர் மாதத்துக்குப் பின் இதுவே மிகக் குறைந்த விலை. இது முந்திய நாளின் முடிவிலிருந்த 353.50 டாலரைவிட 6.50 டாலர் குறைவாகும்.

7 மிதமிஞ்சிய எண்ணெய் வழங்கல் நிலையைத் தடுப்பதற்காகவும் நடப்பு விலைகளைக் காத்துக்கொள்வதற்காகவும் கட்டாரிலுள்ள தோஹாநகரில் கூடிய ஒபெக் (பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனம்) ஐச் சேர்ந்த பிரதான அமைச்சர்கள் எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதென உத்தியோகப் பற்றற்ற முறையில் ஒப்புக்கொண்டனர் என லண்டனிலிருந்து வந்த ராய்ட்டர் செய்தியொன்று கூறியது.

10 வெளி நாட்டு நிதி வழங்கல் ஸ்தாபனங்கள்—ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த "வெளிநாட்டுப் பொருளுதவி" ஸ்தாபனம், மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த "பட்டினியிலிருந்து விடுதலை" இயக்கம்—முறையே அனுராதபுர மாவட்டத்திலுள்ள தந்திரிமலைத் திட்டத்தை விரிவாக்குவதற்கு 14 மில்லியன் ரூபாவும் மொனராகலை மாவட்டத்திலுள்ள மகுருவேலைத் திட்டத்துக்கு 10 மில்லியன் ரூபாவும் வழங்க ஒப்புக்கொண்டுள்ளனவென்று ஓர் உத்தியோகபூர்வமான அறிவிப்பு கூறியது.

12 வணிகப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள உயர்வை ஈடுசெய்வதற்காக 7,500,000 பேருக்கு இப்பொழுது வழங்கப்படும் உணவு முத்திரைகளின் பெறுமதியில் 42 சதவிகிதத்தை அதிகரிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த அதிகரிப்பினால் திறைசேரிக்கு 1,000 மில்லியன் ரூபா மேலதிக செலவு ஏற்படுமென்று ஓர் அரசாங்கப் பேச்சாளர் கூறினார். திட்ட அமுல் அமைச்சைச் சேர்ந்த போஷாக்குப் பகுதி அண்மையில் நடத்திய ஒரு பரிசீலனையின் விளைவாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. உயர்ந்துவரும் விலைகளின் காரணமாக உணவு முத்திரைகளின் உண்மையான பெறுமதியில் 42 சதவிகிதம் வீழ்ச்சியடைந்து விட்டதாக அப்பரிசீலனை எடுத்துக் காட்டியது. 1979 செப்டம்பர் மாதத்தில் இருந்தவாறு உணவு முத்திரைகளின் கொள்வனவுச் சக்தியை உண்மையில் மீண்டும் ஏற்படுத்தவே இம் முடிவு செய்யப்பட்டது.

14 1968ஆம் ஆண்டுக்கு முன்பு மீனவருக்குக் கொடுக்கப்பட்ட மீட்க முடியாத கடன் தொகையான மொத்தம் 25 மில்லியன் ரூபாவைப் பதிவழிப்புச் செய்ய வேண்டுமெனக் கடற்றொழில் மந்திரி கூறிய யோசனையொன்றை அரசாங்கம் அங்கீகரித்தது. "அமெரிக்க உதவி" ஸ்தாபனம் 1982ஆம் ஆண்டில் இலங்கைக்கு 48 மில்லியன் டாலரை வழங்கும் என நியூயார்க்கிலிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது. அமெரிக்க அபிவிருத்தி உதவியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள 93 மில்லியன் டாலருடன், இலங்கை இவ்வருடம் மொத்தம் 141.7 மில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெறும். முதல் முறையாக அமெரிக்காவின் திட்ட உதவி இவ்வருடம் தனியார் முதலீட்டுப் பெருக்க முயற்சி சம்பந்தமான செலவுகளுக்கான ஏற்பாட்டையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வருடத்துக்கான 48 மில்லியன் டாலர் தொகையில், இலங்கையிலே அமெரிக்க வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளைப் பெருக்கும் நோக்கத்தைக் கொண்ட திட்டங்களுக்காக அமெரிக்கா 2 மில்லியன் டாலர்களை ஒதுக்கி வைத்துள்ளது. திட்ட உதவிக்கு மேலதிகமாக, "அமெரிக்க உதவி" ஸ்தாபனம் இவ்வருடத்துக்கு உணவு உதவிக்காக 25 மில்லியன் டாலர்களையும் வீடமைப்பு முதலீட்டு உத்தரவாதங்களுக்காக 25 மில்லியன் டாலர்களையும் கூட ஒதுக்கியுள்ளது.

உலக வங்கியின் மென் கடன் இணைப்பு ஸ்தாபனமான சர்வதேச அபிவிருத்தி சங்கம் நடப்புநிதி வருடத்துக்கு இலங்கைக்கு 80 மில்லியன் டாலர் ஒதுக்கியுள்ளது. வர்த்தக வங்கிகள் வழங்கியுள்ள கடனளிப்பு விகிதங்களுக்கு நெருக்கமான விகிதங்களில் உலக வங்கி நிதிகளிலிருந்து மேலும் 20 மில்லியன் டாலர் கிடைக்கும்.

15 கொத்மலை மின்சக்தி செலுத்து திட்டத்தின் வெளிநாட்டுச் செலவுகளுக்குக் கூட்டு நிதியளிப்பதற்காக உலக வங்கியைச் சார்ந்துள்ள ஒரு ஸ்தாபனமான சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 735 மில்லியன் ரூபா கொடுகடனொன்றை அங்கீகரித்தது. வெளிநாட்டுச் செலவுகளை நோக்கி 'ஒபெக்' நிதியம் 235 மில்லியன் ரூபா உதவும்; உள்நாட்டுச் செலவுகளை இலங்கை மின்சார சபை ஏற்கும்.

18 வாஷிங்டன்—அமெரிக்கா 1981ஆம் ஆண்டில் அந்நிய நாடுகளுடன் கொண்ட தனது சென்மதி நிலுவைகளில் 6.6 பில்லியன் டாலர் உபரியைப் பதிவுசெய்தது; அமெரிக்கா வெளி நாடுகளில் மிக விரிவான அளவில் நடத்திய பொருளாதார கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக 1975ஆம் ஆண்டுக்குப் பின் இதுவே மிகப் பெரிய உபரியாகும் என அரசாங்கம் இன்று தெரிவித்தது.

19 அமெரிக்க வட்டி விகிதங்கள் தொடர்ந்து உயர் அளவில் இருந்துவந்த போதிலும், சுவிட்ஸர்லாந்தும் மேற்கு ஜெர்மனியும் நெதர்லாந்தும் ஒன்று சேர்ந்து செயலாற்றி, வட்டி விகிதச் செலவுகளை அறிவித்தன. இது பற்றி முன்பு கலந்தாலோசிக்கப்பட்டதென சகல மூன்று நாடுகளையும் சேர்ந்த மத்திய வங்கியில் உள்ள அதிகாரிகள் கூறினர். ஆனால் ஒவ்வொரு வங்கியும் தங்களுடைய நடவடிக்கைகளுக்கு வித்தியாசமான காரணங்களைக் கூறின. (ஏசியன்வோல் ஸ்றீட் ஜர்னல்).


பிரான்ஸ் வங்கி பெருமளவில் தலையிட்ட போதிலும், டாலர் பிந்திய நியூயார்க் பேரங்களில் மற்றும் நாணயங்களுக்கெதிராக 1.1 சதவிகிதம் மதிப்புயர்ந்து, முந்திய நாளின் 6.1375 பிராங்குகளிலிருந்து 6.2075 பிராங்குகளுக்குத் தாவியது. டாலர் உறுதியாக நின்று, இத்தாலிய லீராவுக்கெதிராக முன்னெப்போதும் காணாத உயர் பெறுமதியை எட்டியது. தங்கத்தின் விலை அவுன்ஸ் ஒன்றுக்கு 6 டாலர் வீதம் ஏறியது.

25 இலங்கை அரசாங்கத்துக்கும் பின்லாந்து, பெல்ஜியம், ரூமேனியா, அமெரிக்கா ஆகிய நாட்டு அரசாங்கங்களுக்குமிடையே இரட்டை வரி முறையைத் தவிர்ப்பதற்கான நகல் ஒப்பந்தமொன்றை அரசாங்கம் அங்கீகரித்தது.

உத்தேச ஒப்பந்தத்தின் கீழ் கப்பல் வியாபார இலாபங்களுக்கு, ;அந்த இலாபங்கள் கிடைத்த நாட்டில் வரிவிதிக்கப்படும்; வரிவிதிப்பில் 50 சதவிகிதம் குறைக்கப்படும். எனினும், விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் இலாபங்களைப் பொறுத்தவரை, மூல நாட்டில் வரிவிலக்குகள் வழங்கப்படுகின்றன—இது எல்லா நாடுகளும் மேற்கொண்டுள்ள ஒரு கொள்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புகையிலை புகைப்பதன் பொருளாதாரம்

## சரித்திரப் பின்னணி

பதினாறும் நூற்றாண்டு ஆரம்பத்தில் அமெரிக்காவுக்குச் சென்ற ஸ்பானிய தேச ஆராய்ச்சியாளர்கள் அங்குள்ள சுதேசிகள் உலர்த்திய புகையிலையைக் கொண்ட சுங்கான்களில் புகைப்பதைக் கண்டுபிடித்தனர். அவர்கள் இதை ஐரோப்பாவுக்குள் புகுத்தினர். புதிய உலகத்தை ஆராய்ந்த ஆங்கிலேயர் 1558ஆம் ஆண்டில் புகையிலையை—நிக்கொற்றியானு தபாக்கம்—இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தனர். அந்நூற்றாண்டின் முடிவில், ஒரு தீர்வை விதிக்கப்படுவதை அனுமதிப்பதற்குப் போதுமான வர்த்தக அளவில் புகையிலை இங்கிலாந்துக்குள் இறக்குமதி செய்யப்பட்டது. அடுத்து வந்த ஆண்டுகள் முழுதும் புகையிலை புகைப்பதன் விகிதம் இடையறாது உயர்ந்தது. இது பெரும்பாலும் சுங்கான் புகைக்கும் உருவத்திலேயே நடைபெற்றது.

குறிப்பாக, அந்த ஆரம்ப காலத்துப் புகையிலைப் புகையில் மிக அதிக அளவில் நிக்கொற்றீன் அடங்கியிருந்தும், சற்றும் பழக்கமில்லாத மக்கள் இவ்வளவு துரிதமாகப் புகையிலையைப் பெருவிருப்புடன் உபயோகித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

லிஸ்பனில் பிரெஞ்சு ஸ்தானிகராயிருந்த ஜீன் நிக்கொற் அதன் மருத்துவப் பயனுக்காகப் புகையிலையைச் சிபார்சு செய்தார். அவருடைய பெயரையனுசரித்து, நிக்கொற்றீன் என்று அதற்குப் பெயரிடப்பட்டது. அது அநேக நோய்கள் வராமற் காக்கும் சக்தியுடையதென்றும் பலத்தையும் ஆரோக்கியத்தையும் மீளளிக்கவல்லதென்றும் உயர்வாக மதிக்கப்பட்டது. ஆனால் அது ஒரு பொல்லாத பழக்கம் என்று இங்கிலாந்து மன்னர் முதலாவது ஜேம்ஸால் கண்டிக்கவும்பட்டது. எனினும், பதினாறுவது நூற்றாண்டுக்குப் பிறகு புகையிலை புகைக்கும் பழக்கம் ஐரோப்பாவில் மட்டுமன்றி உலகெங்கும் அதிகரித்து விட்டது.

சிகரெட்டுகள் பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் ஸ்பெயினில் முதலாவதாக உற்பத்தி செய்யப்பட்டன. கிறிமியன் யுத்தத்திலிருந்துமீண்ட ஆங்கிலேயப் போர் வீரர்கள் சிகரெட் புகைப்பதை இங்கிலாந்துக்குள் புகுத்தினர். பதினேழாம் நூற்றாண்டு முடிவில், நாகரிக வட்டாரங்களில் புகைப்பதற்குப் பதிலாகப் பெரும்பாலும் மூக்குத்தூள் போடும் பழக்கமே காணப்பட்டது. ஆனால் சாதாரண மக்கள் தொடர்ந்து சுங்கானிலேயே புகைத்து வந்தனர். சுருட்டுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் புகுத்தப்பட்டன. ஆனால், ஐரோப்பாக் கண்டத்தில் தவிர அது வேறெங்கும் விரிவான அளவில் பரவவேயில்லை.

வெர்ஜீனியாவில் மென்மையான புகையிலை ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டதும், 1860ஆம் ஆண்டில் பிறையர் சுங்கான் விருத்தி செய்யப்பட்டதும், அதிகரித்து வந்த சுபிட்சமும் சேர்ந்து, பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுதும் புகையிலை நுகர்வு மேலும் இடையறாது உயர்ந்தது.

சிகரெட்டுகள் தற்போதைய நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜனுபிமானத்தைப் பெற ஆரம்பித்தன. அத்துடன், சிகரெட்டுகள் மற்றும் புகைக்கும் வகைகளை இடையறாது அகற்றி வந்தன. முதலாவது உலக யுத்த காலம் வரை பெண்கள் ஒரு போதும் புகைக்கவேயில்லை. அதற்குப் பின்னர், பெண்கள் சிகரெட் புகைப்பது அதிகரித்து, இரண்டாவது உலக யுத்த காலத்தில் பெருமளவு உத்வேகம் பெற்றது. எனினும், அதற்குப் பின்னர் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரெட் புகைக்கும் வழக்கம் குறைந்துவிட்டது. அத்துடன், பெண்கள் ஆண்களைப் போல அடிக்கடி புகைப்பது குறைவு.

புகையிலை புகைக்கும் பழக்கம் பதினைரும் நூற்றுண்டின் பிற்பகுதியில் போர்த்துக்கீசியரால் இலங்கைக்குள் புகுத்தப்பட்டதாகத் தோன்றுகிறது.

## சிகரெட்டுகளும் புகையிலையும்

இலங்கையில் சிகரெட்டுகளை உபயோகிப்பதில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் புகையிலைக் கம்பெனியின் வருடாந்த அறிக்கையை நோக்குமிடத்து, 1969ஆம் ஆண்டில் 2,254,000 சிகரெட்டுகள் விற்கப்பட்டிருக்க, 1972 ஆம் ஆண்டில் இதன் விற்பனவு 3,219,000க்கு அதிகரித்துள்ளதென்பது தெரிகிறது— இது மூன்று வருடங்களில் 42 சதவிகிதத்துக்கு மேற்பட்ட அதிகரிப்பாகும். பின்னர், 1972ஆம் ஆண்டிலிருந்து 1980ஆம் ஆண்டு வரை (அட்டவணை—1) சிகரெட் விற்பனவு 3,424 மில்லியனிலிருந்து 5,225.5 மில்லியனுக்கு அதிகரித்தது. இது எட்டு வருடங்களில் சுமார் 53 சதவிகித அதிகரிப்பாகும். சிகரெட்டுகளின் வருடாந்த ஏற்றுமதியைக் கணக்கிலெடுத்துக் கொண்டாலுங் கூட, இக்காலத்தில் இலங்கையிலே சிகரெட் உற்பத்தியில் மட்டுமன்றி உண்மையான நுகர்விலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதென்பது தெளிவு.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புகையிலையும், அதைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் சிகரெட்டுகளும் அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வருடந்தோறும் ஏற்றுமதி செய்யப்படும் சிகரெட்டுகளின் தொகை 250 மில்லியன்; புகையிலையின் தொகை கால்மில்லியன் கிலோகிராம்கள்.

## பீடி

1978ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டுவரையுள்ள காலத்தில் நடைபெற்ற வருடாந்த பீடி உற்பத்தி அட்டவணை—11இல் காட்டப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டிலிருந்து 1979ஆம் ஆண்டு வரை பீடி உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆனால், 1977ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டின் உற்பத்தி குறிப்பிடத்தக்கவாறு சுமார் 50 சதவிகிதம் குறைந்துள்ளது. குறிப்பாக, பீடி குறைந்த வருவாயுள்ள மக்களால் மட்டுமன்றிக் குறைந்த கல்வி பெற்றுள்ளவர்களாலும் உபயோகிக்கப்படுவதால், இது ஓர் அனுகூலமான போக்கெனக் கருதப்படுகிறது.

### அட்டவணை — 1

### சிகரெட்டுகளினதும் புகையிலையினதும் உற்பத்தி 1972 — 1980

| வருடம் | சிகரட்டுகள் (மில்லியன் கணக்கில்) | புகையிலை இலை (அந்தர் கணக்கில் |
|---|---|---|
| 1972 | 3424 | 809 |
| 1974 | 3912.3 | 658 |
| 1976 | 4181 | 743 |
| 1978 | 5098 | 708 |
| 1980 | 5225.5 | 366 |

### அட்டவணை — 2

### பீடி உற்பத்தி 1978 — 1980

| வருடம் | அளவு (மில்லியன் கணக்கில்) |
|---|---|
| 1980 | 2036.2 |
| 1979 | 2657.5 |
| 1978 | 1363.7 |

## புகையிலை பயிரிடல்

அட்டவணை—111இல் புகையிலைச் செய்கையின் அளவு 1970ஆம் ஆண்டிலிருந்து 1980ஆம் ஆண்டு வரை வருட வாரியாக ஏக்கர் கணக்கில் தரப்பட்டுள்ளது. 1970 ஆம் ஆண்டில் 30,640 ஏக்கர் காணியில் பயிரிடப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் இதன் பரப்பு 38,780 ஏக்கருக்கு அதிகரித்துள்ளது. 1979ஆம் ஆண்டிலேதான் ஆகக்கூடிய பரப்பில் அஃதாவது 41,710 ஏக்கரில் புகையிலை சாகுபடி செய்யப்பட்டது. இது இந்நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்வாழ்வுக்கும் தீங்கு செய்யும் ஒரு விளைபொருளை உற்பத்தி செய்வதற்காகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்ட பெரும் பாப்புக் காணியென்று கருதப்படுகிறது. இந்தக்காணியைக் குறிப்பாக உணவுப் பொருள்களைப் பயிரிடுவதற்கு இலாபகரமாக உபயோகிக்க முடியுமென்பது இதையொட்டி கூறப்படும் ஒரு பலத்த நியாயமாகும்.

### அட்டவணை — 3

| வருடங்கள் | ஏக்கர்கள் |
|---|---|
| 1970 | 30,640 |
| 1971 | 26,130 |
| 1972 | 32,280 |
| 1973 | 29,830 |
| 1974 | 24,800 |
| 1975 | 28,110 |
| 1976 | 32,890 |
| 1977 | 34,700 |
| 1978 | 33,870 |
| 1979 | 41,710 |
| 1980 | 38,780 |

புகையிலையைப் புகைக் குழல் முறையில் உலர்த்துவதற்கு விறகு பெருமளவில் தேவைப்படுகிறது. அஃதாவது ஓர் ஏக்கரில் விளைந்த புகையிலையை உலர்த்த ஓர் ஏக்கர் விறகு வரை தேவைப்படுமென மதிப்பிடப்படுகிறது. இந்த அடிப்படையில், உண்மையில் ஏறக்குறைய 80,000 ஏக்கர் காணிப் பரப்பு அழித்துப் பாழாக்கப்படும்.

## புகையிலைப் புகையில் அடங்கியுள்ள பொருள்கள்

புகையிலைப் புகை வாயுக்களையும் நுண்ணிய துகள்களையும் கொண்ட ஒரு கலவையாகும். புகை உட்சுவாசிக்கப்பட்ட பின், அதில் ஏறக்குறைய 50 சதவிகிதம் சுவாசப்பை (நுரையீரல்)யில் நிறுத்தி வைக்கப்படுகிறது. துகள்களில் சில, சுவாசப் பையிலுள்ள காற்றுக் குழாய்களிலும் சிறு காற்றுப் பைகளிலும் படிந்து விடுகின்றன.

புகையிலைப் புகையே ஒரு மிகச் சிக்கலான அமைப்பைக் கொண்டதாகும். அதில் சுமார் ஓர் ஆயிரம் கூட்டுப் பொருள்கள் இருப்பதாக இனங் காணப்பட்டுள்ளன. புகையிலைப் புகை இலேசான அமிலத் தன்மை கொண்டது. சுங்கான் புகை அமிலத்தன்மை கொண்டதாகவோ அல்லது காரத்தன்மை உள்ளதாகவோ இருக்கலாம். சுருட்டுப் புகை விசேஷ காரத்தன்மை கொண்டதாகும். எரிவை உண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்கும் இந்தக் காரத்தன்மை காரணமாக, சுருட்டுப் புகை உட்சுவாசிக்கப்படுவது குறைவு. இதனாற்றான் சிகரெட் புகைப்பதைவிட சுருட்டு புகைப்பதில் ஆபத்து குறைவு என்று வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைக்கும் கோணத்திலிருந்து நோக்குமிடத்து, புகையிலைப் புகையில் அடங்கியுள்ள மிக முக்கியமான பொருள்கள் பின்வருமாறு—

(அ) புகை உட்சுவாசிக்கப்படும் போது நிக்கொற்றீனில் சுமார் 90 சதவிகிதமும், உட்சுவாசிக்கப் படாத போது சுமார் 10 சதவிகிதமும் உட்கிரகிக்கப்படுகிறது. நிக்கொற்றீனின் பிரதான விளைவுகள் இருதயத்தையும் இரத்த நாம்புகளையும் ஜீரணப் பாதையையும் சிறுநீரகத்தையும் நரம்பு மண்டலத்தையும் பாதிக்கின்றன.

(ஆ) புற்று நோயை உண்டாக்க வல்ல தார் (கீர்).

(இ) பிரதானமாக மூச்சுக் குழல்களைப் பாதிக்கும் உறுத்தும் பொருள்கள்.

(ஈ) இருதய நோயை மோசமாக்கும் காபன் மொனோக்ஸைட்

## புகைத்தல்பற்றிய ஆராய்ச்சிகளும் ஆரோக்கியத்தின் பொருளாதாரமும்

அநேக நாடுகளில் நடத்தப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகள், புகையிலை புகைத்தல் ஆரோக்கியத்துக்குப் பெருந் தீங்கு விளைக்கக் கூடிய ஒரு செயல் என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. அது ஆயுளைக் குறைக்கிறது; சுவாசப் பையில் புற்று நோய் ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது; நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி, இருதய நோய்கள், இரத்த நரம்பு நோய்கள், வயிற்றுப் புண்கள், நாக்கிலும் தொண்டையிலும் உணவுக் குழாயிலும், களையத்திலும், சிறுநீரகம் ஆகியவற்றில் புற்று நோய் ஏற்படுவதற்கும் பிரதான காரணமாயிருக்கிறது. கர்ப்பிணிகள் கருத்தரித்திருக்கும் போது புகைப்பதால் கருச்சிதைவுகள், சாப்பேறுகள் (குழந்தை செத்துப் பிறத்தல்), சிசுப்பருவத்தில் மரணங்கள் ஆகியன நேர்கின்றன.

## புகைக்காதிருப்பதினால் ஏற்படும் நன்மைகள்

புகைக்காதிருப்பதனால் ஏற்படும் முதன்மையான நன்மை என்னவென்றால், ஒருவர் ஆரோக்கியமான நல்ல வாழ்வு நடத்தலாம். அழகியல் நன்மைகளும் ஏற்படுகின்றன. புகைக்கும் ஒருவர் அப்பழக்கத்தைக் கைவிட்டால், உடல்

# குடியேற்ற நாட்டுப் பொருளாதாரத்தில் புகையிலையின் முக்கியத்துவம்

பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கையிலே புகையிலை ஒரு முக்கியமான வர்த்தகப் பயிராக இருந்தது. அத்துடன் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டில் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாகவுமிருந்தது. டச்சுக்காரர் காலத்திலும் புகையிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்விரு குடியேற்ற நாட்டு ஆதிக்க அரசுகள் நாட்டை ஆட்சி புரிந்த போதே புகையிலை ஒரு வர்த்தகப் பயிராகப் புகுத்தப்பட்டுள்ளதென்பதற்குரிய அடையாளங்களைக் கண்டுபிடிக்க முடியும்.

சரித்திரப் பதிவேடுகளின்படி, புகையிலை குடியேற்ற நாட்டிலுள்ள வட பிரதேசங்களின் பிரதான விளை பொருளாயிருந்தது; அத்துடன் அப்பிரதேசங்களின் சுபிட்சத்துக்கு அத்திவாரமாகவும் அமைந்திருந்தது. அது பிரதானமாகத் தென்னிந்தியாவிலுள்ள திருவாங்கூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மலேயா குடாநாட்டுடனும் கிழக்கிந்தியத் தீவுகளோடும் இலங்கை நடத்திய வர்த்தகத்திலும் அது ஒரு முக்கியமான பொருளாக விளங்கியது. எனினும், மொத்தத்தில் குடியேற்ற நாடு வெளிநாடுகளுடன் நடத்திய வர்த்தகத்தின் கன அளவு அவ்வளவு அதிகமாயிருக்கவில்லை.

புகையிலை வர்த்தகம் மிகுந்த கவர்ச்சியூட்டியதற்குக் காரணம், அது சீணிப்பதற்கு முன்பு அது கொண்டுவந்த இலாபங்களேயாகும். இந்த வர்த்தகத்தில் நடுவர்களின் குழுவொன்றே ஆதிக்கஞ் செலுத்தியது. இவர்கள் உற்பத்தியாளர்களுக்கு மூலதனத்தை முற்பணமாகக் கொடுப்பதன் மூலம் கொள்வனவாளரின் சந்தையைக் கட்டுப்படுத்தும் பாத்தியதையைப் படிப்படியாகப் பெற்றனர். மூலதனத்தை முற்பணமாகப் பெற்ற உற்பத்தியாளர்கள் பதிலுக்குத் தங்கள் உற்பத்தியை ஈடுவைக்கவேண்டிய கட்டாயத்துக்குள்ளாயினர். இவ்வர்த்தகத்தில் பெருவாரியான இலாபம் கிடைத்தது—யாழ்ப்பாணத்தில் குடியேறி கொச்சி வர்த்தகத்தில் ஈடுபட்ட ஆங்கிலேயரான கேப்டன் ஜே. ரி. ஆண்டர்ஸன் தனக்கு நூற்றிருபத்தைந்து சதவிகித இலாபங்கள் கிடைத்ததாக மதிப்பிட்டார்—அவர் நடத்திய வர்த்தகத்தின் கன அளவு முழுவெளிநாட்டு வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்குக்கும் ஐந்தில் நான்கு பங்குக்கு மிடையிலிருந்ததென வெவ்வேறு விதமாக மதிப்பிடப்பட்டது. இவ்வர்த்தகம் பெருமளவுக்குக் கள்ளத்தனமாகவே நடைபெற்றது. கிழக்கிந்தியக் கும்பனி பாகுபாடான தீர்வைகள் மூலமும் தனது ஏகபோக உரிமை கொண்டாடும் வழக்கங்கள் மூலமும் இவ்வர்த்தகத்தின் மீது விதித்த கட்டுப்பாடுகளே இதற்குக் காரணம். ஆதலால், குடியேற்ற நாட்டின் பொதுச் சுங்க வருமானத் திரட்டுகள் வியாபாரத்தின் பெறுமதியைத் தக்க அளவில் பிரதிபலிக்கவில்லை. ஆயினும், அநேக ஆளுநர்கள் (கவர்னர்கள்) பொருளாதாரத்தில் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாய், கட்டுப்பாடுகளிலிருந்து அதை விடுவிக்கத் திடசங்கற்பத்துடன் முயன்றனர். ஆனால், கிழக்கிந்தியக் கும்பனியார் காட்டிய எதிர்ப்பினால் இம் முயற்சிகள் வெற்றிபெறவில்லையென்று விஜய சமரவீர பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள "இலங்கைச் சரித்திரம்" என்னும் நூலில் எழுதியுள்ள "பிரிட்டிஷாரின் கீழ் "பொருளாதார—சமூக அபிவிருத்திகள்" என்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வட பகுதியில் நடைபெற்ற புகையிலை வர்த்தகத்தில் முக்கிய பகுதி திருவாங்கூர் ராஜாவுடனேயே நடந்தது. அவர் கிழக்கிந்தியக் கும்பனியாரின் இரகசிய ஆதரவுடன் இவ்வர்த்தகத்தில் கண்டிப்பான ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தார். புகையிலைச் சந்தைமீது திருவாங்கூர் ராஜா கொண்டிருந்த பிடியைத் தகர்த்து, அவருடைய இலாபங்களில் ஒரு பங்கைப் பெற இலங்கை அரசாங்கம் முயன்றது. ஆனால் அம்முயற்சி தோல்வியுற்றது. அதனால் ஏற்பட்ட விளைவுகள் புகையிலை வியாபாரத்துக்குப் பேராபத்தாகிவிட்டன. பின்னர் இவ்வர்த்தகம் துரிதமாகச் சீணிக்கத் தொடங்கிவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் உள்நாட்டுப் புகையிலை வர்த்தகம் மீண்டும் புத்துயிர் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலத்துடனும் நல்ல உடற் சக்தியோடுமிருப்பதை அவர் உணர்வார். அவருக்கு நன்றாகப் பசியெடுக்கும்; உணவும் அதிக சுவையுள்ளதாயிருக்கும்.

புகைக்காத ஒருவரின் விரல்கள் சுத்தமாக இருக்கும். அவருடைய மூச்சு நாற்றமடிக்காது. அவருடைய இல்லம் வசிப்பதற்கு ஏற்ற சுத்தமும் மகிழ்ச்சியும் பொருந்தியதாக இருக்கும்.

புகைப்பதால் புகைக்காதவர்களும் பாதிக்கப்படுவதால், புகைப்பதைத் தவிர்ப்பதனால் ஒருவரைச் சுற்றியுள்ளவர்களும் நன்மையடைகிறார்கள்.

## இலங்கையில் புகையிலை புகைத்தல்

புகையிலை இந்நாட்டில் சிகரெட், பீடி, உலர்ந்த சுருட்டு, ஈரச் சுருட்டு ஆகியவற்றின் உருவில் புகைப்பதற்கும் சுங்கானில் போட்டுப் புகைப்பதற்கும் உபயோகிக்கப்படுகிறது. பீடி இலையுடன் அது சப்பப்படுவதும் உண்டு.

உலர்ந்த சுருட்டு, ஈரச் சுருட்டு இரு வெவ்வேறு வகைச் சுருட்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. புகைப்பதற்கும் சில சமயங்களில் மெல்வதற்கும் உபயோகிக்கப்படும் ஈரச்சுருட்டு பிரதானமாக வயதானவர்களாலேயே உபயோகிக்கப்படுகிறது. உண்மையில் இப்பழக்கம் அருகி வருகிறது. சாயச் சுருட்டு பொதுவாக உபயோகிக்கப்படுவதில்லை. உண்மையில் சுருட்டுக்கும் சாயச் சுருட்டுக்குமுள்ள வித்தியாசம் நிறையில்தான் உள்ளது.

பீடியில் பீடிப் புகையிலைக் கலவையும் அதைப் பிடித்து வைத்திருக்க ஒரு சுற்றும் இலையும் அடங்கியுள்ளன. பீடி சுற்றும் இலை 'டயோஸ்பைரஸ்' குடும்பத்தைச் சேர்ந்தது.

## வியாபகம்

பொது மக்களிடையே புகையிலை புகைக்கும் பழக்கம் எவ்வளவு தூரம் வியாபித்துள்ளதென்பதைப் பற்றிச் சொற்ப தகவல்களே கிடைக்கின்றன. இப்பழக்கம் நகரப் பகுதிகளிலிருந்து கிராமங்களுக்கு எந்த அளவுக்குப் பரவியுள்ளதென்பதை நிர்ணயிப்பது சாத்தியப்படவில்லை.

இப்பொழுது கிடைக்கக் கூடியதாயுள்ள தகவல்கள், கடந்த பன்னிரண்டு ஆண்டுகளின்போது விஞ்ஞான ஊழியர்கள் நடத்தியுள்ள வரையறுக்கப்பட்ட பரிசீலனைகளிலிருந்தும் ஆராய்ச்சிகளிலிருந்தும் பெறப்பட்டவையாகும்.

## பொதுப் பரிசீலனை

1969ஆம் ஆண்டில் ஊருங்காட அவர்களும் செனிவிரத்ன அவர்களும் கண்டியில் ஓர் ஆராய்ச்சி நடத்தினர். அப்போது கண்டியில் ஏறக்குறைய 100,000 மக்கள் வாழ்ந்தனர். அவர்களுடைய ஆராய்ச்சி ஒரு திட்டப்படியாகவன்றி எழுந்தமானமாக நடத்தப்பட்ட ஒரு மாதிரி ஆராய்ச்சியாகும். அதில் சிரேஷ்ட வைத்திய மாணவர்கள் உபயோகிக்கப்பட்டனர். இம்மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட வீடுகளுக்குச் சென்று, அங்கு வசிக்கும் 15 வயதானவர்கள், அதற்கு மேற்பட்ட வயதினர் எல்லோரையும் நேர்முகமாக விசாரித்தனர். மொத்தத்தில் 1,121 குடிமக்கள் நேரடியாக விசாரிக்கப்பட்டனர். அவர்களில் ஆண்களாயுள்ளவர்களில் 48.2 சதவிகிதத்தினர் புகைக்கும் பழக்கமுள்ளவர்களாக இருந்தனர்; 1.6 சதவிகிதப் பெண்கள் மட்டுமே புகைப்பவர்களாயிருந்தனர். புகைப்பவர்களில் 90 சதவிகிதத்தினர் சிகரெட்டுகளையே உபயோகித்தனர். எஞ்சியுள்ளவர்கள் பீடியோ அல்லது சுருட்டோ புகைப்பவர்களாயிருந்தனர். நல்ல கல்வி பெற்றவர்கள் பீடி, சாயச் சுருட்டைவிட சிகரெட்டையே விரும்பி உபயோகித்தனர்.

இந்த ஆராய்ச்சியிலிருந்து, புகையிலையின் தலா உபயோகமும், புகைப்பவர்களின் விகிதமும், அவர்கள் தினமும் சராசரியாகப் புகைத்த சிகரெட்டுகளின் தொகையும், அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து கிடைத்த புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில், மிகக் குறைவாகவே இருந்தன.

## டாக்டரின் பரிசீலனை

வைத்தியத் தொழில் புரியும் டாக்டர்களின் புகைத்தற் பழக்கங்களை நிர்ணயிப்பதற்காக, மென்டிஸ் அவர்கள் 1972ஆம் ஆண்டில் வினாத்தாள்களை உபயோகிப்பதன் மூலம் மேலும் ஓர் ஆராய்ச்சியை மேற்கொண்டார். 389 டாக்டர்கள் அவ்வினாத்தாள்களுக்குப் பதில்களை அனுப்பினர். அவர்களில் 29.56 சதவிகிதத்தினர் புகைப்பவர்களாகவும், 18 சதவிகிதத்தினர் முன்பு புகைத்துப் பின்னர் அப்பழக்கத்தைக் கைவிட்டவர்களாகவும், 52 சதவிகிதத்தினர் புகைக்காதவர்களாகவுமிருந்தனர். வைத்தியத் தொழிலர்களில் 70.43 சதவிகிதத்தினர் புகைக்காதவர்களாயிருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

புகைப்பவர்களில் 5 சதவிகிதத்தினர் 40 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும், 28 சதவிகிதத்தினர் 25 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும், 15 சதவிகிதத்தினர் மட்டுமே 55 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் இருப்பது கவனிக்கப்பட்டது. புகைப்பவர்களில் பெரும்பாலோர் 45 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவே இருந்தனர்.

புகைப்பவர்களாயிருந்த அந்த 29.56 சதவிகிதத்தினரிலும் 68 சதவிகிதத்தினர் மட்டுமே கிரமமாகப் புகைப்பவர்களாகவும், மற்றவர்கள் அவ்வப்பொழுது புகைப்பவர்களாகவுமிருந்தனர். புகைப்பவர்களில் 74 சதவிகிதத்தினர் சிகரெட்டுகளையே உபயோகித்தனர். 47 சதவிகிதத்தினர் நாளொன்றுக்குப் பத்து சிகரெட்டுகளுக்குக் குறை

### அட்டவணை — 4

### கிரமமாகப் புகைத்த மாணவர்களின் வயதுப் பரம்பல்

| தற்போதைய வயது | கிரமமாகப் புகைப்போரின் சதவிகிதம் |
|---|---|
| 15 | 6 |
| 16 | 7.6 |
| 17 | 11.6 |
| 18 | 16.3 |
| 19 | 21.8 |
| 20 | 16.7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகப் புகைப்பவர்களாகவும் 36 சத விகிதத்தினர் 11 சிகரெட்டுகளிலிருந்து 20 சிகரெட்டுகள் வரை புகைப்பவர்களாகவுமிருந்தனர். புகைப்பவர்களாகவும் முன்னைய புகைஞர்களாகவுமிருந்த 185 பேரில் 47 சதவிகிதத்தினர் 20 வயதுக்கும் 24 வயதுக்குமிடையே புகைக்கத் தொடங்கியவர்களாகவும், 22 சத விகிதத்தினர் 15 வயதுக்கும் 19 வயதுக்குமிடையே புகைக்கத் தொடங்கியவர்களாகவும் இருந்தனர்.

முன்னைய புகைஞர்கள் புகைக்கும் பழக்கத்தைத் தாங்கள் கைவிட்டதற்குக் கூறிய காரணம் என்னவென்றால், புகைப்பது ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைக்கும் என்பதற்குப் போதிய சான்றுகள் தங்களிடம் உள்ளனவென்று அவர்கள் தெரிவித்ததாகும்.

### பாடசாலைப் பரிசீலனை

பாடசாலைக் குழந்தைகளின் புகைக்கும் பழக்கங்களை நிர்ணயிப்பதற்காக மெண்டிஸ் அவர்கள் கொழும்பு மாநகரில் பத்துப் பாடசாலைகளைத் தெரிவு செய்து. 1972/1973ஆம் ஆண்டுகளில் பரிசீலனை நடத்தினர்.

1186 பேரில் 12 சதவிகிதத்தினர் கிரமமாகப் புகைப்பவர்கள்; 27 சதவிகிதத்தினர் அவ்வப்பொழுது புகைப்பவர்கள்; 45 சதவிகிதத்தினர் புகைக்கும் பழக்கம் இல்லாதவர்கள். புகைக்கத் தொடங்கிய ஆரம்ப வயது 5 ஆகவும், சராசரி வயது 14.5 ஆகவும் இருக்கக் காணப்பட்டது. பெரும்பாலான பாடசாலைக் குழந்தைகள் சிகரெட்டுகளைப் புகைப்பவர்களாயிருந்தனர். கிரமமாகப் புகைப்பவர்கள் வாரத்துக்குப் 12 சிகரெட்டுகளைப் புகைத்தனர்.

### உள்நாட்டு சிகரெட்டுகளில் அடங்கியுள்ள தாரும் நிக்கொற்றீனும்

இலங்கைப் புகையிலைக் கம்பெனி பகுப்பாய்வு செய்தவாறு உள்நாட்டு சிகரெட்டுகளின் பல்வேறு ரகங்களில் அடங்கியுள்ள தாரும் நிக்கொற்றீனும் அட்டவணை—5இல் தரப்பட்டுள்ளன.

அபிவிருத்தியடைந்த சில நாடுகளில் சிகரெட்டிலிருக்க அனுமதிக்கப்பட்டுள்ள 15 மில்லிகிராம் தாருடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு சிகரெட் ரகங்கள் யாவற்றிலும் அடங்கியுள்ள தார் அதிகமாயுள்ளது. திறீ ரோஸஸ் போன்ற மலிவான சிகரெட்டுகளில் அடங்கியுள்ள தாரும் நிக்கொற்றீனும் கோல்ட் லீப் போன்ற அதிக விலையுள்ள ரகங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாயுள்ளது. கோல்ட் லீப் சிகரெட்டில் அடங்கியுள்ள நிக்கொற்றீன் 1 மில்லிகிராமுக்குக் குறைவாயிருக்க, திறீ ரோஸஸ் சிகரெட்டில் 1.5 மில்லி கிராமாக உள்ளது. சிகரெட் ஒன்றில் அடங்கியுள்ள நிக்கொற்றீன் 1 மில்லி கிராமுக்கு மேலிருந்தால், அது மிதமிஞ்சியதெனக் கருதலாம்.

சிகரெட்டுகளில் அடங்கியுள்ள தாரையும் நிக்கொற்றீனையும் தொடர்ந்து பகுப்பாய்வு செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்த இலங்கைப் புகையிலைக் கம்பெனி ஒப்புக்கொண்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் சிகரெட்டுகள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிகரெட்டுகள் ஆகிய இரண்டிலும் அடங்கியுள்ள தார், நிக்கொற்றீன்,காபன் மொனோக்ஸைட் ஆகியவற்றை உலக சுகாதார ஸ்தாபனம் பகுப்பாய்வு செய்து வருகிறது. ஒவ்வொரு சிகரெட்டிலும் ஐந்து ரகங்கள் ஜெனீவாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### இலங்கையில் புகையிலை புகைப்பதால் உண்டாகியுள்ள நோய்

புகையிலை புகைப்பதால் ஏற்பட்டுள்ள நோயின் அளவை நிர்ணயிக்க இலங்கையிலே மிகச் சில ஆராய்ச்சிகளே செய்யப்பட்டுள்ளன. புகைப்பதற்கும் சுவாசப்பை புற்று நோய்க்கும் பரஸ்பர சம்பந்தம் உண்டெனச் சில ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

பீடி புகைப்பவர்களுக்கு வாயிலும் உணவுக் குழாயிலும் களத்திலும் புற்று நோய் அதிக அளவில் ஏற்படுவதாக இந்தியாவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டியுள்ளன. பீடிப் புகையில் புற்று நோயை உண்டாக்கவல்ல பொருள்களும் அதிக அளவில்

**அட்டவணை — 5**

**உள்நாட்டு ரகங்களில் சிகரெட் ஒன்றில் அடங்கியுள்ள தாரும் நிக்கொற்றீனும் (மில்லிகிராம் கணக்கில்)**

| ரகம் | தார் மி.கி./சிகரெட் | நிக்கொற்றீன் மி.கி./சிகரெட் |
|---|---|---|
| பிளேயர்ஸ் கோல்ட் லீப் | 18.2 | 0.8 |
| மட்டர்ஹோன் | 20.4 | 1.2 |
| பிறிஸ்டர் | 22.3 | 1.2 |
| போர் ஏசஸ் | 19.4 | 1.07 |
| கப்ஸ்டன் | 24.0 | 1.1 |
| திறீ ரோஸஸ் | 22.5 | 1.5 |

பொருளியல் நோக்கு, மே 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிந்துள்ளன. மிதமிஞ்சிப் பீடி புகைப்பவர்களுக்குச் சிறு நீரில் மாற்றம் உண்டாகிறது. இம்மாற்றத்தை உண்டாக்கும் பொருள்கள் பிரசவத்தின் போது பிறப்புக் கோளாறுகளை ஏற்படுத்துவதுடன், இளந்தாரிகளுக்குப் பிறப்பியல் நோய்களையும் உண்டாக்குகின்றன.

இருதய நோயால் இறக்கும் ஆபத்து சிகரெட் புகைக்காதவர்களைவிட புகைப்பவர்களுக்கு அதிகமுண்டென்பதைக் கொழும்பில் பெரியாஸ்பத்திரியிலுள்ள இருதய நோய்ச் சிகிச்சை நிலையத்தில் பணியாற்றும் இருதய நோய் வைத்தியர்கள் கவனித்துள்ளனர். பெரியாஸ்பத்திரியின் இருதய நோய்ச் சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் புகைக்கும் பழக்கங்களை நிர்ணயிப்பதற்காக ஒரு பூர்வாங்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இது 1974 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளரைப் பற்றிய ஒரு பின்னேக்கான ஆராய்ச்சியாகும்.

சாரகக் (பிணி ஆய்வு கூடம்) குறிப்புக்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. 100 நோயாளரின் குறிப்புக்கள் ஆராயப்பட்டன. நோயாளரில் 35 சத விகிதத்தினர் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்ட சமயத்தில் புகைப்பவர்களாக இருந்துள்ளனர் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களில் 63.1 சத விகிதத்தினர் இருதயத் திசுக்களுக்குக் குருதி வழங்கும் நாடிகள் சம்பந்தமான நோய்களால் பீடிக்கப்பட்டு, அவற்றில் பாரதூரமான சிக்கல்களைக் கொண்டிருந்தனர். ஆனல் புகைக்காதவர்களில் 45 சதவிகிதத்தினரிடம் மட்டுமே இத்தகைய சிக்கல்கள் காணப்பட்டன.

1979/1980ஆம் ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் 954 சாரகப் பதிவேடுகள் சம்பந்தமான மேலும் ஆராய்ச்சியொன்றை சிவாய் சம் அவர்கள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் மேற்கொண்டார். புகையிலை புகைப்பதற்கும் இருதய நாடி நோய்களுக்கும் உள்ள சம்பந்தத்தை நிர்ணயிப்பதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம். குறித்த 954 நோயாளர்களில் 51.4 சத விகிதத்தினர் புகைப்பவர்களாகவும் 26 சத விகிதத்தினர் புகைக்காத

அட்டவணை — 6

**1966, 1973, 1977 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மரணங்களுக்குரிய பிரதான காரணங்கள்**

| விகிதம்/100,000 | வகுதி | 1966 விகிதம் | 1973 விகிதம் | 1977 விகிதம் |
|---|---|---|---|---|
| 1. இருதய நோய்கள் | 1 | 60.2 | 68.5 | 98.4 |
| 2. சுவாச நோய்கள் | 2 | 53.0 | 64.0 | 93.3 |
| 3. தற்செயல் விபத்துக்களும் தற்கொலைகளும் | 3 | 46.7 | 61.8 | 90.3 |
| 4. கழிச்சல் வியாதிகள் | 4 | 79.3 | 51.5 | 81.2 |
| 5. சிசுபருவத்திலும் வளர்ச்சியுறுத பிராயத்திலும் ஏற்படும் வியாதிகள் | 5 | 99.6 | 58.4 | 67.9 |
| 6. நீங்கிழைக்கும் நோய் நிலைகள் | 6 | 26.7 | 31.8 | 38.7 |
| 7. இரத்த சோகையும் போசாக்கின்மையும் | 7 | 38.7 | 38.9 | 42.1 |
| 8. ஏனைய தொற்றுகள் | 8 | 20.8 | 15.9 | 17.9 |

வரிப்படம் — 111 இருதய நோய்களாலும் புற்று நோயாலும் ஏற்பட்ட மரணங்களில் ஒப்பியல் அதிகரிப்பைக் காட்டுகிறது. புகையிலை புகைத்தல் இவ்விரு காரணங்களாலும் ஏற்படும் மரணங்களை அதிகரிக்கின்றன.

அட்டவணை—7

**புகையிலிருந்து அரசாங்க வருமானம் வருடவாரியாக — 1970/1971 இலிருந்து 1981 வரை**

| வருடம் | வருமானம் (மில்லியன் ரூபா கணக்கில்) |
|---|---|
| 1970—71 | 247.7 |
| 1971—72 | 391.7 |
| 1973 | 341.5 |
| 1974 | 372.9 |
| 1975 | 459.3 |
| 1976 | 451.7 |
| 1977 | 591.0 |
| 1978 | 758.6 |
| 1979 | 800.7 |
| | அங்கீகரிக்கப்பட்ட தங்காலிக மதிப்பீடுகள் |
| 1980 | 900.0 999.7 |
| 1981 | 1,040.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாகவும் இருந்தனர். மற்றவர்களைப் பொறுத்தவரை அவர்கள் புகையிலை புகைக்கும் பழக்கமுள்ளவர்களா என்பது பற்றிய பதிவேடு எதுவுமில்லை. புகைஞர்களில் 90 சதவிகிதத்தினர் சிகரெட்டுகளை உபயோகிப்பவர்களாயிருந்தனர். புகைக்காதவர்களுடன் ஒப்பிடுகையில் புகைப்பவர்களிடையே இதயத்தசை இன்பாற்று நிலை (மயோகார்டியல் இன்பார்க்ஷன்)யில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததென ஈ.சி.ஜி. சோதனை எடுத்துக் காட்டியது. புகைக்காதவர்களைவிட புகைப்பவர்களிடம் வென்டிறிகிள் (இதயக் கீழறை சந்தம், கடத்துகை (கண்டக்ஷன்) போன்ற இதயம் சம்பந்தமான சிக்கல்கள் குறிப்பிடத்தக்களவு அதிக அளவில் இருந்தன.

### இலங்கையில் மரணங்களுக்குரிய பிரதான காரணங்கள்

1966, 1973, 1977 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட மரணங்களுக்குரிய பிரதான காரணங்கள் அட்டவணை—6 இல் காட்டப்பட்டுள்ளன. கடந்த தசாப்தத்தில் மரணங்கள் ஏற்பட்ட விதத்தில் ஒரு முழு மாற்றம் காணப்படுகிறது. இப்பொழுது இருதய வியாதிகளே மரணத்துக்குப் பிரதான காரணமாயுள்ளது.

### புகையிலை வருமானங்கள்

புகையிலையிலிருந்து இலங்கை பெற்ற வருமானம் அட்டவணை—7 இல் ஆண்டு வாரியாகக் காட்டப்பட்டுள்ளது. 1971/1972 ஆண்டுகளிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் வருமானம் நான்கு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. 1971/1972 ஆம் பொருளியல் நோக்கு, மே 1982 ஆண்டுகளில் கிடைத்த வருமானமாகிய 247.7 மில்லியன் ரூபா 1981 ஆம் ஆண்டில் 1,010 மில்லியன் ரூபாவுக்கு அதிகரித்ததாக மதிப்பிடப்படுகிறது.

அரசாங்க வருமானத்துக்கு இலங்கைப் புகையிலைக் கம்பெனியின் பங்களிப்பு பற்றிய பகுப்பு அட்டவணை—7 இல் கொடுக்கப்பட்டுள்ளதால், இங்கு அது சேர்க்கப்படவில்லை. 1978ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கையில், அவ்வருடம் கம்பெனி மீது விதிக்கப்பட்ட வரித்தொகை வியாபார இலாபங்களில்68சதவிகிதமாக அல்லது கம்பெனியின் வருமானமான 875 மில்லியன் ரூபாவில் 83 சதவிகிதமாக அமைந்திருந்ததென்று கம்பெனியின் தலைவர் ; கூறுகிறார். அரசாங்கம் கனத்த வரிகளை விதித்திருந்த போதிலும், கம்பெனியின் உற்பத்திப் பொருள்களுக்கான நுகர்வோர் கோரிக்கை தொடர்ந்து வளர்ந்து வந்தது. சிகரெட்டுகளின் விலைகள் உயர்ந்திருப்பதற்கு அண்மையில் வேறு காரணிகளும் கூட உதவியுள்ளன. ஆனால், கம்பெனியின் 1981 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கையின்படி, சில்லறை விலைகள் உயர்த்தப்பட்ட போதிலும் கம்பெனி உற்பத்தி செய்யும் பொருள்களின் மொத்த விற்பனவு மேலும் அதிகரித்துள்ளது. சிகரெட் உற்பத்திக்காக மிக நவீன இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன; புதிய உற்பத்திப் பொருள்கள் சந்தைக்கு அனுப்பப்பட்டன. கம்பெனி தனது உற்பத்திப் பொருள் நிரையை விரிவாக்குவதற்காக அதிகமான சிகரெட்ரகங்களைப் புகுத்தும் திட்டங்களை வைத்திருக்கிறது.

புகையிலை மீதான வருடாந்த கலால் தீர்வை அரசாங்கத்துக்கு ஒரு பெருந்தொகையை வருமானமாக உண்டாக்குகிறது. அது சுகாதார சேவைகள் மீதான வருடாந்த செலவைவிட அதிக தொகையாகும். இதன் விளைவாக இவ் வருமானத்தைக் குறைக்க அரசாங்கம் விரும்பவில்லை. இந்த வருமானத்தில் ஒரு நியாயமான விகிதம் புகையிலையால் உண்டாக்கப்படும் வியாதிகள் மீது செலவிடப்படுவது பொருளியல் ரீதியாக விவேகமற்ற ஒரு கொள்கையாகும்.

பிரிட்டனில் தற்போது புகைத்தல் தொடர்பான வியாதிகளின் பேரில் ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை 155 மில்லியன் பவுண் ஸ்டர்லிங்காகும்.

### புகையிலையின் சமூக பொருளாதார விளைவுகள்

(1) புகைப்பதனால் ஆரோக்கியத்துக்குப் பங்கம் ஏற்படுவதன் காரணமாக, புகைத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டியதவசியமாகும். எனினும், புகைத்தலைக் கட்டுப்படுத்துவது விரும்பத்தக்கது என்பதற்கு, இதனால் ஏற்படும் பொருளாதார நஷ்டங்கள் ஆதாரவாயிருக்கின்றன. சராசரிப் புகைஞரொருவர் நாளொன்றுக்குச் சுமார் 20 சிகரெட்டுகளைப் புகைக்கிறார். பத்து பிறிஸ்டல் சிகரெட்டுகளைக்கொண்ட பக்கெட் ஒன்றின் விலை 5 ரூபா 50 சதம் எனக் கொண்டால், அவர் மாதத்துக்கு இதன் பேரில் 300 ரூபாவுக்கு மேல் செலவிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் காணிகள் உரித்து வெறுமையாக்கப்படும் நிலை

டாக்டர் டபிள்யு. ஏ. கருணாரத்தின
தலைவர், புகைத்தல் — ஆரோக்கியம் பற்றிய இலங்கை
தேசிய சம்மேளனம்.

புகையிலைச் செய்கைக்காக, பிரதானமாகக் கண்டி மாவட்டத்தில் உள்ள ஹேவாஹெட்ட பகுதியிலும் வடமேல் மாகாணத்தில் உள்ள தாழ்ந்த சமவெளிகளிலும் சுமார் 40,000 ஏக்கர் காணி ஆண்டுதோறும் உபயோகிக்கப்படுகிறது. ஒருவர் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்வாராஞல், புகையிலைச் சாகுபடிக்காக ஹேவாஹெட்டையில் உள்ள காணிகள் எந்த அளவுக்கு முற்ருக உரித்து வெறுமையாக்கப்பட்டு, மலையுச்சிகள் திறந்துவிடப்பட்டுள்ளனவென்பதைக் காணமுடியும். தாழ்ந்த சமவெளிகளில் செழிப்பான நெல்வயல்கள் புகையிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன. உழவர்களுக்குக் கணிசமான தொகைகளை உதவிப் பணமாகக் கொடுப்பதன்மூலம் இலங்கைப் புகையிலைக் கம்பெனியும் இலங்கைப் புகையிலைக் கூட்டுத்தாபனமும் புகையிலைச் சாகுபடிக்கு ஊக்கமளிக்கின்றன. புகையிலைச் செய்கை விவசாயிகளுக்குக் கணிசமான வருமானத்தை உண்டாக்குகிறது. மாற்று உணவுப் பயிர்களை விளைவிக்க கிருஷிகர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதில்லை என்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை. புகையிலைச் செய்கையில் இருந்து இன்னெரு பயிர்ச் செய்கைக்கு மாறுவதற்குச் சம ஊக்கச் சலுகைகள் இருக்க வேண்டியது அவசியமாகும்.

புகைப்பதால் மக்களின் ஆரோக்கியம் எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்படுகிறது என்பதை நன்கறிந்துள்ள அரசாங்கம் எங்களுடைய காணிகள் இப்படி அழித்துப் பாழாக்கப்படுவதைத் தொடர்ந்து ஆதரித்து வருகின்றது. சகல தாவரங்களும் அழிக்கொழிக்கப்பட்ட நிலையில் தும்பறையில் மலையுச்சிகள் பெரும் அரிப்புக்கு ஏதுவாக உள்ளனவென்பது அரசாங்கத்துக்குத் தெரியும். இதன் விளைவாக வளமான மண் முழுவதும் கீழே உள்ள ஆற்று வடிநிலப் பகுதிகளுக்கு அடித்துச் செல்லப்படுகிறது. இது எந்த முற்போக்கான அரசாங்கமும் அவசரமாகவும் ஆழமாகவும் கவனிக்க வேண்டிய ஒரு விஷயமாகும்.

புகைப்பதால் ஏற்படும் தீய விளைவுகள்பற்றி இப்பிரசுரத்தின் எண்ணற்ற பகுதிகளில் ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டது போல, புகையிலையிலிருந்தும் புகையிலையைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்களிலிருந்தும் அரசாங்கம் திரட்டும் கலால் தீர்வை. இதனுல் மக்களின் ஆரோக்கியத்துக்கு ஏற்படும் தீங்கை ஈடுசெய்ய மாட்டாது.

ஆதலால், தாராளமாக உதவிப் பணம் புழங்குவதன் மூலம் அரசாங்கம் மாற்றுப்பயிர்ச்செய்கைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டிய அவசியமாகும். இத்தகைய ஒரு பொருளாதாரத்தில் ஓர் அரசாங்க முகவர் ஸ்தாபனமாயிருக்கும் புகையிலைக் கூட்டுத்தாபனத்துக்கு இடமே இருக்கக் கூடாது; அது கலைக்கப்பட வேண்டும்.

## புகைத்தல் சமூகத்தின் பொருளாதாரத்தைக் கெடுக்கும் விதம்.

டபிள்யு. ஏ. கருணாரத்ன

புகைப்பதன் விளைவாக ஆரோக்கியம் பாதிக்கப்படுவதால் மக்களின் வேலைத் திறமை குறைவதோடு வைத்தியப் பராமரிப்புக்கான மேலதிக கோரிக்கையும் எழுகிறது. இவ்விரு நிகழ்வுகளும் புகைத்தல் சமூகத்தின் பொருளாதாரத்துக்கு ஒரு சுமையாக விளங்குகிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

புகைக்காதவர்களிடையே விட புகைப்பவர்களுக்கிடையே ஓய்வு பெறும் வயதுக்கு முன்பு அதிக மரணங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய ஒவ்வொரு மாணத்திஞலும் உற்பத்தியில் நஷ்டம் ஏற்பட்டு, அதனுல் நாட்டின் முழு உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது.

புகைக்காதவர்களிடையே விட புகைப்பவர்களிடையே அதிக பலக் குறைவும் வேலைசெய்ய இயலாமையும் கடுமையான அளவுக்கு ஏற்படுகின்றன. இதே போல, சுகவீனமும் புகைப்பவர்களிடையேதான் அதிக அளவில் ஏற்படுகிறது. சுவாச நோய்கள் போன்ற மற்றும் சுகவீனங்களை மோசமாக்க உதவும் ஒரு காரணியாகவும் புகைத்தல் இருக்கக் கூடும். இவையாவும் உற்பத்தி இழக்கப்படுவதற்கு உறுதுணையாவதன் விளைவாகப் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது.

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களினதும் சேவைகளினதும் மொத்தப் பெறுமதியே பொதுவாக மொத்தத் தேசிய பொருளாக்கம் (மொ. தே. பொ.) எனக் குறிக்கப்படுகிறது. எனவே, புகைத்தல் நாட்டில் உண்மையில் வேலைநடைபெறும் வேலை நாட்களின் தொகையைக் குறைப்பதன் மூலம் மொத்தத் தேசிய பொருளாக்கத்தைக் குறைத்துவிடுகிறது. சுவீடன் நாட்டில் நடத்தப்பட்ட ஓர் ஆராய்ச்சியின்படி (ஜோன்ஸ்ஸன் 1974), உற்பத்தி இழப்பின் பெரும் பகுதிக்கு அகால மரணங்களே காரணமாக உள்ளது. இவ்வகையில் மரணமடைவோர் உற்பத்தி நஷ்டத்தில் ஏறக்குறைய அரைவாசியைப் பிரதிபலிக்கின்றனர். இதேவேளையில், உடற்சக்தி இழந்தோரும் அதிபர நோய்மைக்கு ஆட்பட்டோரும் தலா மொத்த உற்பத்தி நஷ்டத்தில் ஏறக்குறையக் கால் பங்கைப் பிரதிபலிக்கின்றனர்.

புகைத்தல் தொடர்பான சுகவீனங்கள் வேலை நாட்களை மட்டும் பாதிப்பதில்லை; ஆனுல் வைத்திய பராமரிப்பின் பேரில் சமூகத்தின் மொத்தப் பொருளாதாரச் சொத்துக்களில் மேலதிகமாகப் பெரும் பகுதிகளைச் செலவிட வேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்துகின்

றன. இவ்விதம் செலவழிக்கப்படும் சொத்துக்களில் பெரும்பகுதியை, மற்றும் வகையான சேமநல வசதிகளை வழங்குவதற்கு உபயோகிக்க முடியும். ஆதலால், புகைத்தல் தொடர்பாக வைத்தியப் பராமரிப்புக்கென எழும் இந்த மேலதிக கோரிக்கை சமூகத்தின் பொருளாதாரம்மீது மற்றொரு பளுவைச் சுமத்துகின்றது. இதையொட்டி ஏற்படும் செலவுகள் ஆஸ்பத்திரிப் பராமரிப்பு, வெளிநோயாளர் பராமரிப்பு, மருந்துகள் ஆகியவற்றின் பேரில் ஏற்படுவனவாகும். எனினும், சமூகத்தின் பொருளாதாரம் மீது புகைக்கும் பழக்கம் சுமத்தும் மொத்தப் பளுவில் இச்செலவுகள் ஒரு சிறு பாகத்தையே பிரதிபலிக்கின்றன. உற்பத்தியில் ஏற்படும் நஷ்டத்தின் பெறுமதி, மேலதிக வைத்திய பராமரிப்புச் செலவுகளைவிடப் பல மடங்கு அதிகமான பணத்தொகையைப் பிரதிபலிக்கின்றது.

உற்பத்தியில் ஏற்படும் இழப்பு, வைத்திய பராமரிப்புக்குரிய மேலதிக செலவுகள் ஆகியவற்றிற்குப் புறம்பாக, புகைத்தல் தொடர்பாகச் சமூகத்தின் பொருளாதாரத்துக்கு மற்றும் வகைச் செலவுகளும் ஏற்படுகின்றன. உதாரணமாக, புகைஞர்கள் உபயோகிக்கும் கட்டடங்களில் காற்றோட்டத்தை அதிகரிக்க வேண்டியிருப்பதால் கட்டடத் திருத்தங்களுக்கும் பராமரிப்புக்கும் செலவுகள் அதிகரிக்கின்றன.

முடிவாக, புகையிலை வருமானங்கள் சம்பந்தமாக ஒருசில முக்கிய விஷயங்களைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. சமூகத்தின் பொருளாதாரம் மீது புகைக்கும் பழக்கம் உண்டாக்கும் பிரதிகூலமான விளைவுகளை இந்த வருமானங்கள் ஓரளவுக்கு ஈடுசெய்துவிடும் என்று சில சமயங்களில் கூறப்படுகிறது. இது ஒரு தவறான எண்ணமாகும். ஏனென்றால், இழக்கப்பட்ட வேலை நாட்களை மீண்டும் சிருஷ்டிக்கவோ அல்லது வைத்திய பராமரிப்புக்குள்ள உண்மையான தேவையைத் தேவையற்றதாக்கவோ எந்த வரிவிதிப்பு முறைக்கும் சக்தி இருக்க முடியாது. (லிஞ்சோம் 1974)

புகையிலை வருமானங்களின் பங்களிப்பைப் புரிந்துகொள்வதற்கு, நாம் இரு விஷயங்களுக்கிடையே யுள்ள வித்தியாசத்தைக் கண்டறிய வேண்டும். முதலாவதாக, சொத்துக்களின் தேசிய வழங்கலுக்கும் (தேசிய உற்பத்தி அஃதாவது மொத்தத் தேசிய பொருளாக்கம்) சொத்துக்களின் தேசிய உபயோகத்துக்கும் (தனியார், அரசாங்க நுகர்வு — தனியார் அரசாங்க முதலீடு) இடையே சமநிலையை ஏற்படுத்தும் ஒரு தராசாக விளங்கும் தேசிய வரவு செலவுத் திட்டம் (பாதீடு) இருக்கிறது. இரண்டாவதாக, அரசாங்கத்தின் நிர்வாக அலுவல்களில் வருமானத்துக்கும் செலவுகளுக்குமிடையே சமநிலையை ஏற்படுத்தும் ஒரு தராசாக விளங்கும் அரசாங்க வரவு செலவுத் திட்டம் இருக்கிறது.

புகைத்தற் பழக்கம் முதலாவது தராசைப் பிரதிகூலமாகப் பாதிக்கின்றது. ஏனென்றால், புகைத்தலின் காரணமாக மொத்தத் தேசிய பொருளாக்கத்தில் ஏற்படும் குறைவு நுகர்வுக்கும் முதலீட்டுக்குமுரிய வாய்ப்பெல்லையைக் குறைத்துவிடுகிறது. இந்தத் தராசில் புகையிலை வருமானங்கள் வெறும் பணமாற்றத்தைப் பிரதிபலிக்கிறதேயன்றிப் புதிய சொத்துக்களின் சிருஷ்டிப்பைப் பிரதிபலிக்கவில்லை. இவ்விரு தராசுகளுக்குமிடையே வித்தியாசத்தை வைத்திருப்பதன் மூலம், புகைத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்க நிதியுடன் எடுக்கப்பட வேண்டிய ஒவ்வொரு நடவடிக்கையையும் புறக்கணிப்பதற்கு, அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் உள்ள புகையிலை வருமானங்களின் தொழில்நுட்ப வகை நன்மைகளை ஓர் ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமாகக் கொள்ள முடியாதென்பதையும் நாம் மிகச் சுலபமாக உணர்ந்துகொள்ளலாம். ஏனென்றால், தேசிய வரவு செலவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள சமூகத்தின் பொருளாதாரம் மீது ஏற்படும் அத்தீய விளைவுகளைக் குறைக்கப் புகைத்தல் கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்வதே ஒரே வழியாகும்

## புகைத்தல் பழக்கம் குறைந்தால் சமூகத்தின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பயன்கள்

குறைந்த புகைத்தலினால் ஏற்படக்கூடிய நன்மைகளைப்பற்றிப் பேசும்போது, ஆரோக்கிய நன்மைகளே — அஃதாவது ஆரோக்கியத்தினதும் நல்வாழ்வினதும் மனித விழுமியங்கள் — முதன்மையானவையாகக் கருதப்பட வேண்டும். இந்த நன்மைகளைப் பணத்தின் அடிப்படையில் தெரிவிக்க முடியாது. குறைந்த புகைத்தல் சமூகத்தின் பொருளாதாரத்துக்கும் நன்மைகள் செய்யும். அந்நன்மைகளைப் பண உருவத்தில் தெரிவிக்கலாம். ஆதலால், சாத்தியமான நன்மைகளின் பொருளாதாரப் பெறுமதிக்கும் இந்த நன்மைகளைக் கொண்டுவரக்கூடிய இத்தகைய புகைத்தற் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் செலவுகளுக்குமிடையே பண அடிப்படையில் ஒப்பீடு செய்வது சாத்தியமாகும்.

புகைத்தற் குறைப்பின் பயனாக, மக்களின் உழைப்புத் திறன் எந்த அளவுக்கு அபிவிருத்தி அடையும் என்பதையும் புகைத்தல் தொடர்பான வியாதிகளின் காரணமாக ஏற்பட்ட அகால மரணங்கள், வேலைக்கு வராமை ஆகியன குறைந்ததனால் மொத்தத் தேசிய பொருளாக்கம் எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது என்பதையும் கணக்கிடுவதற்காக பிரிட்டனில் நடத்தப்பட்ட ஓர் ஆராய்ச்சி எடுத்துக்காட்டிய உண்மைகள் பின்வருமாறு:

புகைத்தல் 20 சதவிகிதம் குறைந்தால், 1981 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய பொருளாக்கத்தில் மேலும் 42 மில்லியன் சேரும்; 1991 ஆம் ஆண்டில் மேலும் 84 மில்லியன் பவுண் சேரும்; புகைத்தல் 40 சதவிகிதம் குறைந்தால் 1981 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய பொருளாக்கத்தில் மேலும் 84 மில்லியன் பவுணும், 1991 ஆம் ஆண்டில் மேலும் 168 மில்லியன் பவுணும் சேரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசீலனை

புகைப்பதனால் சமூகத்தின் பொருளாதாரம்மீது ஏற்படும் பிரதான விளைவுகள் படம்—1 இல் சித்திரிக்கப்பட்டுள்ளன. படத்தில் உள்ள இரு பெட்டிகளும் அதே சமூகத்தைப் பிரதிபலிக்கின்றன. இடப்பக்கத்தில் உள்ள பெட்டி புகைத்தல் நடைபெறவில்லை என்ற (அநுமான) விடயத்தைப் பிரதிபலிக்கிறது. வலப் பக்கத்திலுள்ள பெட்டி மக்களில் சில பகுதியினர் புகைக்கிறார் என்ற (உண்மையான) விடயத்தைப் பிரதிபலிக்கிறது.

இரு பெட்டிகளையும் ஒப்பிட்டு நோக்கினால், புகைத்தல் நடைபெறும் சமூகத்தில் மொத்தத் தேசிய பொருளாக்கம் குறைந்துவிடுகிறது என்பதை முதலில் காணலாம்.

இரு விடயங்களிலும் மொத்தத் தேசிய பொருளாக்கம் பிரதிபலிக்கும் சொத்துக்களில் ஒரு பகுதியை அடிப்படை ஆரோக்கியப் பராமரிப்பு, கல்வி போன்ற அவசியமான பொது நோக்கங்களுக்கு உபயோகிக்க வேண்டியிருக்கிறது. புகைக்கும் சமூகத்தில் இந்தத் தேவைகளுக்கு, புகைக்காத சமூகத்தில்விட அதிக பணச் செலவு ஏற்படுகிறது.

சக்திவாய்ந்த புகையிலைக் கம்பெனிகளுக்குக் கட்டுப்பாடில்லாத சுதந்திரம் நிலவ மூன்றாம் உலகில் உள்ள ஒப்பியல் ரீதியாகப் புதிய சந்தைகளில் புகையிலையின் உபயோகம் கட்டுப்பாடின்றி வளர அனுமதிக்கப்பட்டால், பாரதூரமான கஷ்டங்கள் தோன்றுவதற்குக் கதவொன்று திறக்கப்படக்கூடும் ... அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வருமானத்துக்கான ஒரு வழியாகப் புகையிலை உற்பத்தி மீது நம்பிக்கை வைக்கத் தொடங்குமானால், அந்நாட்டு மக்களின் ஆரோக்கியம் மட்டுமன்றி அவற்றின் பொருளாதாரமும் எதிர்மறையாகப் பாதிக்கப்படும்" என்று சிறப்புத் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் அஞ்சுகிறார்கள்.

## புகையிலைச் சந்தையைக் கட்டுப்படுத்தும் ஏழு புகைக்கும் சகோதரிகள்

புகையிலைச் சந்தை ஒரு சில நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சந்தையாக உள்ளது. அஃதாவது, உலகச் சந்தையில் மற்றும் பண்டங்களின் துறைகளில் மிகச் சிக்கலான முறையில் சம்பந்தம் கொண்டுள்ள மிகச் சிறு தொகையான கம்பெனிகளே இதில் ஆதிக்கம் செலுத்துகின்றன. எண்ணெய் உலகில் ஆதிக்கம் செலுத்தும் பிரதான நாடுகளுடன் ஒப்பிடத்தக்க ஏழு சகோதரிகளின் கூட்டு வருமாறு:

பிரிட்டிஷ் அமெரிக்கன் டுபாக்கோ (பட்)
இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி
பிலிப் மோரிஸ்
ஆர். ஜே. ரெயினோல்ட்ஸ்
கல்ப் அன்ட் வெஸ்டன்
ரொம்பிரான்ட் அன்ட் ரோதமன்ஸ் குரூப்
அமெரிக்கன் பிரான்ட்ஸ்

நவீன கைத்தொழில் தோன்றிறியதற்குப்பின, புகையிலையில் போட்டி குறுகிய காலம் மட்டுமே நீடித்தது. 1830—1911 இல் அது ஏகபோக உரிமைக் கட்டத்துக்கு வழிவிட்டது. பின்னர், ஒரு சில கம்பெனிகளே புகையிலைச் சந்தையைக் கட்டுப்படுத்தும் தற்போதைய அமைப்புத் தோன்றியது. தற்போதைய அமைப்பு சந்தை எல்லைகளை நிர்ணயித்து, விலைகளைக் குறிக்கும் தலைமைத்துவத்தில் ஈடுபட்டு, மூலதன உடைமையை ஒரு குழுவிலிருந்து இன்னொரு குழுவுக்கு மாற்றியது.

டிரான்ஸ் நேஷனல் டுபாக்கோ கொங்குளோமறேட் கம்பெனிகளின் (ரி. ரி. சி. சி. என அறியப்படுவது) உலக ஆதிக்கம் உலகெங்கும் மூலதனத்தைக் குவிப்பதிலும் பேரளவில் விளம்பரம் செய்வதிலும் செயலூக்கத்துடன் மற்றும் கைத்தொழில்களுக்குப் பண உதவி செய்து அவற்றைப் பொறுப்பேற்றுக் கொள்வதிலும் ஈடுபடுகிறது.

அக்கம்பெனிகள் உலகத்தில் சிகரெட்டுகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துகின்றன. அஃதாவது பதப்படுத்திய புகையிலை முழுவதிலும் ஏறக்குறைய 90 சதவிகிதத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. அவற்றின் நேரடி நடவடிக்கைகள் உலகின் மொத்த சிகரெட் உற்பத்தியில் 39 சதவிகிதத்துக்கு மேற்பட்ட அளவுடன் சம்பந்தப்படுகின்றன. எஞ்சியுள்ளதில் தனியார் கம்பெனிகள் 11 சதவிகிதத்தையும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அரசாங்க புகையிலை ஏகபோக உரிமைகள் 17 சதவிகிதத்தையும் அரசாங்க புகையிலைக் கூட்டுத்தாபனங்கள் 33 சதவிகிதத்தையும் கட்டுப்படுத்துகின்றன.

தனியுரிமை போட்டியை ஏற்படுத்துவதற்கு முசுமுச்சான இயக்கம் மேற்கொள்ளப்பட்டதற்கு ஓரடிப்படைக்காரணம் உண்டு. மிதமிஞ்சிய போட்டி தோன்றியதும், போட்டியாளர் குறிப்பிடும் குறைவான விலை பிரயோகிக்கும் நிர்ப்பந்தத்தால் இலாபங்கள் குறுகிவிடுகின்றன. மேலும் இத்தகைய தனியுரிமைகள் அவை தோற்றுவிக்கக்கூடிய பல்வேறு பொருளாதாரங்களுக்கு இலாபங்கள் அதிகரிக்க உதவின. முதலாவதாக 1890 ஆம் ஆண்டில் அமெரிக்கன் கம்பெனி உதயமாகியது. 1902 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அமெரிக்கன் டுபாக்கோ (பட்) என்னும் கம்பெனி தோன்றும்வரை இக்கம்பெனி தனது தனியுரிமை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது.

இலங்கைப் புகையிலைக் கம்பெனி பிரிட்டிஷ் அமெரிக்கன் டுபாக்கோ (பட்) என்னும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

## சிகரெட் இயந்திரங்கள்

1900 ஆம் ஆண்டில் பொன்ஸாக் சிகரெட் இயந்திரம் அமைக்கப்பட்டதனால் கைத்தொழில் பேரூக்கம் பெற்றது. இந்த இயந்திரம் நிமிடமொன்றுக்கு 500 சிகரெட்டுகளை உற்பத்தி செய்தது. இந்தத் தொழில்நுட்ப சாதனை, மொலின் இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டதுடன் 1976 ஆம் ஆண்டளவில் மேலும் விருத்தி அடைந்தது. மொலின் இயந்திரம் நிமிடமொன்றுக்கு 5000 சிகரெட்டுகளை உற்பத்தி செய்யும் சக்தி கொண்டதாகும். இந்த இயந்திரங்களின் உற்பத்தி, பிரிட்டிஷ் அமெரிக்கன் டுபாக்கோ கார்ப்பொரேஷன், இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ளது. இரு கம்பெனிகளும் இதில் 50 சதவிகிதப் பங்குகளைக் கொண்டுள்ளன. இன்று புகையிலைக் கைத்தொழில் உலகத்திலேயே ஆகக்கூடிய மூலதனம் செறிந்த கைத்தொழில்களில் ஒன்றாக விளங்குகிறது. இதில் பெற்றோலியம் வடிசாலைக் கைத்தொழில் மட்டுமே இதை மிஞ்சுவதாயுள்ளது.


## உலக விளம்பரங்கள்

விளம்பரஞ் செய்வதற்காகச் செலவிடப்படும் பணம் ரி. ரி. சி. சி. யின் பாதீட்டில் (வரவு செலவுத்திட்டம்) ஒரு பெருந்தொகையாக அமைந்துள்ளது. வருடந்தோறும் அவர்கள் ஏறக்குறைய 1.8 பில்லியன் அமெரிக்க டாலர்களை விளம்பரத்துக்காகச் செலவிடுகிறார்கள். புதிய பொருள் ஒன்று சந்தைக்கு அனுப்பப்படும்போது, அதன் விளம்பரச் செலவு சுமார் 50—60 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். குறிப்பாக மேற்பார்வையிடும் கட்டுப்பாடு அவ்வளவு பலமாயில்லாத வளாமுக நாடுகளில் இக்கம்பெனிகள் தங்களுடைய விளம்பரச் செலவுகளை மறைத்துவிடுகின்றன.

## புகையிலைப் பொருளாதாரம்

உலகப் புகையிலைப் பொருளாதாரம் ஒரு சில புகையிலைக் கம்பெனிகளின் ஆதிக்கத்திலேயே உருவாக்கி அமைக்கப்பட்டுள்ளது. உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்தல் ஆகிய சகல கட்டங்களிலும், அதிகாரத்தின் மேன்மையங்களை அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் தென்னாபிரிக்காவிலும் கொண்டுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில இராட்சத கூட்டுத்தாபனங்களே முடிவு செய்யும் கட்டுப்பாட்டதிகாரத்தைப் பிரயோகிக்கின்றன. புகையிலைக் கைத்தொழில், மற்றும் கைத்தொழில்களுக்குப் பண உதவி செய்து அவற்றின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்பதன் மூலம், நவீன வியாபாரத்தினதும் தோட்ட விவசாயத்தினதும் மையநிறமாலையாக இப்பொழுது காலை அகற்றி வைத்துக் கொண்டிருக்கிறது.

புகைத்தல் சமூகத்தின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் விதம்.




### அட்டவணை—8

### புகையிலையில் மொத்த வியாபாரமும் இலாபங்களும் இலங்கைப் புகையிலைக் கம்பெனியின் நிதிசார் தொழிற்பாடுகள்

*(மில்லியன் ரூபா கணக்கில்)*

| வருடம் | மொத்த வியாபாரம் | வரிவிதிப்புக்கு முன் இலாபம் | வரி விதிப்புக்குப் பின் இலாபம் |
|---|---|---|---|
| 1976 | 893.8 | 41.0 | 11.9 |
| 1977 | 1,059.4 | 42.4 | 13.1 |
| 1978 | 1,022.1 | 48.0 | 15.2 |
| 1979 | 1,963.4 | 47.1 | 24.4 |
| 1980 | 2,482.2 | 60.7 | 32.5 |
| 1981 | | 75.1 | 42.6 |

ஆதாரம்: இலங்கைப் புகையிலைக் கம்பெனி—வருடாந்த அறிக்கை 1977—1981.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1981/82-ம் ஆண்டு பெரும் போக கால கட்டத்தின் போது மகாவலி குடியிருப்புப் பகுதிகளில் ஏற்பட்ட நீர்ப் பற்றுக்குறையில் இருந்து பெறப்பட்ட பாடங்கள்.

மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், அகழிகள், கால்வாய்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதன் பிரதான நோக்கம் அப்பகுதிக் குடியேற்றவாசிகளுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதேயாகும். எனினும் குடியேற்றத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே நீர்ப் பங்கீடும், பண்ணை நீர் முகாமைத்துவமும் பிரச்சினைக்குரிய விவகாரங்களாக இருந்துவந்துள்ளன. பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இரண்டுக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்கப்படும் எனக் குடியேற்றவாசிகளுக்கு உறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் நீர்த்தேக்கங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு நீரே இருந்த காரணத்தால் அவர்கள் சுதந்திரமாக நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்துவதற்கோ அல்லது தாம் விரும்பிய பயிர் வகைகளைச் செய்கை பண்ணுவதற்கோ அனுமதிக்கப்படவில்லை. செய்கைபண்ணப்பட வேண்டிய பயிர்வகைகளைப்பற்றியும் பயன்படுத்தக்கூடிய நீரின் அளவு பற்றியும் ஸ்திரமான தீர்மானங்கள் நிர்வாகத்தினரால் எடுக்கப்பட்டன. வழக்கமாக அளிக்கப்படும் நீர் பற்றுக்குறையாக இருந்த காரணத்தால் ஒவ்வொரு சிறு போகத்தின்போதும் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவதில் ஊக்கமிழந்தனர். மகாவலியின் 'எச்' பகுதியில் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் நெற்செய்கைக்குத் தடை விதிக்கப்பட்டது. நீர்த்தேக்கங்களில் குறிப்பிட்ட அளவு நீரே இருந்த காரணத்தால் உப உணவுப் பொருட் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட விவசாயிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். மறுபுறத்தில் நீர் விநியோகத்தைப் பொறுத்தவரையில் குடியேற்றவாசிகளுக்குப் பெரும்போகம் மேலும் சாதகமாக இருந்தது. 1976-ம் ஆண்டில் இருந்து நெற்செய்கை முறைகள் தொடர்ச்சியாக முன்னேறிக் கொண்டிருந்தன. பருவப் பெயர்ச்சி மழை பொய்க்காது என்ற நிலையிலும் நீர்ப்பாசன வசதிகள் குறைந்து போகாதென்ற உறுதிப்பாடிருந்த போதுமே இவ்வாறான முன்னேற்றங்கள் காணப்பட்டன. மகாவலி திசை திரும்பிய காரணத்தால் 1976/77-ம் ஆண்டுகளிலிருந்து 'எச்' பகுதியில் விளைச்சல் அதிகரித்துக்கொண்டு சென்றது.

கடந்த காலத்தில் பெரும்போக நெற்செய்கை திருப்திகரமாக இருந்தது. இதனால் 1981/82-ம் ஆண்டு பெரும்போகமும் (கடைசி) பயிர்ச்செய்கை முறையைப் பொறுத்தவரையில் திருப்திகரமாக முன்னேறியது. 'எச்' பகுதியின் புதிய பிரதேசங்கள் பலவற்றில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் நீர்த்தேக்கப் பகுதிகளிலும் குடியேற்றப் பகுதிகளிலும் வழமையான மழைவீழ்ச்சி அருகியதால் 1982-ம் ஆண்டின் ஜனவரி இறுதிப் பகுதியில் கலாவேவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறையத் தொடங்கியது. இந்த வருடத்துப் பெரும்போகத்தின்போது கலாவேவ நீர்த்தேக்கம் அதன் பூரண கொள்ளளவில் பத்தில் ஒன்றை மட்டுமே கொண்டிருந்தது. அத்துடன் நாளாந்தம் மூன்று அங்குலங்களால் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்து வந்தது. இக்கட்டத்தில் குடியேற்றவாசிகள் தமது நெற்பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். பயிர்ச் செய்கைக் குழுக் கூட்டங்களில் நிர்வாகம் இணங்கியதைப்போன்று மார்ச் மாதத்தின் நடுப்பகுதிவரை நீர் விநியோகம் தொடர்ந்து அளிக்கப்பட்டிருந்தால் மகாவலிக் குடியேற்றத் திட்டங்களின் கலாவேவாப் பிரதேசத்தில் வரட்சியால் நாசமாகியதாகக் குறிப்பிடப்பட்ட பயிர்ச்செய்கையில் 90 சதவீதத்தைப் பாதுகாத்திருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக உத்தியோகபூர்வ மதிப்பீடுகளுக்கு இணங்க 1982 ஜனவரி இறுதிப் பகுதி வரையுமே நீர் கிடைக்கக் கூடியதாக இருந்தது.

கலாவேவா நீர்த்தேக்க வரட்சி பற்றி அறிவிக்கப்பட்டதுமே 1982 ஜனவரி மாத பிற்காலாண்டுப் பகுதியில் நீர்த்தேவையையொட்டிப் பல மோதல்களும் பிரச்சினைகளும் எழுந்தன. பிரதான கால்வாய்கள், மற்றும் விநியோகக் கால்வாய்களின் முற்பகுதியில் இருக்கும் குடியேற்றவாசிகளுக்கும், பிற்பகுதிகளில் இருக்கும் குடியேற்றவாசிகளுக்கும் இடையிலான மோதல்களையும் சிக்கல்களையும் கட்டுப்படுத்துவது நிர்வாகத்துக்குக் கஷ்டமாக இருந்தது.

வெற்றிகரமாகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட பகுதிகளுக்காவது வழங்க, இருக்கக்கூடிய நீரைச் சேமிக்கவே இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது. இதனால் நீர் விநியோகம் நிறுத்தப்பட்ட பகுதிகளில் குறிப்பாக கலாவேவா கல்னேவா நகரப்புறங்களில் பெரும் கொந்தளிப்புகள் ஏற்பட்டன. பிரதான நீர்க்கால்வாய்களின் கதவுகளைத் திறப்பதில் வெற்றி காண்பதற்கு முன்னால் உயர் அரசியல் அதிகாரிகளின் கவனத்துக்கு இப்பிரச்சினையைக் கொண்டுசெல்ல வேண்டியிருந்தது. எனினும் குறுகிய காலத்துள் கலாவேவா நீர்த்தேக்க நீர்மட்டம் குறைந்ததனால் நீர்ப்பற்றுக்குறைப் பிரச்சினை மேலும் மோசமடைந்தது.

நீர் விநியோகக் கால்வாய்களின் கதவுகளுக்குச் சமீபமாக உள்ள பிரதான கால்வாய்களை வழிமறித்து இருக்கக்கூடிய நீரினைப் பெறக் கால்வாய்களின் முற்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருப்போர் முயற்சிகளை எடுத்தனர். நீர் விநியோகக் கால்வாய்களின் இறுதிப் பகுதிகளில் இருக்கும் குடியேற்றவாசிகள் இதனை எதிர்ப்பதற்கு ஒன்றிணைந்தனர். கலாவேவா நீர்த்தேக்கத்தின் பலாத்துவேவாப் பகுதியில் உள்ள பிரதான கால்வாயினால் நலன்பெற்ற சிலகுடியேற்ற வாசிகள் கூட்டாகச் சேர்ந்து மணற்பைகளைப் போட்டு கலாவேவாப் பகுதிக்கு நீர் செல்லாமல் தடுப்பதற்காக அணையொன்றைக் கட்டினர். கலாவேவா இடதுகரைக் கால்வாய்க்கு அண்மித்ததாக இருக்கும் குடியேற்ற வாசிகள் குழுவொன்று கலாவேவ நீர்த்தேக்க மத்திக்கும் பிரதான கதவுகளுக்குமிடையில் சேறு அகற்றுவதில் ஈடுபட்டது. களன்குட்டிய உட்பட மீகல்லாவ (எச் 2), கல்னேவா (எச் 1) ஆகிய பகுதிகளிலுள்ள நீர் விநியோகக் கால்வாய்களின் கீழ்ப்பகுதிகளில் இருக்கும் பெரும்பாலான குடியேற்றவாசிகள் கிராமிய மட்டங்களில் தத்தமது சொந்தக் குழுக்களை உருவாக்கினர். தமது கோரிக்கைகளைக் கூட்டாக வற்புறுத்துவதற்காக இந்தக் குழுக்கள் எல்லாம் சேர்ந்து தமது சொந்தப் பிரதேச ஸ்தாபனங்களை அமைக்க முனைந்தன. எனினும் பிரதான கால்வாயின் மேற்குப் பகுதியில் இருக்கும் குடியேற்றவாசிகளின் குழுவொன்று இவர்களுடன் ஒத்துழைக்கவில்லை. மீதியாக இருக்கக்கூடிய நீரிலிருந்து மேற்பகுதிக் குடியேற்றவாசிகள் பாசன வசதி பெற முடிந்ததே இதன் காரணமாகும். நீர்ப்பாசனக் கால்வாய்கள், மற்றும் அருகே இருக்கும் சிறிய குளங்கள் ஆகியவற்றிலிருந்து பாசன நீர் பெறும் பல வழிகளில் பலர் ஈடுபட்டனர். நீரிறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி நீர் பெற்றனர். இக்காலத்தின்போது இரண்டு அங்குல நீரிறைக்கும் இயந்திரத்தைப் பாவித்து நீர் வழங்க மணித்தியாலமொன்றுக்கு 40, 50 ரூபாவரை நீரிறைக்கும் இயந்திர உரிமையாளர்கள் அறவிட்டனர்.

முன்பெல்லாம் வரட்சியை ஓர் இயற்கை நிகழ்வென கலாவேவாக் குடியேற்றப் பகுதிவாசிகளில் பெரும்பாலோர் கருதி வந்தனர். ஆனால் அதே குடியேற்றவாசிகளே 1981/82-ம் ஆண்டு கால பெரும்போகத்தில் ஏற்பட்ட வரட்சி நிலை, வெளியார் துணைத்தன அதிகார சக்திகள் நீரினைத் தவறாக நிர்வகித்ததால் ஏற்பட்ட ஒன்றெனக் கருதினர். இப்பெரும் நீர்ப்பாசனத் திட்டத்தில் அரசியலுக்கும் பாசன நீருக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருப்பதாக வலுவான அபிப்பிராயம் இருப்பதுபோல தோன்றியது. மகாவலித் திட்டத்தின் 'எச்' பகுதியில் கிட்டத்தட்ட 40 சதவீதம் வரட்சியால் நாசமாகியது.

மகாவலியின் 'எச்' பகுதியில் ராஜாங்கனை, காகம — கட்டியாவ ஆகிய கலாஓயா வடிநிலத்தில் உள்ளவை உட்பட பயிர்செய்யக் கூடிய பரப்புத் தொகை 95,000 ஏக்கர்களாகும். இதில் 38,160 ஏக்கர்கள் வரட்சியால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இவற்றில் 5380 ஏக்கர்களில் ஓரளவு பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும். இன்னொரு வார்த்தையில் சொல்வதானால் 'எச்' பகுதியில் 52,300 ஏக்கர்கள் அதாவது 34 சதவீத பரப்பளவு வரட்சியால் பாதிப்படைந்ததை. மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி மீகல்லாவ (எச் 2) ஆகும். இங்கு 80 சதவீதம்வரை பயிர்ச்செய்கை நாசமடைந்ததாக நம்பப்படுகிறது.

## எதிர்காலத் தாக்கம்

1981/82பெரும்போகத்தின்போது மகாவலி குடியேற்றப் பிரதேசங்களில் ஏற்பட்ட பாசன நீர்ப்பற்றுக்குறை இத்திட்டத்தின் முன்னேற்றம், அபிவிருத்தி ஆகியவற்றில் ஒரு முக்கிய கட்டமெனக் கருதமுடியும். ஏனெனில் எதிர்காலப் பயிர்ச்செய்கை நடைமுறை குடியேற்றத் திட்டக் கொள்கை ஆகியவற்றில் தூரதிருஷ்டிமிக்க தாக்கத்தை இது ஏற்படுத்தக் கூடிய ஒன்று.

(அ) கூட்டு நடவடிக்கைகளின் தேவைகளை மதிப்பிட ஒரு சந்தர்ப்பத்தை இந்த வரட்சி குடியேற்ற வாசிகளுக்கு அளித்தது. பயிர்ச்செய்கைப் பிரச்சினை தத்தமது காணிகளின் எல்லைகளுக்குள் மட்டும் கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல என்பதைப் பலர் உணரத் தொடங்கினர். பெரும்பாலானகுக்கிராமங்களில் இரண்டே நாள் குறுகியகால இடைவெளிக்குள் அவர்கள் தமது சொந்தக் குழுக்களை அமைத்தனர்.

(ஆ) குடியேற்றவாசிகள் பயிர் வகைக்கால அட்டவணைகளைத் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் மேற்கொள்ள முயன்றனர் இதனால் நிர்வாகம் சிறந்த பயிர்ச்செய்கைக்கால அட்டவணைகளையும் செய்கை வகைகளையும் அறிமுகப்படுத்துவதில் பெரும் கஷ்டங்களைச் சந்தித்தது. உதாரணமாக உபஉணவுப் பயிர்ச்செய்கைகளுக்குப் பதிலாக சிறுபோகத்தின்போது நெற்செய்கையை மேற்கொள்வதும் பெரும்போகத்தின்போது குறுகிய கால நெல் இனங்களைப் பயிர் செய்வதும் அதிகரிக்கத் தொடங்கியது

(இ) காத்திரமான தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கத் தவறினால் போஷாக்கின்மை நோய், பொதுவான அதிருப்தி, கடன்பளு ஆகியவை குறிப்பாகக் குறைந்த வருமானமுள்ள குடியேற்ற வாசிகள் மத்தியில் அதிகரிக்கும்.

(ஈ) மூலதனப் பற்றுக்குறை, குறைந்த வருமானம், நிச்சயமற்ற தன்மை ஆகியவை நிலவுவதால் குத்தகை, பங்குப் பயிர்ச்செய்கை ஆகியவை அடுத்த சிறுபோகத்தின்போது அதிகரிக்க வாய்ப்புள்ளது.

(உ) கடன்களை மீளப் பெறுவது பாரதூரமான பிரச்சினையாக இருக்கும். இதனால் கடன் வழங்கல் மீண்டும் பாதிப்புறும்.

(ஊ) பாசன நீரின் பெறுமதியையும் முக்கியத்துவத்தையும் நீரினைப் பயன்படுத்தும் நடைமுறைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவைகளையும் குடியேற்ற வாசிகள் உணரத் தலைப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குடியேற்ற வாசிகளின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று நீர் நிர்வாகத்தை அபிவிருத்தி செய்ய முகாமைத்துவம் முன்வரலாம்.

(எ) மேலதிக வருமான வாய்ப்புக்கள் இன்றி குறிப்பாகப் பயிர்ச்செய்கை பண்ணப்படாத காலங்களில் குறைந்த வருமானம் பெறும் குடியேற்ற வாசிகளின் பெரும்பாலோரை ஒழுங்காகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறு எதிர்பார்க்க முடியாது. வருமான வசதியற்ற காலங்களில் குடும்ப மட்டத்திலான கைத்தொழில்களையும் மற்றும் சுயமுயற்சி வேலை வாய்ப்புகளையும் ஊக்குவிப்பது அத்தியாவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுசேர்மான, டி. என். ஏ. — 'பரம்பரையலகுகள் இணைப்பு முறை': பேராற்றல் வாய்ந்த ஒரு புதிய தொழில் நுட்பவியல்

கடந்த தசாப்தத்தில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் ஒரு புதிய தொழில்நுட்பவியலுக்கு அடிகோலியுள்ளன. இத்தொழில்நுட்பவியல் எத்தனையோ வழிகளில். உயிரியலின் மூலார்த்தத்தில், மனித உயிர்மீது ஓர் உடனடியான தாக்கத்தை ஏற்படுத்துமென்பது திண்ணம். 1980 களில் இது பேராற்றல்வாய்ந்த ஒரு தொழில்நுட்பவியலாக விளங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சந்ததிச் சுவடுகளைக் குறிப்பிட்டவகையில் ஏற்பாடு செய்தலைச் சுற்றியுள்ள புதிய தொழில்நுட்பவியலே இது. நூற்றுண்டின் எஞ்சிய பகுதியில் அது அடையும் வளர்ச்சி 1970 களின் நடுப்பகுதியிலிருந்து பொதுவாக மின்னணுவியலும் 1960 களிலிருந்து (இலத்திரனியல்) கொண்டிருந்த அவ்வளவு பொருளாதார முக்கியத்துவத்தைக் கொண்டிருக்குமென்பது நிச்சயம்.

பல்லாயிரம் ஆண்டுகளாக மனித இனம் விரும்பத்தக்க பொருள்களை (உதாரணமாக மதுசாரம்) உண்டாக்குவதற்காக நுண்அங்கிகளை உபயோகித்து வந்துள்ளது. எனினும், கொடுத்த ஒரு வேலையை— உதாரணமாக மதுசார உற்பத்தி— செய்யக்கூடிய நுண்ணங்கிகளை இயற்கையிலிருந்து தெரிவு செய்வதற்குப் பதிலாக, புதிய தொழில்நுட்பவியல் நுண்ணங்கிகளுக்குள் புதிய சந்ததிச் சுவடுகளை (பரம்பரை அலகுகள்)ப் புகுத்தி, நுண்ணங்கிகளை எந்த இயல்பையும் கொடுக்கச் செய்துவிடும் தங்களுடைய நுண்ணங்கிகள் மூலம் தொழிற்படும் இந்தப் புதிய சந்ததிச் சுவடுகள் (பரம்பரை அலகுகள்) பின்னர் விரும்பத்தக்க கூட்டுப் பொருள்களை உண்டாக்கும்.

1973 ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டான்லி கோஹனும் ஹெர்பர்ட் போயரும் உயிரின் பிறப்புமுறை அடிப்படையைக் குறிப்பிட்ட வகையில் ஏற்படுத்துவதற்காக ஒரு புதிய சக்தி வாய்ந்த உத்தியைக் கண்டுபிடித்தனர். இந்தத் தொழில்நுட்பவியலே மறுசேர்மான டி. என். ஏ. (டீயொட்சி இறைபோசு நியூக்கினிக் அமிலம்) அல்லது பரம்பரை அலகு இணைப்பு என வழங்குகிறது. இந்தத் தொழில் நுட்பமுறைகளை (உத்திகள்) உபயோகித்து, ஒரு குறிப்பிட்ட அங்கியிலிருந்து டி. என். எ. யின் திட்டமான பிரிவுகளை வெட்டியெடுத்து, பதியும் நாடாக்கள் இணைக்கப்படும்விதத்தில், இதே போல இன்னோர் அங்கிக்குள் புகுத்துவது இப்பொழுது சாத்தியம். ஆதலால், இது கிட்டத்தட்ட எந்தக் குறிப்பிட்ட திசையிலும் உயிர்ப் பொருளின் பண்பியல்புகளை மாற்றுவதற்குரிய ஓர் உத்தியாகின்றது. நுண்ணங்கிகளை மாற்றுவதற்காக அவற்றிற்குள் வெட்டி ஒட்டப்படும் பரம்பரை அலகுகள் (சந்ததிச் சுவடுகள்) தாவரங்களிலிருந்தோ, விலங்குகளிலிருந்தோ அல்லது மனிதர்களிலிருந்தோ வரலாம். ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய ஆராய்ச்சி நோக்கங்களுக்காக இந்தத் தொழில்நுட்ப முறைகளை உபயோகித்து அநேக புதிய கூட்டுப் பொருள்களை உண்டாக்கி உள்ளனர். இதேவேளையில் வர்த்தகக் கம்பெனிகள் மனிதப் புரதம் (இன்டர்ஃபெரோன் எனப்படும் இப்புரதப் பொருள் மனித உடலில் இயற்கையாகவே உண்டாகிறது. இது அநேக வைரசுத் தொற்றுகளுக்கு எதிராகச் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறது), கைத்தொழில் கரைப்பான்கள், வளர்ச்சி ஓமோன்கள் (தூண்டும் உட் சுரப்புகள்) போன்ற நானாவிதமான பொருள்களை உற்பத்தி செய்துள்ளன.

இப்புதிய உற்பத்திப் பொருள்களுக்கு அமெரிக்காவில் ஆக்க உரிமைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஏனென்றால், 1980 ஆம் ஆண்டில் அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் (சுப்றீம் கோர்ட்) "மனிதனால் செய்யப்பட்ட உயிருள்ள நுண்ணங்கிகளுக்கு ஆக்க உரிமைப் பத்திரங்களைப் பெறமுடியும் என்று தெரிவித்து, இல்லினோயிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவரும் இந்தியாவில் பிறந்தவருமான உயிரியலறிஞர் ஆனந்த சக்கரவர்த்திக்கு முதலாவது ஆக்க உரிமைப் பத்திரத்தை வழங்கியது. இதன் விளைவாக இத்துறையில் வர்த்தக சிரத்தை பெருமளவுக்கு ஏற்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பவியல் சம்பந்தமாக முதலில் வர்த்தக அக்கறை துரிதமாக ஏற்படவில்லை என்றாலும், பின்னர் அது உத்வேகம் அடைந்தது. இதனால் 1981 ஆம் ஆண்டளவில் பரம்பரை அலகுகளின் இணைப்பில் சம்பந்தப்பட்ட கம்பெனிகளிடம் மக்கள் ஆகக்கூடிய அளவில் நாடிய கையிருப்புகள் இருந்தன. இது சம்பந்தமாக அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிகளாவன:

28 வயதான முதலீட்டு வங்கியாளர் ஒருவராலும், பரம்பரையலகுகள் இணைப்புமுறையின் கூட்டுக் கண்டுபிடிப்பாளரான ஹெர்பெர்ட் போயர் அவர்களாலும் 1976 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஜெனன்டெக் என்னும் கம்பெனி. மற்றும் கம்பெனிகளில் 'செட்டஸ்' (இதுவும் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கம்பெனியாகும்), சுவிட்ஸர்லாந்தில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்ட 'பயோஜென்' (இது அமெரிக்க நலன்களையும் ஐரோப்பிய நலன்களையும் கொண்ட ஒரு கம்பெனியாகும்) ஆகியனவும் அடங்கும். எனினும், 1981 ஆம் ஆண்டளவில் பிரபல இரசாயன உற்பத்தியாளர்களில் பெரும்பாலோர் பிறப்புமுறை பொறியியலில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர் .

பொருளியல் நோக்கு. மே 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் சிந்தனையைக் கவர்ந்திருக்கும் மனிதனால் உருவாக்கப்பட்ட மூன்று பொருள்கள் இன்சுலின், இன்டர் ஃபெரோன், வளர்ச்சி ஓமோன்கள் ஆகியனவாகும். வைரசுத் தொற்றுகளுக்கு எதிராக உடலின் இயற்கை ஆயுதமான இந்த இன்டர் ஃபெரோன் (புரதம்) புற்றுநோய்க்கு எதிராகவும் பயனுள்ளதாயிருப்பதாக நம்பப்படுகிறது. இந்த மனிதப் புரதத்தை (இன்டர் ஃபெரோன்) உற்பத்தி செய்வதற்காக, பரம்பரையலகுகள் இணைப்பு உத்திகள் ஜெனன்டெக் கம்பெனியால் உபயோகிக்கப்பட்டுள்ளன. நீரிழிவுக்கு எதிராக உபயோகிக்கப்படும் இன்சுலின் வழக்கமாகப் பன்றிகளிலிருந்தும் ஆடு, மாடுகளிலிருந்தும் பெறப்படுகிறது. ஆனால் இதன் விநியோக அளவு வரையறுக்கப்பட்டதாயுள்ளது. அத்துடன் பன்றிகளிலிருந்தும் ஆடு, மாடுகளிலிருந்தும் பெறப்படும் இன்சுலின் மனித இன்சுலினிலிருந்து சற்றே மாறுபடுவதாகவுமுள்ளது. மேலும், சில சமயங்களில் நோயாளிகளுக்கு விரும்பத்தகாத பக்கவிளைவுகளையும் ஏற்படுத்திவிடுகிறது. ஜெனன்டெக் கம்பெனி மனித இன்சுலினையும் வர்த்தக முறையில் உற்பத்தி செய்துள்ளது. முன்பு பிரேதங்களிலிருந்து பெறப்பட்டுவந்த மனித வளர்ச்சிக்குரிய ஓமோன்களின் விஷயத்திலும் இது போன்ற பெறுபேறுகள் சாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வைத்தியப் பிரயோகங்கள் ஒருபுறமிருக்க, மறுசேர்மான டி. என். ஏ. யையும் உபயோகிக்கவல்ல வர்த்தக முக்கியத்துவமுள்ள பொருள்கள் பல உள்ளன. இவற்றில் பாம்பரைத் துறைகளும் அடங்கும். இத்துறைகளில் நுண்ணங்கிகள், நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் (அன்டிபயோடிக் மருந்துகள்) எதனோல் (ஓர் எரிபொருள் என்ற முறையில் இதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது) ஆகியவற்றை உற்பத்தி செய்தல் போன்ற பங்களிப்புச் செய்துள்ளன.' தாவரங்களின் பிறப்புரிமையியலுக்குரிய மூலப்பொருள்களை வேறுபடுத்தவும் பரம்பரையலகுகள் இணைப்பு உத்தியை உபயோகிக்கலாம். இவ் விஷயத்தில் தாவரங்கள் அதிகம் வளைந்து கொடுக்கக்கூடியன. ஏனென்றால், தனியொரு கலத்திலிருந்து ஒரு முழுத்தாபனத்தையும் இனப்பெருக்கம் செய்ய முடியும். தகுந்த பரம்பரையலகுகள் இணைப்பு உத்திகளைக் கொண்டு, சரியான பரம்பரையலகுகளைப் புகுத்துவதன் மூலம் அதிக விளைச்சல், தடித்த காம்புகள், நோய் எதிர்ப்பு, நைதரசனை நிலைப்படுத்தும் ஆற்றல் போன்ற விசேஷ குணாம்சங்களைத் தாவரங்களுக்குள் நுழைப்பது சாத்தியமாகும்.

'பரம்பரையலகு இயந்திரங்கள்' அமைப்பு போன்ற புதிய உற்பத்திப் புதுமைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த இயந்திரத்தை அமைத்துள்ள கனடாவைச் சேர்ந்த கம்பெனியொன்று, இரசாயனவியலாளர்கள் செய்து முடிக்கப் பல மாதங்கள் பிடிக்கக்கூடிய வேலைகளை இது ஒருசில மணித்தியாலயத்தில் செய்து முடித்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கூறியுள்ளது. இந்தப் பரம்பரையலகு இயந்திரங்களில், விரும்பப்படும் குறிப்பிட்ட இரசாயனத் தொடர் கிரியை சிருஷ்டிக்கப்படுவதற்காக, சரியான அளவில் சரியான நேரத்தில் இரசாயனச் பொருள்கள் புகுத்தப்படுவதை நுண்கணனிகள் கட்டுப்படுத்துகின்றன. அமைக்கப்பட்டுள்ள புதிய கம்பெனிகள் பெருமளவு வர்த்தக அக்கறையை உண்டாக்கியுள்ளன. இவ்விதமாக ஜெனன்டெக், செட்டஸ், பயோஜென், ஜெனக்ஸ் ஆகிய கம்பெனிகள் 1979 ஆம் ஆண்டு முடிவில் 225 மில்லியன் டாலருக்கு மேற்பட்ட தாள்நாணய மதிப்பைக் கொண்டிருந்தன. இது 1980 மே மாதத்தில் இரட்டித்து, 500 மில்லியன் டாலரை எட்டிவிட்டது. இந்தப் புதிய சிறிய கம்பெனிகளில் முதலீடு செய்வோரில் பெரிய பல்தேசிய ஸ்தாபனங்களும் அடங்கியிருந்தன. இக் கம்பனிகளின் பங்குகளில் சில பொதுமக்களுக்கு விற்கப்பட்டபோது, அவற்றிற்குப் பெருத்த கிராக்கி இருந்தது. இவ்விதம் 1980 அக்டோபர் மாதத்தில் ஜெனன்டெக் கம்பெனி பங்கொன்று 35 டாலர் என்ற ஆரம்ப விலை வைத்துத் தனது பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்றபோது, 20 நிமிடங்களுக்குள் பங்கு விலைகள் 69 டாலருக்கு ஏறிவிட்டன. 1979 ஆம் ஆண்டில் ஜெனன்டெக் கம்பெனி, தனியொரு பொருளைத்தானும் விற்பனைக்கு வைத்திராத நிலையில், 529 மில்யன் டாலர் தாள் நாணயப் பெறுமதியைக் கொண்டிருந்தது. இது மிகப்பெரிய வர்த்தகக் கம்பெனியான 'டு பொன்ட்'டின் பெறுமதியில் கிட்டத்தட்ட பத்தில் ஒரு பங்காகும்.

புதுமையான மாறுதல்களைச் செய்யும் இந்தத் தொழில்நுட்பவியலுடன் ஆரம்பமான கம்பெனிகள் சிறிய நிறுவனங்களாகும். ஒருசிலரே அதில் சம்பந்தப்பட்டிருந்தனர். (ஆனால், பின்னர் பெரிய கம்பெனிகள் இத்துறைக்குள் வந்துவிட்டன.) உயர் தொழில்நுட்பவியல் துறைகளில் பொதுவாக இத்தகைய அதிசய சம்பவங்கள் நிகழ்வதுண்டு. கலிபோர்னியாவின் 'சிலிக்கோன் பள்ளத்தாக்கு' எனப்படும் பகுதியில் சிறிய கம்பெனிகளால் 1970 களில் உண்டாக்கப்பட்ட நுண்கணனிகளும் கணனிபற்றிய தொழில்நுட்பவியலும் இதற்கு ஒரு தெளிவான முன்னோடியாகும். இங்கே நூற்றுக்கணக்கான சிறிய உற்பத்தி நிலையங்கள் தோன்றி வளர்ந்தன. இவற்றின் உற்பத்திப் பொருள்கள் புதிதாகத் தோன்றிவரும் தொழில்நுட்பவியல் மாடங்களில் வைப்பதற்கு ஏற்றனவாயிருந்தன.

மூன்றாம் உலகத்தைச் சேர்ந்த அநேக நாடுகள் பரம்பரையாகத் தொழில்நுட்பவியலைப் பின்பற்றி நடப்பனவாகவே இருந்து வந்துள்ளன. இதற்கு முக்கிய காரணம், பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கனரக கைத்தொழில் வகையில் கைத்தொழில் மயமாவதற்குத் தேவைப்பட்ட மூலதன சாதனங்களின் விலைகள் வெகு உயர்ந்திருந்தன. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இக்கைத்தொழில்களில் சில சிக்கனமாக நடைபெற்று வராததன் விளைவாக, தொழிலாளர்கள் இப்பொழுது ஓரளவுக்குப் பிரித்தமைக்கப்பட்டு வருகிறார்கள். அத்துடன், குறிப்பாக, மௌனமாக வேலை செய்யும் தொழிலாளர்களைக் கொண்ட ரிஸர்வ் பட்டாளம் ஒன்றை வழங்கும் அடக்குமுறை ஆட்சி நடைபெறும் மூன்றாம் உலக நாடுகளில் இவை மீண்டும் அமைக்கப்பட்டுவருகின்றன.

(23ம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள உள்நாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் சில அம்சங்கள்

● உபாலி விதானபத்திரன

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டதற்குப் பின் கடந்த இரு வருடங்களில் அவற்றின் தொகையிலும் மொத்தச் சொத்துக்களிலும் பரிப்புகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கொண்டு நிதானிக்குமிடத்து, வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையக் கருதுகோள் இலங்கையில் மதிக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதாகத் தோன்றுகிறது. மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதியைச் சேர்ந்த உபாலி விதானபத்திரான இந்தச் சர்வதேச வங்கித் தொழில் கருதுகோளை அதன் பிரதேசக் கோணத்தில் வைத்து ஆராய்ந்து, தற்போது நடைபெறும் வெளிக்கரை வியாபாரத்தில் பெரும் பகுதி பிரசித்திபெற்ற சர்வதேச வங்கிகளை மையமாகக் கொண்டே நடைபெறுவதாக ஊர்ஜிதமாகாத புள்ளி விவரங்கள் சுட்டுவதாகக் குறிப்பிடுகிருர். ஒப்பீட்டளவில் தகவல்கள் கைக்கு எட்டாததன் காரணமாக வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் நிலையங்களின் செயற்பாட்டைக் குறித்து இதைவிடத் திட்டமான ஒரு மதிப்பாய்வு சாத்தியமில்லை.

கொழும்பை ஒரு சர்வதேச நிதி நிலையமாக விருத்தி செய்யும் நோக்கத்துடன் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் 1979 மே 2ஆம் திகதியன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களை அமைப்பதற்காக இத்திட்டத்தில் பங்குபற்றவிரும்பும் சகல வர்த்தக வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கியால் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

பூரண வசதிகளைக் கொண்ட வெளிக்கரை வங்கித் தொழில் மையமொன்றை அபிவிருத்தி செய்வதற்கு இந்த நிலையங்கள் ஒரு முன்னேடியாகக் கருதப்பட்டன. 1981ஆம் ஆண்டு முடிவுக்குள், கொழும்பில் செயற்படும் 24 வர்த்தக வங்கிகளில் 23 வரை அதை அனுசரிக்கத் தொடங்கிவிட்டன (அட்டவணை—1 ஐப் பார்க்கவும்). இதில் நான்கு உள்நாட்டு வர்த்தக வங்கிகளான மக்கள் வங்கி, இலங்கை வங்கி, கொமர்சியல் வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி ஆகியனவும் அடங்கும். இவை தங்களுடைய சர்வதேசப் பகுதிகளில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களை ஸ்தாபிப்பதன் மூலம் இந்த இலாபகரமான வர்த்தகத்தில் இறங்கின. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தில் ஸ்தாபிதமான அந்நிய வங்கிகளில் புதியன பழையன ஆகிய இருவகையின் கிளைகளுக்கு அருகருகாகச் சுதேச உள்நாட்டு வங்கிகள் பங்குபற்றியதனுல் இவ்வர்த்தகத்தில் போட்டியிடும் தன்மை தீவிரமடைந்தது.

வெளிக்கரை வங்கித் தொழில் நிலையங்களை உலகளாவிய அடிப்படையில் நோக்குமிடத்து, அவை வெவ்வேறு பெயர்களில் அறியப்படுகின்றன. அஃதாவது, பிலிப்பைன்ஸில் வெளிக்கரை வங்கித் தொழில் நிலையங்களென்றும், சிங்கப்பூரில் ஆசிய நாணய நிலையங்கள் என்றும், பஹ்ரெயினில் கடல் கடந்த வங்கித் தொழில் நிலையங்களென்றும் இலங்கையில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் என்றும், ஐக்கிய அரபு எமிரேட்டுகளில் கட்டுப்படுத்திய லைசென்ஸ் வங்கிகள் என்றும் மற்றும் இது போன்ற பெயர்களாலும் அறியப்படுகின்றன. (1) பூரண வசதிகளைக் கொண்ட வெளிக்கரை வங்கிகளின் கட்டத்தை அடைய இலங்கையில் உள்ள வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் மேலும் ஒரு சில படிகள் முன்னேற வேண்டும். (சில சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் வேலைக் கடமைகள், வேற்றிடங்களில் அமைந்துள்ள பெரிய வெளிக்கரை வங்கிகளுக்கு வைப்புகளை மாற்றும் ஓர் இடை நிலை வங்கியின் கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன). நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை ஓர் அனுகூலமான திசையில் செலுத்துவதற்காக, சில குறிப்பிட்ட பகுதிகளில் இந்த நிலையங்களின் செயற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(1) விக்கிரமசிங்க விமால். "இலங்கையில் ஏற்றுமதி முறையாக்க வலயங்கள்—ஒரு நாணய அணுகுமுறை" ஏற்றுமதி முறையாக்க வலயங்களின் பொருளாதார, சமூகத் தாக்கம் பற்றிய ஏ. பி. ஓ. கருத்துக் கோவை கொழும்பு 1980.

## இலங்கையில் வெளிக்கரை வங்கித் தொழில் நடத்துவதற்குரிய வாய்ப்புகள்

சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், ஹொங் கொங் போன்ற (நிதி நிலையங்களைக் கொண்ட) மற்றும் பெரும்பாலான ஆசிய நாடுகளைப் போலன்றி, வெளிக்கரை வியாபாரம் ஆகிய இரண்டுக்கும் போட்டி நிலவும் சூழ்நிலையொன்றில் அந்நிய வங்கிகள் செயற்படல் இலங்கையின் வங்கித் தொழில் வட்டாரங்களில் இதுவரை அறியப்படாமலே இருந்து வந்தது.

வர்த்தக வங்கித் தொழில் நடவடிக்கைகள் பணச் சந்தைத் தொழிற்பாடுகள் ஆகியன உண்மையில் தனிமைப்படுத்தப்பட்டு, அவற்றில் போட்டியில்லாதிருந்து வந்த நிலை, 1970களின் பிந்திய பகுதியில் பொருளாதாரக் கொள்கைகள் தாராளமாக்கப்பட்டதனுல் தலைகீழாக மாறிவிட்டது. புதிய பொருளாதாரக் கொள்கைகள் இலாபகரமான வெளிக்கரை வங்கித்தொழில் நடவடிக்கைகளில் இறங்குமாறு உள்நாட்டு வங்கிகளுக்கு மட்டுமன்றி வெளிநாட்டு வங்கிகளுக்கும் அழைப்பு விடுத்தன. வெளிக்கரை வியாபாரத்துக்கு மிக முக்கியமான பொருளாதார, அரசியல் சூழ்நிலை; வியாபாரத்தில் இறங்க வெளிநாட்டு வங்கிகளில் பெரும்பாலானவற்றிற்கு ஏற்றதொரு நிலைமையைச் சிருஷ்டித்தது. இலங்கையில் வெளிக்கரை வங்கித் தொழில் வியாபாரத்தை நிறுவுவதற்கு ஏற்ற நிலைமைகள் பின்வருமாறு—

1977ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளையும் தாராளமான இறக்குமதி—ஏற்றுமதி ஒழுங்கு விதிகளையும் தளர்த்திய நாணய மாற்றுச் சட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. அக்கொள்கைகளில், "வெளிப் பார்வையுள்ள வளர்ச்சி உபாயம்" ஒன்றும் அடங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை — 1

### இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கிகளின் பெயர்களும் அவை (கொழும்பில்) திறக்கப்பட்ட திகதிகளும்.

| வங்கிகள் | கொழும்பில் செயற்படத் தொடங்கிய ஆண்டு |
|---|---|
| இலங்கையின் சுதேச வங்கிகள் | |
| மக்கள் வங்கி | 1961 |
| இலங்கை வங்கி | 1939 |
| இலங்கை கொமர்சியல் வங்கி லிமிடெட் | 1969 |
| ஹட்டன் நேஷனஷல் வங்கி லிமிடெட் | 1970 |
| இந்திய, பாகிஸ்தானிய வங்கிகள் | |
| இந்தியன் வங்கி | 1948 |
| இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி | 1946 |
| இந்திய ஸ்டேட் வங்கி | 1864 |
| ஹபீப் வங்கி லிமிடெட் | 1951 |
| ஐரோப்பிய, அமெரிக்க, மேற்கு ஆசிய வங்கிகள் (புதியன) | |
| 1. பாங்க் டீ எல் இந்தோசீனு எட் டீ லியூஸ் (இந்தோ—ஸியூஸ்) | 1980 |
| 2. பாங்க் ஒப் கிறெடிட் அன்ட் கொமர்சியல் இன்டர்நேஷனல் (ஓவர்சீஸ் லிமிடெட்) | 1979 |
| 3. சிட்டி பாங்க் என். ஏ. | 1980 |
| 4. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்டர் நேஷனல் பாங்கிக் கார்ப்பரேஷன் | 1980 |
| 5. பாங்க் ஒப் ஓமான் லிமிடெட் | 1980 |
| 6. ஓவர்சீஸ் டிரஸ்ட் பாங்க் லிமிடெட் | 1980 |
| 7. பாங்க் ஒப் அமெரிக்கா | 1980 |
| 8. ஐரோப்பிய ஆசிய வங்கி | 1980 |
| 9. அல்ஜிமெனி பாங்க் ஒப் நெதர்லண்ட் | 1980 |
| 10. ஹபீப் வங்கி என். ஜி. | 1980 |
| 11. சேஸ் மன்ஹட்டன் வங்கி | 1981 |
| 12. யூனியன் பாங்க் ஒப் மிடில் ஈஸ்ட் | 1981 |
| 13. டுபாய் வங்கி லிமிடெட் | 1981 |
| 14. ஆம்ஸ்டர்டாம் ரோட்டர் டாம் வங்கி | 1981 |
| அந்நிய வங்கிகள் (பழையன) | |
| 1. ஹொங்கொங் ஷாங்கை பாங்கிக் கார்ப்பரேஷன் | 1892 |
| 2. கிறின் லேய்ஸ் வங்கி | 1881 |

நாடு, மேற்கு ஆசிய பெற்ரோ—டாலர் சந்தையையும் தூரகிழக்கு ஆசிய டாலர் சந்தையையும் இணைத்துக் கொண்டு, கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ளது. அடிப்படையில் டெலக்ஸ் திசை வழிப்படுத்திய சந்தையொன்றின் வெற்றிக்கு அமைவிட அண்மை அவ்வளவு முக்கியமல்லாத போதிலும், அது பூரணப்படுத்தும் பலனைக் கொண்டதாகும். மேலும், வியாபார நாளின் ஒரு நியாயமான பகுதியில் பெரும்பாலான நிதி நிலையங்களின் (ஜப்பான் உட்பட ஐரோப்பிய, வட அமெரிக்க, தூரகிழக்கு நிதி நிலையங்கள்) நடவடிக்கைகளில் பெரும் பகுதியைப் பற்றிய தகவல்களை அளிப்பதன் வாயிலாகக் கிடைக்கும் காலவலய அனுகூலம் இன்னொரு திட்டமான காரணியாகும்.

பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷன் திட்டங்களாகக் கைத்தொழில்களை அமைப்பதற்கு, பல்தேசிய கூட்டுத் தாபனங்கள் உட்பட அந்நிய முதலீட்டாளர்கள் இங்கு வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. (பா.கொ.பொ.க. வலயத்துக்கு வெளியே) அமைக்கப்படும் எப். ஐ. ஏ. சி. (வெளிநாட்டு முதலீடு ஆலோசனைக் கமிட்டி) திட்டங்களும் இச்சந்தையில் முதலீடு செய்யப்படுவதற்காக ஏராளமான நிதிகளைக் கொண்டு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆகிய பிரதேசங்களில் குடியேறியுள்ள இலங்கையர்களிடமிருந்து நிதிகளை ஈர்க்கும் சாத்தியக் கூறும் இருந்து வந்தது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனம் (ஏயர்லங்கா—இதுவும் பா. கொ. பொ. கமிஷனின் ஒரு தொழில் முயற்சியே) இப்பிரதேசத்தில் தொழிற்படும் மற்றும் விமானப் போக்குவரத்து ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரமாண்டமான விரிவாக்கத் திட்டங்கள் கொழும்பின் வெளிக்கரைச் சந்தையில் மிகப் பேரளவில் முதலீடு செய்யப்படக் கூடிய இயல் திறனை எடுத்துக் காட்டுகின்றன. எனவே சிங்கப்பூரிலுள்ள ஆசிய நாணய நிலையங்களின் வாடிக்கையாளர்கள் என்ற முறையில் விமானப்போக்குவரத்து நிறுவனங்கள் சிறந்த முதலீட்டு வாய்ப்புக்களைக் கொண்டவையென இனங் காணப்பட்டுள்ளன. (2)

முகாமை, ஆகு செலவு, கணக்கியல், வங்கித் தொழில், சட்டத் தொழில் ஆகிய துறைகளில் நல்ல தேர்ச்சி பெற்ற ஆற்றலாளர்கள் கிடைக்கக் கூடியதாயிருக்கும நிலைமை, மற்றும் அநேக வெளிக்கரை நிலையங்களுக்கு இல்லாத நயத்தை இலங்கைக்குக் கொடுக்கும் இன்னோர் அனுகூலமாகும். மேலும், ஒரு புதிய தொழிலில் அமர்வதற்குத் தேவையான பயிற்சியைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய திறமை இலங்கைத் தொழிலாளர்களுக்கு இருந்து வருவதும் இன்னொரு திட்டமான காரணியாகும். வெளிக்கரை வியாபாரம் நடத்துவதற்குத் தகுந்த பயிற்சி பெற்றிருப்பது ஓர் அத்தியாவசியத் தேவையாகும். ஏனென்றால் இத்தொழிற்பாடுகளில் பெரும்பாலானவற்றிற்கு விவேகமாகவும் தக்க சமயத்திலும் முடிவெடுப்பது அவசியமாகும். இதற்கு அனுபவம் மட்டுமன்றித் தகுதியும் வேண்டும்.

பயன்படத்தக்க முறையில் சங்கிலிபோல ஒன்றோடொன்று தொடர்புகொண்ட தகவல் தொடர்பு நிலையங்கள் வாயிலாக இலங்கையை மற்றும் வியாபார மையங்களுடன் இணைப்பதற்கான உபசேவைகள் உட்பட ஆதரவுச் சேவைகளின் வளர்ச்சியும் ஒரு மிக முக்கியமான காரணியாகும். 1980ஆம் ஆண்டிலே குறுகிய கால பணச்சந்தையில் இலங்கை இன்னொரு புதிய நிலைமையைக் கண்டது. அது பணத்தரகுத் தொழில் என அறியப்படுவதாகும். இந்தப் பிரசித்தி வாய்ந்த பணவியாபாரத்தில் முதலாவதாகப் பிரவேசித்த நிறுவனம் பார்ட் லீட் மக்லஸ் அன்ட் ரேய் லிமிடெட்டாகும். இது பம்பாயைச் சேர்ந்த மக்லாய் அன்ட் மக்லாய், கல்கத்தாவைச் சேர்ந்த ரேய் சப்பாஸ், இலங்கையைச் சேர்ந்த பார்ட் லீட் கம்பெனி ஆகியவற்றிடையே அமைக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் புரியும் ஒரு சங்கம் (காட்டெல்). அவ்வாண்டு முடிவுக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் மேலும் நான்கு கம்பெனிகள்—அஃதாவது பிஜோட் சம்பான், ஜோர்ஜ் ஸ்டுவர்ட் அன்ட் கம்பெனி, போர்பஸ் அன்ட் வோக்கர் கம்பெனி லிமிடெட், ஜோன் கீல்ஸ் லிமிடெட்—பணத் தரகுத் தொழிலில் இறங்கின. இக்கம்பெனிகள் வங்கிகளிடையேயான அழைப்புக் கடன்கள் சந்தையில் ஏற்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கான வசதிகளை வழங்கும் குறுகிய கால பணக் கொடுக்கல் வாங்கல்களில் விசேட தேர்ச்சி பெற்றவை. வெளிநாட்டு நாணய நிதிகளையும் இந்த நிதிகளை முதலீடு செய்வதற்கான வழிகளையும் கண்டுபிடிப்பதிலும் இவை வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களுக்கு ஒத்தாசை புரிகின்றன. எனவே பணத் தரகு வியாபாரம் வெளிக்கரை வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு ஒரு புதிய விசையை வழங்குகின்றது.

### இலங்கையில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் நிலையங்களின் பணிகள்

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையம் பற்றிய மத்திய வங்கியின் சுற்றறிக்கை 1/79இல், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் பணிகளும் தொழிற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நடத்துவதற்குரிய அடிப்படை நிபந்தனைகள் பின்வருமாறு—

(அ) எந்தக் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் இலங்கையில் வதியாத எவரிடமிருந்தும் தவணை வைப்புகளையும் கோரிக்கை வைப்புகளையும் ஏற்றுக் கொள்ளவும். ஆனால் தவணை வைப்புகளைப் பொறுத்தவரை, இத்தகைய வைப்புகள் 10,000 அமெரிக்க டாலர்களுக்கு அல்லது அதற்குச் சமமான தொகைக்குக் குறைவாக இருக்கக் கூடாது. எனினும், சேமிப்புக் கணக்குகளை அல்லது காசோலைகள் மூலம் நிதிகளை மீளப் பெறக் கூடிய கணக்குகளைத் திறப்பது அனுமதிக்கப்படுவதில்லை. இந்த வைப்புகளில் குறுகிய தவணை அழைப்பு வைப்புகளும் (முன்னிரவு அழைப்பு வைப்புகள் இருபத்துநான்கு மணி நேர அழைப்பு வைப்புகள்; ஏழுநாள் அழைப்பு வைப்புகள் முதலியன) தவணைக் காலம் ஒரு மாதத்திலிருந்து 90 நாட்கள் வரையும் சில சமயங்களில் அதற்கு மேலும் கூட நீடிக்கும் நிலையான தவணைவைப்புகளும் அடங்கும். நாணயத்தின் வகையையும் போட்டிச் சந்தையின் போக்குகளையும் பொறுத்து, போட்டி வட்டி செலுத்தவேண்டியிருக்கிறது. (வைப்புகளின் பகுப்புக்கு அட்டவணை—11ஐப் பார்க்கவும்).

(ஆ) இந்த நிலையங்களிலுள்ள வைப்புகளின் முதிர்வு முறைகள் அட்டவணை—11இல் தரப்பட்டுள்ளன. அதில் கவனிக்கத்தக்க ஓர் அம்சம் யாதெனில், வைப்புகளில் ஏறக்குறைய 80 சதவிகிதம் மூன்று மாதங்களுக்குக் குறைவான காலத்தில் முதிர்வதாகும். இந்த அமைப்பு முறை இலங்கையிலுள்ள வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களில் குறுகிய தவணை அழைப்பு வைப்புகள் வகிக்கும் ஆதிக்கத்தைச் சற்றே தெளிவற்ற விதத்தில் எடுத்துக் காட்டுகின்றது. இந்த அட்டவணையிலுள்ள படி, முதிர்வு காலம் 6 மாதங்களிலிருந்து 3 வருடங்கள் வரையுள்ள நிலையான தவணைவைப்புகளின் பங்களிப்பு மொத்த வைப்புகளில் 6.9 சதவிகிதமாக மட்டுமே இருந்துள்ளது. பா. கொ. பொ. க. தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரை, அவை இலங்கையில் வதியாத அந்தஸ்து வகிப்பதாகக் கருதப்படுகின்றன. இலங்கையிலிருந்து பா. கொ. பொ. க. பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதிலிருந்து நிதிகள் உண்டாவதில்லையாதலின், குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் வைப்புகளைச் செய்ய அவற்றிற்கு உரிமையுண்டு. மேலும், இலங்கையில் வதியாதார் (உதாரணமாக, ஏயர் லங்காவும் பெற்றோலியம் கூட்டுத்தாபனமும்) எனக் கருதப்படுவதற்கு மற்றும் உள்நாட்டுத் தொழில் முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்க மத்திய வங்கிக்குத் தனியதிகாரம் உண்டு

(இ) வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களும் மற்றும் வெளிக்கரை மையங்களும் உட்பட இலங்கையில் வதியாத எவரிடமிருந்தும் எந்தக் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தையும் கடன்வாங்கல். இதில் இலங்கையில் வதியாதோரிடமிருந்தும் (வங்கியல்லாததும் வங்கியும்) இலங்கையில் வதிவோரிடமிருந்தும் (மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள், பா. கொ. பொ. க. ஆகியனவும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில் முயற்சிகளும்) பெறப்படும் கடன்களும் அடங்கும். வங்கிகளிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் இந்த நடவடிக்கைத் துறையில் ஒரு ஜீவாதாரமான பங்களிப்புச் செய்கின்றன. இங்கு சக்கரத்தின் பல்லாக விளங்குவது அடிக்கடி தரகுத் தொழில் புரியும் ஒரு கம்பெனியாகவே இருக்கிறது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் பணத் தரகர்கள் இடைநடுவர்களாகச் செயலாற்றுகின்றனர். இத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விகிதமும் கன அளவும் போட்டி ஏலங்களின் பேரில் முடிவு செய்யப்படுகின்றன. மேலும், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் லண்டன் வங்கிகளிடை வழங்கப்படும் விகிதத்தில் அல்லது அதற்குச் சற்று மேற்பட்ட விகிதத்திலும் சிங்கப்பூர் வங்கிகளிடை வழங்கப்படும் விகிதத்தில் அல்லது அதற்குச் சற்று மேற்பட்ட விகிதத்திலும் வெளிநாட்டு நாணயத்தைக் கடன் வாங்க முடியும்.

(ஈ) வெளிநாட்டு நாணயத்தில் வேறெந்தக் கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களுக்கு உரிமையுண்டு. தேவையான அங்கீகாரத்தை இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேலும், இலங்கையில் வதியும் எவரிடமிருந்தும் (இது ஒரு வர்த்தக வங்கியாக அல்லது மத்திய வங்கியாகக் கூட இருக்கலாம்) தவணை வைப்புகளையும் அழைப்பு வைப்புகளையும் ஏற்றுக்கொள்ளவும், எந்தக் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் அவர்களுக்குக் கடன்களும் முற்பணங்களும் வழங்கவும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களை அனுமதிக்கலாம்.

(உ) வெளிக்கரைக் கொடுக்கல் வாங்கல்களில் முற்பணங்கள் (வழங்குதல்), குறுகிய தவணைக் கடன்களையும் நெடுந் தவணைகடன்களையும் உள்ளடக்கும். குறுந் தவணைக் கடன்களிலும் நெடுந் தவணைக்கடன்களிலும் வைத்தல்களும் குறுந்தவணை அழைப்புக்



Appropriate Technology Services
121, POINT-P... O ROAD
NALLUR, ...NA
No.........
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்களும் அடங்கும். நெடுந் தவணைக் கடன்கள் நிலையான தவணைக் கடன்கள் என அழைக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயக் கடப்பாடுகள் ஒப்பியல் ரீதியாக உயர்வாக இருக்குமிடத்தும், அநேக வங்கிகள் கூட்டுச் சேர்வதன் மூலம் பங்குபற்றுமிடத்தும், பிரசித்திபெற்ற வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் பெருமளவிலான கடன்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் நிறைவான சுதந்திரமான நிலையங்களாகத் தொழிற்படுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும். கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அவற்றின் ஏடுகள் (கணக்குகளும் பதிவேடுகளும்) வங்கியின் மற்றும் பொதுக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து தனியாக வைக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் ஆரம்பத்தில், அமெரிக்க டாலர்களுக்கும் பவுண் ஸ்டர்லிங்குக்கும் "குறிக்கப்பட்ட நாணயம்" என்னும் அந்தஸ்து வழங்கப்பட்டன. 1979ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கீழ்க்கண்ட எட்டு நாணயங்களுக்கு "குறிக்கப்பட்ட நாணயம்" என்னும் அந்தஸ்து வழங்கப்பட்டது: பிரெஞ்சு பிராங்க்; ஜப்பானிய யென்; நெதர்லாந்து கில்டர்; பவுண் ஸ்டர்லிங்; சுவீடிஷ் குரோனர்; சுவிஸ் பிராங்க்; அமெரிக்க டாலர்; மேற்கு ஜேர்மன் மார்க்.

இத்துடன், சிங்கப்பூர் டாலர் ஹொங்கொங் டாலர் ஆகிய இரண்டுக்கும் 1980ஆம் ஆண்டில் "குறிக்கப்பட்ட நாணயங்கள்" என அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## இலங்கையில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் நிலையங்களின் செயற்பாடு

தொழிற்பாட்டிலுள்ள வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் தொகையை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்பட்டவாறு அந்நிலையங்களின் செயற்பாடும், அவற்றின் சொத்துக்கள், பொறுப்புக்களின் கன அளவும், சொத்துக்களின் பட்டியல்களும் அனுகூலமாயிருப்பதாகக் குறிப்பிடலாம். இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையை மேற்கோள் காட்டுமிடத்து: "பிரஸ்தாப வருடத்தில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் தொழிற்பாடுகள் அதிகரித்து, இலங்கையில் ஒரு சர்வதேச பணச்சந்தையின் கருவூலம் சிருஷ்டிக்கப்பட்டது."

"இலங்கையில் வெளிக்கரை வங்கித் தொழில் நடவடிக்கைகளுக்கான ஆதாரத்தை ஏற்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் 1981ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது" என்று 1981ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை விமர்சித்துக் கொண்டு போகின்றது. இத்தொழிற்பாடுகளில் ஈடுபட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் மொத்தத் தொகை வருட முடிவில் 18 இலிருந்து 23 உக்கு அதிகரித்தது. இதேபோல 1980 ஆம் ஆண்டு முடிவில் 3,796 மில்லியன் ரூபாவிலிருந்த இந்த நிலையங்களின் மொத்தச் சொத்துக்களும் பரிப்புகளும் 1981ஆம் ஆண்டு முடிவில் 7,516 மில்லியன் ரூபாவுக்கு அதிகரித்தன. இலங்கையில் விரிவடைந்த வெளிக்கரை வங்கித் தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட ஒரு முக்கிய அம்சம் யாதெனில், ஐரோப்பிய நாணயச் சந்தையிலிருந்து அரசாங்கம் திரட்டிய சிண்டிகேட் மூலமான 75 மில்லியன் அமெரிக்க டாலர் கடனில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் பங்குபற்றிய தாகும்.

(ஊ) இது வரைப்படம்—1இல் உதாரணங்களால் மேலும் தெளிவாக்கப்பட்டுள்ளது. (அது சொத்துக்களிலும் பொறுப்புகளிலும் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது). கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சி விகிதங்களுக்கு வெளிக்கரை வங்கித் தொழில் நிலையங்கள் செய்துள்ள பங்களிப்பு மனத்தில் பதியத்தக்கதாயிருந்துள்ள தென்பது அவதானிக்கப்பட்டது. ஆதலால், முதற் சில வருடங்களில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் செயற்பாட்டை நேரொத்த காலங்களில் ஆசிய நாணய நிலையங்கள் (சிங்கப்பூர்) கடல்கடந்த வங்கித் தொழில் நிலையங்கள் (பிலிப்பைன்ஸ்) ஆகியவற்றின் செயற்பாட்டுடன் ஒப்பிட்டு மதிப்பிடுவதற்கு இது ஏற்ற சமயமாகும்.

சிங்கப்பூரைச் சேர்ந்த ஆசிய

### அட்டவணை — 2

### இலங்கையில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் செயற்பாடு

(மில்லியன் ரூபா கணக்கில் தொழிற்பாடு)

| காட்டிகள் | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|
| வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்கள் | 11 | 18 | 23 |
| மொத்தச் சொத்துக்களும் பொறுப்புகளும் | 602 | 3,796 | 7516.4 |
| இலங்கையில் வசதியாக வங்கிகளின் பொறுப்புகள் | 100 | 179 | 923.9 |
| பொறுப்புகள் வதிவுக் கொடுக்கல் வாங்கல்கள் | 33 | 402 | 2326.7 |
| சொத்துக்கள் (வதியாத) | என்.ஏ. | 1,432 | 4212.5 |
| வதிவு வர்த்தக வங்கிக் கடன்பாடுகள் | இல்லை | 410 | 1034.8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய நிலையங்களின் செயற்பாட்டுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி விகிதம் அனுகூலமாயுள்ளது. 1968ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய நாணய நிலையங்கள் ஆரம்ப இரு வருட காலத்தில் நிலையங்களின் தொகையிலும் 106 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள கூட்டுச் சொத்துக்களிலும் ஒரு வளர்ச்சியைக்காட்டியது. (6) (ஐந்து வருட தொழிற்பாட்டுக்குப் பின்னர்) 1972ஆம் ஆண்டு முடிவில் 24 ஆசிய நாணய நிலையங்கள் ஏற்பட்டு விட்டன; அதே சமயத்தில் சொத்துக்கள்/பொறுப்புகள் 2.97 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்குப் பெருகிவிட்டன. எனினும், பிலிப்பைன்ஸில் 1977 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சம கால வெளிக்கரை வங்கித் தொழில் திட்டம் கொழும்பில் உள்ள அதன் எதிரிணையை மிஞ்சி விட்டது. வெளிக்கரை வங்கித் தொழில் திட்டத்தின் மொத்த நிதிகள் முதல் ஆறு மாதங்களில் 757 மில்லியன் அமெரிக்க டாலர்களாயிருந்தன. இது 1978ஆம் ஆண்டு முடிவில் அஃதாவது ஒன்றரை வருட காலத்தில் மட்டும் 1,987 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்குப் பெருகிவிட்டது.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் செயற்பாட்டை நிலையவாரியாக மதிப்பிட முடியாது. ஏனென்றால் சம்பந்தப்பட்ட நிலையங்களைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. பிரசித்தி பெற்ற சர்வதேச வங்கிகளின் நிலையங்கள் ஒப்பியல்ரீதியாக நன்கு செயற்பட்டுள்ளனவென்று ஊர்ஜிதமாகாத வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. இந்திய வங்கிகளில் சில அஃதாவது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பெருமளவிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்பாடு செய்து, அவற்றில் பங்குபற்றியுள்ளன. மணிலாவிலுள்ள மின்சக்தித் திட்டங்கள், போலந்தில் இரசாயன ஏற்றுமதிகள், ஈராக்கில் கட்டட நிர்மாண வேலைகள் முதலியவற்றிற்கு நிதிவழங்குதல் உட்பட சர்வதேச வங்கிக் கூட்டுக் கடன்கள்.

உள்நாட்டு வங்கிகளால் அமைக்கப்பட்ட நான்கு வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களில், இலங்கையில் வதியாதோரின் வைப்புகளை ஈர்ப்பதில் இலங்கை வங்கி மட்டுமே இது வரை வெற்றிபெற்றுள்ளது. நடவடிக்கைகளும் சாதனைகளும் பற்றித் திட்ட அமுல் அமைச்சு வெளியிட்ட அறிக்கையின்படி, 1980ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 1981ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையுள்ள ஒரு வருட காலத்தில் இலங்கை வங்கி 2 சர்வதேச வங்கிக் கூட்டுக் கடன்களில் பங்குபற்றியுள்ளது.

(எ) 1981ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் மட்டும், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புகள், அமெரிக்க டாலர் கணக்கில், 258 மில்லியனிலிருந்து செங்குத்தாக 366 மில்லியனுக்கு உயர்ந்தன. வெளிநாடுகளிலுள்ள அந்நிய வங்கிகளிலிருந்து வைப்புகள், கடன்பாடுகளின் உருவத்தில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களால் பெறப்பட்ட நிதிகளே பொறுப்புகளில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்குப் பெருமளவு காரணமாகும். சொத்துக்களைப் பொறுத்தவரை, இலங்கையில் வதியாதோருக்கு வழங்கப்பட்ட கடன்களிலும் முற்பணங்களிலும் 52 மில்லியன் அமெரிக்க டாலர்கள் உயர்ந்து 205 மில்லியன் அமெரிக்க டாலர்களாயின. மேலும், இலங்கையில் வதிவோருக்கு வழங்கப்பட்ட கடன்களிலும் முற்பணங்களிலும் 57 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அதிகரித்து, 1981ஆம் ஆண்டு டிசம்பர் மாத முடிவில் 144 மில்லியன் அமெரிக்க டாலர்களாயின.

வெளிக்கரைக் கொடுக்கல் வாங்கல்கள் பெரும் இலாபந்தரத்தக்க ஒரு முயற்சியாகும். அவை வங்கியாளர்களுக்கு வெகு கவர்ச்சியான நிதிவாய்ப்புக்களை அளிக்கின்றன. எனினும், இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கு விசேஷ தேர்ச்சிகள் தேவைப்படுகின்றன. இது ஆரம்ப கட்டங்களில் வங்கிகளுக்கு ஒரு மேலதிக சுமையை உண்டாக்கலாம். இந்தப் பளு (ஆளணிக்குப் பயிற்சியளிப்பதற்காக) ஆள் பலத்தின்மீதும், (எண் கணனிகள், டெலக்ஸ் சாதனங்கள் முதலியவற்றை வாங்குவதற்காக) பொருள்களின் மீது முதலீடு செய்வதிலும், மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமான வெளிக்கரைத் தொழிற்பாடுகள் மூலம் மீட்கத்தக்க மூலதனத்திலும் கிடக்கின்றது.

(ஏ) வெளிக்கரை நடவடிக்கைகளில் பெரும் பகுதி பிரதான நாணயங்களிலுள்ள பெருந்தொகையான உபரி நிதிகளைச் சுற்றி நிகழ்வதாகும். இந்த நிதிகள் பல்தேசிய கூட்டுத்தாபனங்களாலும் வங்கிகளாலும் அரசாங்கங்களால் கூட வைப்புகளாக வைக்கப்படுகின்றன. இந்த உபரி நிதிகளைக் குறிக்க உபயோகிக்கப்படும் சொற்றொடர்களில், யூரோ—டாலர், யூரோ — ஸ்டர்லிங், பெற்றோ—டாலர், ஆசிய டாலர் என்பன சிலவாகும். இவை பொதுவாகப் போட்டி விகிதங்களில் பல்தேசிய கம்பெனிகள் வசம் உள்ளன. வங்கித் தொழில் சட்டங்கள், வரிக் கட்டுக்கோப்பு, அரசியல்—பொருளாதார ஸ்திரம், அத்துடன் உள்ளக அமைப்புத் தேவைகள் ஆகியவற்றில் சரியான சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டால், இந்த மையங்களுக்கு வங்கிகளும் நிதிகளும் பெயர்வதை மிகத் திட்டமாகச் செய்ய முடியும்.

சித்திகரமான வெளிக்கரை நிலையமொன்றில் தொழிற்படும் வங்கியைப் பொறுத்தவரை, வதிவற்ற நிதிகளை ஈர்த்து, இலாபகரமான முயற்சிகளுக்கு அவற்றை மீண்டும் கடன் கொடுப்பதிலுள்ள எதிர்கால பலன் "மிகுந்த கவர்ச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளிப்பதாக" உள்ளது. இந்தக் காரணிதான், எதிர்காலத்தில் நல்ல இலாபந்தரத்தக்க ஒரு புதிய முயற்சி என்ற முறையில் வெளிக்கரை நிதி வழங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடச் சர்வதேசப் புகழ்பெற்ற அநேக வங்கிகளை ஈர்க்கின்றது. இதில், ஆகக்குறைந்த மேற்நிலைக் கட்டுப்பாடுகளோடும் வரிக் கட்டுப்பாடுகளுடனும் வெளிநாட்டு நாணயத்தைத் தொகையாகச் சம்பாதிக்கலாம். இந்தக் கொடுக்கல் வாங்கல்களில், கடன் வாங்கப்பட்ட நாணயத்துக்கும் கடன் வாங்குபவர் வதியும் நாட்டுக்கும் கடன் கொடுப்பவருக்கும் இடைநடுவு வங்கிகளுக்குமிடையே எந்தச் சம்பந்தமும் இருக்கவேண்டிய அவசியமில்லை.

நிர்வகிப்பதிலும் தொழிற்பாடுகளிலும் காட்டப்படும் வினைத் திறமையே வெளிக்கரை நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படை நியதியாகும். பொது வர்த்தக வங்கித் தொழிலில் போலன்றி, பெரும்பாலான தொழிற்பாடுகள் நன்னியக்கமாயுள்ள அன்றாடப் பணிகளில் நிர்வாகத்தின் பங்கு மிக முக்கியமாகும். வியாபாரக் கன அளவுடனும் இலாபங்களோடும் ஒப்பிடுகையில் குறைவாயுள்ள மனித உள்ளீடுகளின் தரத்தையும் திறமைகளையும் உயர்த்துவதற்குத் தக்க பயிற்சி அத்தியாவசியமாகும். ஆளணியினரைத் திரட்டும் வேலை மிகக் கவனமாகச் செய்யப்படுகிறது. இதில், வியாபார நிர்வாகம், ஆகு செல்வியல், கணக்கியல் ஆகியவற்றில் பெறப்படும் சிறப்புத் தேர்ச்சிகளுக்கும் உளச் சார்புச் சோதனைகளில் ஈட்டப்படும் உயர்ஸ்தானத்துக்கும் உயர்ந்த அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. டெலக்ஸ் திரைகள், தொலைபன்னி, எண்கணனி (கம்பியூட்டர்)களின் உதவியுடன் மற்றும் தகவல் தொடர்பு முறைகள் ஆகியவற்றைக் கையாளும் தொழில் நுட்ப வல்லாருடன் கணக்கறிஞர்கள், திட்டப் பகுப்பாளர், வழக்கறிஞர்கள், பொருளியலாளர் போன்ற பல்வேறு மனித உள்ளீடுகள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதால், நிர்வாகத்தின் முக்கியத்துவமும் உயர்ந்துள்ளது.

ஒரு வெளிக்கரை நிலையத்தின் வாழ்தகவை முடிவு செய்வதில் புகழ்பெற்ற சர்வதேச வங்கிகளின் பிரவேசம் மிக முக்கியமாக விளங்குவதால், இந்த வங்கிகளே வெளிக்கரை நிதிகளின் நன்மைகளில் பெரும் பகுதியை அடைகின்றன. உதாரணமாக, "பாங்க் ஒஃப் அமெரிக்கா" என்பதன் தலைமையில் அமெரிக்க வங்கிகளின் குழுவொன்று சிங்கப்பூரில் வெளிக்கரைச் சந்தையின் வளர்ச்சிக்குந் தொடக்க ஊக்கமளித்தது, பிலிப்பைன்ஸிலும் பஹ்ரெயினிலும் அவ்வாறே அது செய்கின்றது. ஒரு புதிய வருகையாளருக்குச் சிறிது காலம் பிடிக்கும். ஏனென்றால், திட்டத்தை இயங்கச் செய்வதற்குப் பெரு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கையிலும் கூட, தற்போது நடைபெறும் வெளிக்கரை வியாபாரத்தின் மொத்தப் புரள்வில் பெரும் பகுதி பல பிரசித்திபெற்ற சர்வதேச வங்கிகளைச் சுற்றியே நிகழ்கின்றது என ஊர்ஜிதமாகாத தரவுகள் குறிப்பிடுகின்றன. எனினும், முற்றாக உள்நாட்டில் தோன்றிய வங்கிகள் வெளிக்கரை வியாபாரத்திலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளனவென்று இதற்கு அர்த்தமல்ல. ஆரம்பத்தில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை (அஃதாவது, ஆரம்பத்தில் உள்ளக அமைப்பையும் தேவையான பயிற்சியையும் வழங்குவதற்காகச் சில முதலீடுகளைச் செய்ய வேண்டியிருக்கும்) அனுபவிப்பதற்குத் தேவையான தூரதிருஷ்டியும் துணிவும் சக்தியும் உள்நாட்டு வங்கிகளுக்கு இருக்குமாயின், இந்த இலாபகரமான வெளிக்கரை நடவடிக்கைகளை உள்ளடக்கித் தங்கள் வியாபாரத்தை விரிவாக்குவதற்கு நிறைய வாய்ப்புள்ளது.

(17ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், புதிய உயிரியல் தொழில்நுட்பத் துறையும் — அத்துடன் மற்றும் பேராற்றல் வாய்ந்த நுண்கணனிகளும் கணனி வன்கலங்களும் மென்கலங்களும் விருத்தியடைந்து வரும் துறைகளும் — தொழில்நுட்பவியலில் தலைமைதாங்கப் புதிய வர்க்கங்களுக்குப் புதிய வாய்ப்புக்களை வழங்குவது சாத்தியம். எப்படியாவது தொழில்நுட்பவியலில் சிறிதளவு சமத்துவ நிலையை அடைவதற்காக, இந்தியா தனது தொழில்நுட்பவியல் முன்னேற்றப்பாய்ச்சலுக்கு, பரம்பரையலகுகள் இணைப்புமுறையையும் நுண்கணனிகளையும் கொண்ட இந்த எல்லைப்புறப்பகுதிகளை ஜீவாதாரமானவையாகக் குறித்துள்ளது. இந்த ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு இந்தியா திட்டமிட்டுவருகிறது. இந்திய அரங்கில் நிகழ்வதைப் போல, இலங்கையில் விஞ்ஞானத்தையும் தொழிநுட்பவியலையும் பொறுத்த இத்தகைய உத்தியோகபூர்வமான திட்டமிடல் எதுவும் நடைபெற்றுவரவில்லை. (இந்தியாவிலுள்ள விஞ்ஞான — கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகம் இத்திட்டமிடலில் முன்னணியிலே இருந்து வருகிறது). இலங்கை தைரியமாக, கண்களைத் திறந்து இந்தப் புதிய தொழில்நுட்பவியல்களை நோக்கி, அபிவிருத்திக்கான வழிவகைகளை இனங்காண்பது பொருத்தமாகும். குறிப்பாக புதிய தொழில்நுட்பவியல் அறிவு செறிந்த நன்மையதாயிருப்பதன் காரணமாக, இத்தகைய முயற்சிகளில் வர்த்தக அபிவிருத்திக்கான மையங்களாகப் பல்கலைக்கழகப் பகுதிகளைச் சேர்த்துக்கொள்வதன்மூலம் இதைச் சாதிக்க முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பெரு நகரங்கள்

● பேராசிரியர் எம். டபிள்யு. ஜே.ஜி. மெண்டிஸ்.

இலங்கையில் சமீப சில வருடங்களாக நகரப்புற ஆய்வுகளில் பெருமளவு அக்கறை செலுத்தப்பட்ட போதிலும் உண்மையான அரச முதலீடு 'ஒரு வகையில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது.' எனவே இரு நகர்ப்புற வேலைத் திட்டங்களில் (மூன்று முன்னணித் திட்டங்கள்) அரசாங்க முதலீடுகள் பகுதி ரீதியாகவும் இட ரீதியாகவும் நியாயமான வளங்களை மீள் பங்கீடு செய்துள்ளன. நகரமயமாக்குவதில் இந்த மாற்றம் எந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை அறிதல் முக்கியமானது. இதற்கெனக் குறிப்பாகப் பெரு நகரங்கள்பற்றி ஆராய்வது திட்டமிடலாளருக்கு உதவக்கூடியதாகும்.

தத்துவ ரீதியில் நகர்ப்புறங்களில் எந்த அளவுக்கு ஜனத் தொகை அதிகமாக உள்ளதோ அவ்வளவுக்குச் சில சாதகமான விடயங்கள் உள்ளன. தனது மகிழ்ச்சிக்குத் தேவையானவை எனத் தனிநபர் நம்பும் எல்லாவற்றையும் பெரிய நகரத்தால் கொடுக்க முடியும் என எதிர் பார்க்கலாம். முதலீட்டைக் கவரக்கூடிய உழைப்புச் சக்தி அதிகமாக அங்கு கிடைக்கும். 'பெரு நகரங்கள்' அதிகரித்த பொருளாதார நலனுக்கும் உள்ளூர் சுபிட்சத்துக்கும் பரந்த சாதகங்களை ஏற்படுத்துகின்றன என்றும் வாதிக்கப்படுகிறது. இத்தகைய வாதங்களில் சில உண்மைகள் இருந்தாலும் ஜனநெருக்கம் அதிகமான நகரங்களில் பாதிப்பான தாக்கங்கள் ஏற்படவும் வழி உண்டு.

## இலங்கையில் நகர அளவுப் பகுப்பும் நகரப் பரம்பலும்

தேசியப் புள்ளிவிபரக் கணக்கெடுப்பின்போது பயன்படுத்தப்பட்ட வரைவிலக்கணத்தின்படி 1953-ல் இலங்கையில் 43 நகரங்கள் இருந்துள்ளன. 1963-ல் 99 நகரங்களும், 1971-ல் 135 நகரங்களும் 1981-ல் 134 நகரங்களும் இருந்தன. ஒவ்வொரு கணக்கெடுப்பு வருடத்தின்போதும் விகிதாசார ரீதியில் பெருமளவு நகரங்கள் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அதாவது ஈரவலயத்தோடு சம்பந்தப்பட்ட பகுதிகளில் இருந்துள்ளதைக் காண முடிகிறது. 1981-ல் ஈரவலயத்தின் பத்து மாவட்டங்களில் 78 நகரங்களும் உலர் வலயத்தைச் சேர்ந்த 14 மாவட்டங்களில் 56 நகரங்களும் இருந்தன.

ஈரவலயப் பகுதிகளில் கொழும்பு களுத்துறை, கம்பஹா மாவட்டங்களிலேயே நகரங்கள் அதிகமாக இருந்தன. இம்மூன்று மாவட்டங்களிலும் 1981-ல் 38 நகரங்கள் இருந்தன.

பட்டின சனத் தொகையில் அரைவாசிப் பங்குக்கு மேற்பட்டோர் சிறிய நகரங்களிலேயே வாழ்கின்றனர். 1981-ல் 50,000-க்கு மேற்பட்ட ஜனத் தொகையைக் கொண்ட பத்து நகரங்கள் வருமாறு—

| நகரம் | ஜனத்தொகை |
|---|---|
| கொழும்பு நகர் | 385,776 |
| தெஹிவளை—கல்கிஸ்ஸை | 174,385 |
| மொரட்டுவை | 135,610 |
| யாழ்ப்பாணம் | 118,215 |
| கோட்டே | 101,563 |
| காலி | 77,183 |
| நீர்கொழும்பு | 61,376 |
| பத்தரமுல்ல | 56,535 |
| மஹரகம | 49,984 |

நகர அளவுப் பகுப்பில் 'பிக் லீக்' என்று கூறப்படும் தன்மை சார்ந்த நகர்களையும் மற்றையவற்றையும் வித்தியாசப்படுத்த ஒரு இலட்சம் சனத்தொகை எண்ணிக்கை ஒரு அளவீடாகக் கருதப்படுகிறது. எனவே இலங்கையில் 'பெரு நகரங்கள்' எனக் கூறப்படும் ஆறு நகரங்கள் உள்ளன. அவையாவன— கொழும்பு, தெஹிவளை — கல்கிசை, மொரட்டுவை, கோட்டே, யாழ்ப்பாணம், கண்டியாகும். இவற்றில் முதல் நான்கும் கொழும்பின் பட்டினப் பிராந்தியத்தில் தொடர்ச்சியாக உள்ளன. இவற்றில் ஐந்து ஈர வலயத்திலும் யாழ்ப்பாணம் மட்டும் உலர் வலயத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவற்றில் நான்கு கரையோர நகர்களாகும். இரண்டு உள்ளமைந்திருக்கும் நகரங்களாகும்.

அந்தஸ்து ரீதியாகக் கொழும்பே முதன்மை பெறுகிறது. அத்துடன் மிகச் சமீப காலம்வரை கொழும்பே இலங்கையின் தலைநகராக இருந்துள்ளது. கோட்டே புதிய தலைநகராகிறது. அத்துடன் அது நாட்டின் நிர்வாக நிலையமாகவும் மாறும். இலங்கையில் கடைசிச் சிங்கள இராஜதானியின் தலைநகர் கண்டியாகும். பெரு நகரங்களில் நான்கு மாநகர சபைகளாகும். மொரட்டுவையும் கோட்டேயும் மட்டும் பட்டின சபைகளாகும்.

## "பிக் லீக்"கில் இணைந்துகொள்ளும் விகிதம்

கொழும்பு எப்போதுமே 'பிக் லீக்' என்ற வரைவிலக்கணத்துள் உட்பட்டே இருந்துள்ளதென்பதை ஜனத் தொகைத் தரவுகள் காட்டுகின்றன. 1881-ம் ஆண்டிலேயே கொழும்பின் ஜனத்தொகை 1,10,502 ஆகும். ஒரு இலட்சம் சனத்தொகை எல்லையை ஒரு நகர் எட்டியதும் 'பிக்லீக்'குள் உட்படுகிறது.

1963-ல் தெஹிவளை—கல்கிஸ்ஸையின் ஜனத்தொகை 1,10,934 ஆக உயர்ந்தபோது அதுவும் 'பிக்லீக்'கில் இணைந்து கொண்டது. கொழும்பு 'பிக்லீக்' அந்தஸ்துப் பெற்று எண்பது வருடங்களின் பின்னரே தெஹிவளை—கல்கிஸ்ஸை அந்த நிலைக்கு உயர்ந்தது.

மூன்றாவதாக இதில் இணைந்து கொண்டது யாழ்ப்பாணமாகும். 1971-ல் அதன் ஜனத்தொகை 1,07,184 ஆக உயர்ந்தது. கொழும்புக்குப் பின்னர் தொண்ணூறு ஆண்டுகள் கழித்தும் தெஹிவளை—கல்கிஸ்ஸைக்கு எட்டு ஆண்டுகள் பின்னருமே யாழ்ப்பாணம் 'பிக் லீக்' அணியில் சேர்ந்தது.

மொரட்டுவை, கோட்டே, கண்டி ஆகிய நகரங்களின் ஜனத்தொகை 1981-ல் ஓர் இலட்சத்தைத் தாண்டிய பின்னரே 'பிக்லீக்'கில் இணைந்தன. அதாவது கொழும்புக்குப் பின்னர் நூறு ஆண்டுகள் கழித்தும் தெஹிவளைகல்கிஸ்ஸைக்குப் பின்னர் 20 ஆண்டுகள் கழித்தும் தும் யாழ்ப்பாணத்திற்குப் பின் பத்து ஆண்டுகள் கழித்துமே இவை 'பிக் லீக்' அந்தஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை — 1

### இலங்கையிலுள்ள நகரங்களின் அளவுகளுக்கேற்ப பட்டின சனத்தொகைப் பரம்பல் 1946 — 1981

| | | 2000க்குக் கீழ் | 2000 முதல் 4999 வரை | 5,000 முதல் 9999 வரை | 10,000 முதல் 19,999 வரை | 20,000 முதல் 49,999 வரை | 50,000 முதல் 99,999 வரை | 1,00,000க்கு மேல் | சகல நகரங்களும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நகரங்களின் எண்ணிக்கை | 3 | 9 | 7 | 13 | 5 | 4 | 1 | 42 |
| 1946 | சனத்தொகை | 3,601 | 28,386 | 55,874 | 174,598 | 1 77,123 | 221,388 | 362,074 | 1,023,044 |
| | மொத்தப் பட்டினத்தின் சதவீதம் | 0.4 | 2.8 | 5.5 | 17.1 | 17.3 | 21.6 | 35.4 | 100.0 |
| | நகரங்களின் எண்ணிக்கை | 3 | 8 | 4 | 15 | 6 | 6 | 1 | 43 |
| 1953 | சனத்தொகை | 40,62 | 28,338 | 29,691 | 213,150 | .154,727 | 383,038 | 426,127 | 1,239,133 |
| | மொத்தப் பட்டினத்தின் சதவீதம் | 0.3 | 2.3 | 2.4 | 17.2 | 12.5 | 30.9 | 34.4 | 100 |
| | நகரங்களின் எண்ணிக்கை | 9 | 21 | 23 | 21 | 18 | 5 | 2 | 99 |
| 1963 | சனத்தொகை | 15,342 | 74,681 | 158,280 | 278,153 | 487,986 | 379,265 | 622,578 | 2,016,285 |
| | மொத்தப் பட்டினத்தின் சதவீதம் | 0.8 | 3.7 | 7.9 | 13.8 | 24.2 | 18.8 | 30.9 | 100.0 |
| | நகரங்களின் எண்ணிக்கை | 6 | 32 | 30 | 34 | 781,874 | 5 | 3 | 135 |
| 1971 | சனத்தொகை | 10,819 | 104,095 | 215,848 | 499,561 | 25 | 411,311 | 823,798 | 2,848,116 |
| | மொத்தப் பட்டினத்தின் சதவீதம் | 0.4 | 3.7 | 7.6 | 17.5 | 27.5 | 14.4 | 28.9 | 100.0 |
| | நகரங்களின் எண்ணிக்கை | 3 | 28 | 28 | 511,35 | 31 | 3 | 6 | 134 |
| 1981 | சனத்தொகை | 5,173 | 90,518 | 199,189 | | 976,957 | 195,094 | 1,216,830 | 3,194,899 |
| | மொத்தப் பட்டினத்தின் சதவீதம் | 0.2 | 2.8 | 6.3 | 16.0 | 30.5 | 6.1 | 38.1 | 100.09 |

தகவல்கள்:— இலங்கை சனத்தொகை, தொடர் இல. 4, ஐ. நா — எஸ்காப், பாங்கொக், தாய்லாந்து. 1976. சனத்தொகை வீட்டுக் கணக்கெடுப்பு 1981, சனத்தொகைப் புள்ளிவிபரக் கணக்கெடுப்புத் திணைக்களம், கொழும்பு. 1981.

து பெற்றன. மொரட்டுவையின் உண்மையான சனத்தொகை 1981-ல் யாழ்ப்பாணத்தின் சனத்தொகையை விட அதிகரித்த விடயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும்.

'பிக் லீக்'குடன் ஆறு நகரங்களும் இணைந்துகொண்ட தன்மையைப் பார்க்கும்போது 1971-க்குப் பின்னர் ஒரு துரிதம் ஏற்பட்டதைக் காண முடியும். ஐம்பதாயிரத்துக்கும் ஒரு இலட்சத்துக்கும் இடைப்பட்ட சனத்தொகையைக் கொண்டுள்ள மற்றைய நகரங்களில் திட்டமிட்ட பட்டின வளர்ச்சி ஏற்படுத்தப்படாவிட்டால் இந்த நூற்றுண்டு முடிவதற்குள் எவையுமே 'பிக் லீக்'குடன் இணையப் போவதில்லை. அதாவது, ஓர் இலட்சம் சனத்தொகையைக் கொண்டிருக்கப் போவதில்லை. அப்படி நன்கு திட்டமிடப்பட்ட தேசிய அபிவிருத்தி வளர்ச்சி உபாயத்துக்கு ஏற்ப சுருக்கமான திட்டமிட்ட சனத்தொகை மீள்—பரம்பல் கையாளப்பட்டாலும் காலி, திருமலை ஆகிய நகரங்களைத் தவிர வேறு எவையும் 2000-ம் ஆண்டுக்கு முன்னர் 'பிக் லீக்'கில் இணையப் போவதில்லை.

## அட்டவணை — 3

### இலங்கையின் ஆறு பெரு நகரங்களிலும் சனத்தொகை வளர்ச்சி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1946 | 362074 | 64053 | 17.69 | 2.5 | சனத்தொகை |
| | 1953 | 426127 | 85517 | 20.0 | 2.0 | வீழ்ச்சி வீதத்தில் |
| | 1963 | 511644 | 50776 | 9.9 | 1.2 | வளர்ச்சியடைகிறது. |
| | 1971 | 562420 | 23356 | 4.1 | 0.4 | |
| | 1981 | 585776 | | | | |
| தெகிவளை — கல்கிசை | 1946 | 56881 | 21332 | 37.5 | 5.3 | சனத்தொகை |
| | 1953 | 78213 | 32721 | 41.8 | 4.2 | வீழ்ச்சி வீதத்தில் |
| | 1963 | 110934 | 43260 | 38.9 | 4.8 | வளர்ச்சியடைகிறது. |
| | 1971 | 154194 | 20191 | 13.0 | 1.3 | |
| | 1981 | 174385 | | | | |
| மொரட்டுவை | 1946 | 50698 | 9517 | 18.7 | 2.7 | சனத்தொகை |
| | 1953 | 60215 | 17618 | 29.0 | 2.9 | வளர்ச்சி வீதத்தில் |
| | 1963 | 77833 | 18434 | 23.7 | 3.0 | உயர்கிறது. |
| | 1971 | 96267 | 39343 | 40.8 | 4.1 | |
| | 1981 | 135610 | | | | |
| யாழ்ப்பாணம் | 1946 | 62543 | 15268 | 24.4 | 3.5 | சனத்தொகை |
| | 1953 | 77811 | 16859 . | 21.6 | 2.2 | வீழ்ச்சி வீதத்தில் |
| | 1963 | 94670 | 12514 | 13.0 | 1.6 | வளர்ச்சியடைகிறது. |
| | 1971 | 107184 | 11031 | 10.0 | 1.0 | |
| | 1981 | 118215 | | | | |
| கோட்டே | 1946 | 40218 | 14163 | 35.0 | 5.0 | சனத்தொகை |
| | 1953 | 54318 | 18943 | 34.8 | 3.5 | வீழ்ச்சி வீதத்தில் |
| | 1963 | 73324 | 20356 | 27.7 | 3.5 | வளர்ச்சியடைகிறது. |
| | 1971 | 93680 | 7883 | 8.4 | 0.8 | |
| | 1981 | 101563 | | | | |
| கண்டி | 1946 | 51266 | 5934 | 11.6 | 1.7 | சனத்தொகை |
| | 1953 | 57200 | 11002 | 19.0 | 1.9 | வீழ்ச்சி வீதத்தில் |
| | 1963 | 68202 | 25101 | 36.8 | 4.6 | வளர்ச்சியடைகிறது. |
| | 1971 | 93303 | 7978 | 8.5 | 0.9 | |
| | 1981 | 101281 | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிணங்க பட்டின சனத்தொகையின் எதிர்கால வளர்ச்சிகளின் பெரும் பங்கு சிறிய, மத்தியதர நகரங்களிலேயே அடங்கப் போகின்றன. மகாவலி, மற்றும் விவசாய அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்கள் கிராமிய வெகுஜனங்களின் வாழ்வுத் தரத்தை அவர்களது சொந்தச் சூழலிலேயே உயர்த்தப்போகின்றன. பெருநகரப் பகுதிகளுக்குப் பெருமளவிலான இடப்பெயர்ச்சி ஏற்படுவதைவிட, கிராமிய வளர்ச்சி இடம்பெறும் என்ற நம்பிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்படுகிறது.

மறுபுறத்தில் இயற்கைச் சேதங்கள், யுத்தங்கள், மிகக் கூடுதலான மின்சக்தி, எரிசக்தி விலை உயர்வு, பெருமளவு பணவீக்கம் ஆகியவற்றின் காரணத்தால் விவசாய அடிப்படையிலான திட்டங்கள் தோல்வியுற்றால் வெறுமனே நகரங்கள் ஓர் இலட்சம் சனத்தொகை இலக்கைத் தாண்டிவிடும்.

## ஆறு நகரங்களின் தன்மைகள்

சனத்தொகைக் கணக்கெடுப்புக்கு இடைப்பட்ட காலங்களில் மொரட்டுவை, தெஹிவளை — கல்கிஸ்ஸை ஆகிய நகரங்கள் தவிர்ந்த மற்றைய நான்கு பெரு நகரங்களின் வருடாந்த சராசரி வளர்ச்சித் தன்மையைச் சமகால தேசிய பட்டின சனத்தொகை வளர்ச்சி விகிதத்தைவிடக் குறைவானதாகும். மொரட்டுவை வருடாந்தம் 4.1 என்ற சதவீதத்தால் தீவிர வளர்ச்சி கண்டது. தேசிய பட்டின சனத்தொகை வீதத்தை விட 3.5 மடங்கு உயர்ந்ததாகும். மொரட்டுவையில் உருவாக்கப்பட்ட பிரதான வீடமைப்புத் திட்டம் (டீ சொய்சா புரவில்), புதிய தொழிற்சாலைகள், பயிற்சி நிலையங்கள், அரசாங்கக் காரியாலயங்கள் ஆகியவை இவ்வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம்.

சனத்தொகை அதிகரிப்பின் படி கடந்த சனத்தொகைக் கணக்கெடுப்புக்கு இடைப்பட்ட காலத்தில் மொரட்டுவையிலேயே அதிகமான எண்ணிக்கை கூடியுள்ளது. இதற்கு அடுத்தபடியாக கொழும்பில் கூடியுள்ளது.

எனினும் இந்த ஆறு நகரங்களில் மொரட்டுவை தவிர மற்றையவற்றில் ஒரு வீழ்ச்சியடைந்துவரும் விகிதாசாரத்திலேயே அதிகரிப்புக் காணப்பட்டுள்ளது. எல்லா நகரங்களிலும் உண்மையான வீழ்ச்சி மிகக் கணிசமானவையாகும்.

இப்போது (1981-ல்) இந்த ஆறு பெரு நகரங்களிலும் 12 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் உள்ளனர். அதாவது இது மொத்த பட்டின சனத்தொகையில் 37.5 சதவீதம் அல்லது தேசிய சனத்தொகையில் 8 சதவீதமாகும். இவற்றில் அரைவாசிப் பேர் அல்லது ஆறு இலட்சம் பேர் சுதந்திரத்துக்குப் பிந்திய 1946—1981ம் ஆண்டு காலகட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதாவது மொத்த பட்டின சனத்தொகை அதிகரிப்பில் 27 சதவீதத்தை அல்லது தேசிய சனத்தொகை அதிகரிப்பில் 7 சதவீதத்தை இது குறிக்கிறது. சுதந்திரத்துக்குப் பிந்திய காலத்தில் வருடாந்தம் சராசரி 17,000 பேர் ஆறு பெரு நகரங்களிலும் கூடிக்கொண்டே வந்துள்ளனர். எனினும் குறைந்து கொண்டே வரும் ஒரு விகிதாசாரத்தில் இந்த ஆறு நகரங்களிலும் சனத்தொகை அதிகரித்து வருவதால் அடுத்த இரு தசாப்தங்களிலும் இதேயளவு வருடாந்த அதிகரிப்பு இடம்பெறுது. அநேகமாக வருடாந்தம் 10,000 பேரே இந்நகர்களில் கூடிவருவர். எனவே இந்நூற்றாண்டு முடிவில் பெரு நகரங்களின் சனத்தொகை சுமார் 15 இலட்சமாக இருக்கும்.

கொழும்பு, தெஹிவளை — கல்கிஸ்ஸை, மொரட்டுவை, யாழ்ப்பாணம், கோட்டே, கண்டி ஆகியவற்றில் மொத்த சனத்தொகை அடர்த்தி முறையே 64, 34, 42, 24, 26, 16 ஆக உள்ளது. இந்த நிலையில் இந்த ஆறு பெருநகரங்களிலும் காணி பயன்படுத்தப்படும் விதங்களை அறிந்துகொள்வது இங்கு மெதுவான சனத்தொகை வளர்ச்சி நடைபெறுவதற்கான காரணங்களை அறிந்து கொள்ள உதவும்.

இந்த ஆறு நகர்கள் ஒவ்வொன்றிலும் சமீபத்தில் பகுக்கப்பட்ட காணிப் பயன்பாட்டுத் தன்மைகள். 75 சதவீதத்துக்கு அதிகமான காணிகள் வதிவிடங்களை சதுப்பு நிலங்களை, பூங்காக்களை, வீதிகளைக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. எனவே நகரங்களில் மேலும் சனங்கள் குடியேறுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் எதிர்காலத்தில் மேலும் சனங்களின் எண்ணிக்கை இந்த நகரங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவதானால் அது பல உப பிரிவுகளை உருவாக்கும். காணி விலைகளையும் வாடகை, குத்தகைகளையும் அதிகரிக்கும்.

## பெரு நகரங்களும் இடங்களுக்கான தேசிய உபாயமும்

உலகின் பல நாடுகளில் தேசிய இடங்களுக்கான உபாயத்தை வடிவமைப்பில் நகரங்களின் அளவு பெரும் பங்கு வகிக்கிறது. இதனால் 'விரும்பும் அளவுக்குள்' 'அனுகூலமான அளவுக்குள்' நகரங்களைக் கட்டுப்படுத்தக் காத்திரமான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. தேசிய பட்டின வளர்ச்சி உபாயத்தின் ஓர் அங்கமாக 'வளர்ச்சி நிலையங்கள்' உருவாக்கப்படுகின்றன.

### அட்டவணை — 2

### பெரு நகர அந்தஸ்துப் பெற்ற தன்மை

குறிப்பு: **X**......... 1,00,000 பேருக்குக் கீழ் ஜனத்தொகை இருப்பதைக் குறிக்கிறது.


| பெருநகரத்தின் பெயர் | கணக்கெடுப்பு நிகழ்ந்த வருடங்களின்போது சனத்தொகை | | | | |
|---|---|---|---|---|---|
| | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
| கொழும்பு நகரம் | 362,074 | 426,127 | 511,644 | 562,420 | 585,776 |
| தெகிவளை — கல்கிசை | X | X | 110,934 | 154,194 | 174,385 |
| மொரட்டுவை | X | X | X | X | 135,610 |
| யாழ்ப்பாணம் | X | X | X | 107,184 | 118,215 |
| கோட்டே | X | X | X | X | 101,563 |
| கண்டி | X | X | X | X | 101,281 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இந்த ஆறு பெரு நகரங்களிலும் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படவில்லை. தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் முன் வைத்த பல்வேறு கொள்கைகள் ஏற்படுத்திய வழிமுறைகளால் பரம்பல் தாக்கமும் பெரிய அளவில் இருக்கவில்லை. எனினும் ஆறு பெரு நகரங்களில் நான்கை உள்ளடக்கிய கொழும்பின் முன்னணிப் பிராந்தியம் பெருமளவு சனத்தொகையை உள்ளிழுக்கக் கூடியதாக இருந்தது. இதனால் பட்டின அடர்த்தியின் தனி மேடையாக இது மாறியது. இத்தகைய நகரக் குடியேற்றம் சாதகங்களைக் கொண்டிருக்கும் அதே வேளையில் பாதகமான அம்சங்களையும் கொண்டுள்ளது.

கொழும்புக்கு வெளியேயுள்ள பெருநகரங்களான யாழ்ப்பாணம், கண்டி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் பரம்பலின் அபரிமிதமான தாக்கங்கள் இல்லை. எனினும் சுற்றுடல் விஸ்தரிப்புகள் ஆரம்பமாகிவிட்டனவா என்பதை அறிய ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். சிறிய, மத்தியதர அளவிலான நகரங்களை இந்த ஆறு பெரு நகரங்களுடன் காத்திரமான முறையில் இணைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அப்படி எடுக்கப்பட்டிருந்தால் இந்த ஆறு பெரு நகரங்களும் வர்த்தக மயமாக்கலையும் விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தலையும் ஊக்குவித்திருக்கும். இடங்களுக்கான தேசிய ஒருங்கிணைப்பு அபிவிருத்திக்கும் வேலைவாய்ப்புகளைப் பன்முகப்படுத்தலுக்கும் ஊக்கமளித்திருக்கும் பிராந்திய நிலைகளுக்கிடையிலும் பட்டினப் பகுதிகளுக்கிடையிலும் பொருளாதார நலனை மேலும் சமத்துவமாகப் பங்கிடவும் உதவியிருக்கும். உலர் வலயத்தில் காத்திரமான ஒருங்கிணைப்புக்கென பல்வேறு அளவிலான நகரங்கள் போதிய அளவு இல்லாததால் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வளர்ச்சி அடைந்துவரும் நகரங்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்போது உலர் வலயத்தின் கிழக்குப் பகுதியில் பெருநகரம் எதுவுமில்லை. எனவே பெருநகரமொன்றின் வளர்ச்சியைத் துரிதமாக்க முடியும். கிழக்கில் இப்போது 45,000 பேரைக் கொண்டிருக்கும் திருகோணமலையை இதற்கெனத் தேர்ந்தெடுக்கலாம். இதைப்போன்று தென்னிலங்கையில் இப்போது 77,000 பேரைச் சனத்தொகையாகக் கொண்டிருக்கும் காலியைப் பெருநகராக்கலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை — 4

## இலங்கையின் ஆறு பெரு நகரங்களில் கணக்கெடுப்புக்கு இடைப்பட்ட கால சனத்தொகை வளர்ச்சி

| நகரத்தின் பெயர் | கணக்கெடுப்புக்கு இடைப்பட்ட காலத்தில் சனத்தொகை வளர்ச்சி | | | | மொத்த அதிகரிப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | 1946 — 53 | 1953 — 63 | 1963 — 71 | 11081 | 1953 — 1971 | 1946 — 1981 |
| கொழும்பு | 64053 | 85517 | 50776 | 1971 — 81 | 136293 | 223702 |
| தெகிவளை — கல்கிசை | 21332 | 32721 | 43260 | 23356 | 75981 | 117504 |
| மொரட்டுவை | 9517 | 17618 | 18434 | 20191 | 36052 | 84912 |
| யாழ்ப்பாணம் | 15268 | 16859 | 12514 | 39343 | 29373 | 55672 |
| கோட்டே | 14163 | 18943 | 20356 | 7883 | 39299 | 61345 |
| கண்டி | 5934 | 11002 | 25101 | 8260 | 36103 | 50297 |
| 'ஆறு பெரும்' நகரங்களின் மொத்தம் | 130267 | 182660 | 170441 | 110064 | 353101 | 594432 |
| மொத்தச் சனத்தொகை வளர்ச்சிப் பங்குக்கு ஏற்ப பெருநகரங்களின் கணக்கெடுப்புக்கு இடைக்காலப் பங்கு (%) | 9.0% | 7.0% | 8.0% | 5.1% | 7.8% | 7.0% |
| பட்டின சனத்தொகை வளர்ச்சிப் பங்குக்கு ஏற்ப பெருநகரங்களின் கணக்கெடுப்புக்கு இடைக்காலப் பங்கு (%) | 60.3% | 23.5% | 20% | 31.7% | 22% | 2.7% |

இத்தகைய உபாயத்தைக் கைக்கொண்டால், பட்டின அபிவிருத்திக்கான மூலவளப் பங்கீட்டுக்கெனப் பெரும் தேவை உருவாகும். ஏற்கனவே இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன (திரு. குணதாசாவால் மேற்கொள்ளப்பட்ட (1981) ஆய்வொன்றிலிருந்து கொழும்பின் மத்தியிலும் அதன் பட்டினப் பகுதிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறைக் கட்டட நிர்மாண மதிப்பீடு 621 கோடி ரூபாவாகும். சுதந்திர வர்த்தக வலயம், அரச முதலீடுகளைத் தவிர்த்தே இம்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.) இத்தகைய நடவடிக்கைகள் உள்ளூர் வளங்களைப் பெரிதும் பாதிக்கலாம். எனினும் பட்டன, கிராமிய வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தித் தேசிய பொருளாதாரத்தைப் பரந்த அளவினதாக்கக்கூடியவற்றையும் செய்துதாஞக வேண்டும். இந்நிலையில் ஆரம்பக் கட்டங்களில் வெளிநாட்டு வளங்களில் தங்கியிருக்க வேண்டிய அவசியமேற்படலாம். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இடஒருங்கிணைப்புக் கொள்கையின் பல நலன்களைக் கவனிக்கையில் இதனை நியாயப்படுத்த முடியும்.

கீழ்க்கண்ட சிபார்சுகளை மேலே கூறப்பட்ட விடயங்கள் சுட்டுகின்றன—

— தேசிய நகர அபிவிருத்தித் தந்திரோபாயம் தேவை.

— காலி, திருமலை ஆகியவற்றின் துரித அபிவிருத்தி உபாயத்துடன் பெரு நகரங்கள் இணைக்கப்பட வேண்டும். இதன் மூலம் காலி, திருமலை ஆகியவற்றின் சனத்தொகை எண்ணிக்கை ஓர் இலட்சமாக உயர்ந்து அதை 'பிக் லீக்' வரம்புக்குள் வரமுடியும்.

— காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகியவற்றில் கவனம் செலுத்திப் பல்முனை நகர அபிவிருத்தியுடன் இணைக்கப்பட்ட கொழும்பு — திருமலை அபிவிருத்தி மையம் உருவாக்கப்பட வேண்டும். தேசிய நகர அபிவிருத்தித் தந்திரோபாயத்தின் வரைவாக இது முன்வைக்கப்படுகிறது.

— பெருநகரங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் பகுதிகளிலுள்ள வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் திட்டங்கள் வேண்டும். தேசிய அபிவிருத்தித் திட்டத்துடனும் இவை சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

— பெருநகரங்களின் அபிவிருத்திக்குத் தேவையான வளங்கள் முடிந்தவரை உள்ளூரிலேயே பெறப்பட வேண்டும். இதற்குதவியாக வெளியிலிருந்து வளங்களைப் பெறலாம்.

அட்டவணை — 5

## இலங்கையிலுள்ள பெரு நகரங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட நிலப்பாவனை வகைகளில் இருக்கும் மொத்த நிலத்தின் சதவீதம்

| பெருநகரத்தின் பெயர் | வதிவிடம் (%) | பூங்காக்கள், நீர் அமைப்புகள் மயானங்கள், மற்றும் இடங்கள் (%) | சதுப்பு நிலங்கள் (%) | வீதிகள் (%) | மொத்தம் (%) |
|---|---|---|---|---|---|
| கொழும்பு (அ) | 52.0 | 6.0 | 10.0 | 5.0 | 73.0 |
| தெகிவளை — கல்கிசை (ஆ) | 62.3 | 4.6 | 9.6 | 3.9 | 80.5 |
| மொரட்டுவை (ஆ) | 62.9 | 5.1 | 1.0 | 7.0 | 76.0 |
| யாழ்ப்பாணம் (ஆ) | 68.6 | 5.3 | இல்லை | 8.5 | 82.4 |
| கோட்டே (அ) | 56.7 | 2.2 | 26.6 | 6.7 | 92.2 |
| கண்டி (அ) | 34.8 | 38.0 | இல்லை | 10.5 (இ) | 83.9 |

ஆதாரம்:— நகர, - நாட்டு திட்டமிடல் திணைக்களம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம், நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஆய்வுகள்.

குறிப்பு:— (அ) 1979-ல் நடத்தப்பட்ட ஆய்வுகள்,
(ஆ) 1981-ல் நடத்தப்பட்ட ஆய்வுகள்,
(இ) நீர் அமைப்புப் பகுதிகளையும் உள்ளடக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார சொத்துக்களை சொந்த நாடுகளுக்குத் திருப்பிக் கொடுத்தல்

ஒரு நாட்டின் கலாசாரச் சொத்துக்கள் என்று கூறும்போது, அவை அந்நாட்டினது வரலாற்று, இனப் பண்பாட்டு ரீதியான பொருள்கள், தஸ்தாவேஜுகள் என்பவற்றையே குறிக்கும். கையெழுத்துப் பிரதிகள், பிளாஸ்டிக்கிலும் மற்றும் உலோகங்களிலும் செய்யப்பட்ட அலங்காரக் கலைப் பொருள்கள், தொல்பொருள்கள், நூதனப் பொருள்கள், அகழ்வாராய்ச்சிப் பொருள்கள் ஆகியனவும் கலாசாரச் சொத்துக்களே. பூகர்ப்ப ரீதியான சான்றுப் பொருள்கள் மற்றும் தாவரவியல், கனிவளவியல் மாதிரிப் பொருள்களும் கலாசாரச் சொத்துக்களில் அடங்கும்.

இலங்கையின் கலாசாரச் சொத்துக்கள் பல இப்போது வெளிநாடுகளில் உள்ள தொல்பொருள் சாலைகள், நூல்நிலையங்கள், தனியார் கலைப் பொருள் நிலையங்கள் என்பனவற்றை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய பகுதிகளுக்கே இலங்கையின் கலைச் சொத்துக்கள் பெருமளவில் போய்ச் சேர்ந்துள்ளன.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட கலாசாரச் சொத்துக்கள் எவை எவை எனக் கண்டறிந்து, தேசிய தொல்பொருள்சாலைகள் இணைக்களம் அட்டவணைப்படுத்தி உள்ளது. அவற்றுள் சுவடிகள் கூடப் பொருள்கள், எமது நாட்டுத் தொழிற் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள், மற்றும் கலாசாரச் சொத்துக்கள் வரிசையில் சேரும் பலவிதமான பொருள்கள் என்பனவும் அடங்கும்.

வெண்கலத்தில் வடிக்கப்பட்ட புத்தர் பெருமானின் உருவச் சிலைகள், மற்றும் சுப சகித்திய, ராஜவலிய (டச்சு ஆட்சியாளரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றியது பற்றிய சரித்திர நூல்), சாதர்ம



அம்ஸ்ரடாம் ரிஜ்க் நூதனசாலையிலுள்ள என். எம். 7112 இலக்க கஸ்டேன் வாள்பிடியின் நெருங்கு தோற்றம்.

ரத்னவலிய, உம்மகஜாதகய, சித்தார்த்த சங்கராவ, புத்த துறவிகளின் சமயப் பிரசங்க உரைகள் ஆகிய ஓலைச்சுவடிகள் என்பன வெளிநாடுகளில் உள்ள கலாசாரச் சொத்துகளில் அடங்கும். பண்டைய அரசர்களின் வாள்கள், கண்டி இராசதானிய காலத்துக் கத்திகள், சந்நியாச முகமூடிகள், நாடக முகமூடிகள் (மாநம மன்னன், அவனது இராணிகள், மற்றும் வேடர்கள் அரசன். சிங்கம், எருது, நரி, முதலை, முரசறைவோன், விதானையார், முதலியார், செட்டியார், சலவைத் தொழிலாளி, கங்காணி, பட்டாள வீரன், சாத்திரியார் ஆகியோரின் முகமூடிகளும் அவற்றில் அடங்கும்) ஆகியன ஏனைய கலைச் சொத்துக்களாகும். யானைத் தந்தத்தினால் செதுக்கப்பட்டவையும் கரைகளில் ஆபரணங்கள் பதித்து அலங்கார வேலைப்பாடு செய்யப்பட்டவையுமான 16 ஆம் நூற்றாண்டின் பேழைகள் ஐரோப்பிய நாடுகளைப் போய்ச் சேர்ந்துவிட்டன. இவற்றுள் ஒன்று பிரிட்டிஷ் தொல்பொருள் சாலையிலும், மற்றொன்று வியன்னா தொல்பொருள்சாலையிலும் மூன்றாவது மூனிச் அரும்பொருட்சாலையிலும் உள்ளன.

எமது நாட்டு முகமூடிகளில் பெரும் தொகையானவை மேற்கு ஜெர்மனியில் உள்ளன. எங்கள் தலைவிதியை நிர்ணயிக்கும் அளவுக்கு எமது நாட்டை நீண்ட நெடுங்காலத்துக்கு ஆட்சி செய்தவர்கள் என்ற வகையில் எமது தேசத்தின் அரும்பெரும் கலைப் பொக்கிஷங்களில் பெரும்பாரியானவற்றை பிரிட்டிஷாரே எடுத்துச் சென்றுவிட்டனர். அவற்றில் விலைமதிக்க முடியாத பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பத்தினி வெண்கலச் சிலையும், பதினைன்காம் நூற்றாண்டு காலத்திய புத்தரின் வெண்கலச் சிலைகளும் மற்றும் யானைத் தந்தத்தினால் செதுக்கப்பட்ட சிலைகள், யானைத் தந்தச் சீப்புகள், வாள்கள், முகமூடிகள். கையெழுத்து ஓலைச் சுவடிகளும் பெரும் எண்ணிக்கையில் பிரிட்டனில் உள்ளன

இவ்வாறு வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஆயிரக் கணக்கான கலாசாரச் சொத்துக்களில் ஆக 32 பொருள்களை மட்டுமே திருப்பித் தருமாறு இலங்கை கேட்டிருக்கிறது. இது நியாயமான கோரிக்கையே.

திரும்பத் தருமாறு கேட்கப்பட்டுள்ள கலாசாரச் சொத்துக்களில் தாரா அல்லது பத்தினி என அழைக்கப்படும் சிலையும் ஒன்றாகும். சுமார் 5 அடி உயரமுள்ள இந்த வெண்கலச்சிலை இப்போது லண்டன் மாநகரில் உள்ள பிரிட்டிஷ் தொல்பொருள்சாலையில் உள்ளது. மகாயன பௌத்தம் இலங்கையில் நன்றாகப் பரவியிருந்த காலத்துச் சிலை அது. இங்கு காணப்பட்ட வெண்கலச் சிலைகளில் மிகப் பெரியதும் அதுவேயாகும். மைத்திரிய புத்தரான அவலோகிதீஸ்வரரின் பெண் தெய்வத்தின் விசேஷ வடிவமாகும் அது. பிரஸ்தாப சிலை ஏழாம் நூற்றாண்டு காலத்துடையதாக இருக்க வேண்டும் என்று ஆனந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமி தெரிவிக்கிறார். இந்தியக் கலையின் தெரிவு செய்யப்பட்ட உதாரணங்கள் என்ற தமது நூலில் ஆனந்த குமாரசுவாமி தாரா சிலை பற்றிப் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார் : இருந்தவாறு கீழே நோக்கிய வண்ணம், பாவத்தில் உழலும் மனிதர்களைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். அந்தக் கண்ணீரிலிருந்து உதித்ததே தாரா என்ற பெண் தெய்வமாகும் என்று கூறியுள்ளார். கலையம்சம் மிளிர மிகவும் நுணுக்கமாகவும், கட்டமைப்புடனும் அழகு சொட்ட அந்தச் சிலை வடிக்கப்பட்டுள்ளது. காந்த சக்தி மிகுந்த புன்சிரிப்பு சிலையின் தெய்வாம்சத்தை — அருள் சுரக்கும் பாவத்தை எடுத்துக்காட்டுகிறது. தலைசிறந்த கலைப்படைப்புகளில் அவற்றின் தத்துவம், பொதிந்திருக்கும். அந்தச் சிறப்புத தன்மை தாரா சிலையில் இருப்பதைக் காண முடிகிறது.

திருப்பித் தருமாறு நாம் கேட்கும் பொருள்களில் மற்றொன்று புத்தர் பெருமான் அமர்ந்திருப்பது போன்ற வெண்கலச் சிலையாகும். இது கம்பளை காலத்து ஒரேயொரு வெண்கலச் சிலையாகும். இப்போது எடின்பரோ தொல்பொருள் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

18 ஆம் நூற்றாண்டின், சிங்கள இடைப்பூட்டுக் கொண்ட துப்பாக்கி மற்றொரு அரும் பொருளாகும். தங்க முலாமிடப்பட்ட பூவேலைப்பாடமைந்த அடித்தளம் அதற்குண்டு. அது இப்போது வின்ஸ்டர் மாளிகையில் வைக்கப்பட்டிருக்கிறது.

லூயூக் திஸ்ஸ உருவாக்கி, 1745 ஆம் ஆண்டில் கண்டி அரசனுக்கு உவந்தளித்ததும், பின்னர் 1765 ஆம் ஆண்டிலே டச்சுக்காரரால் கைப்பற்றப்பட்டதுமான பீரங்கி ஒன்றும், கண்டிய காலத்துக் காட்டாரிகள், கீர்த்தி சிறி ராஜசிங்கவுக்குச் சொந்தமான காஸ்ரேன் வாள் என்பனவும் ஆம்ஸ்டாடாம் தொல்பொருள் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. கீர்த்தி சிறி ராஜசிங்கவின் வாளின் அரைவாசிப் பகுதி தங்கத்தினால் பட்டையிடப்பட்டதாகும். 136 வைரக் கற்களும் பல சிவப்புக் கற்களும் பதிக்கப்பட்டு, தங்கத்தினால் செய்யப்பட்ட கைக்கவசமும் அதற்குண்டு. மரத்தினால் செய்யப்பட்டு ஆபரண அணிகலனிடப்பட்ட உறைக்குள் அந்த வாள் வைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள மக்களின் தேசிய வாளான காஸ்ரேன் லண்டன் கோபுரத்தில் உள்ள ஆயுதக் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. கந்தகக் கலப்பு மிகவும் குறைந்த சிறந்ததர உள்நாட்டு இரும்புத் தாதுப் பாளத்தை சிரட்டைக் கரியினால் உருக்கியே அந்த வாள் உற்பத்தி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. சிவனொளிபாதமலைக்கு ஏறுவதற்காகப் பிடித்துச் செல்லும் சங்கிலியைப் போன்று அந்த வாளும் பல நூற்றாண்டு காலமாக துருப்பிடிக்காமல் இருக்கிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இருபது வருட காலம் சேவையாற்றிய ஹியூ நீவில்லி என்பார், தமது சேவைக்காலம் முழுவதிலும் இலங்கையில் உள்ள பல பௌத்த விகாரைகளுக்கும் சென்று அங்கிருந்த ஓலைச் சுவடிகளைச் சேகரித்தார். அவை யாவும் இப்போது லண்டனில் உள்ளன. ரோயல் கலலூரியின் அதிபர் சார்ள்ஸ் ஹாட்லி சரித்திர காலத்துக்கு முற்பட்ட பல கலையம்சப் பொருள்களை கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்புச் செய்திருந்தார். அவை இப்போதும் அங்கு உள்ளன.

அந்தந்த நாடுகளின் கலாசாரச் சொத்துக்களை அவற்றிடமே திருப்பி ஒப்படைத்துவிட வேண்டும் என்பது சம்பந்தமான விவகாரம் கடந்த பத்து ஆண்டு காலத்திற்கு மேலாக அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, ஐ. நா. பொதுச் சபைக் கூட்டங்கள், யுனெஸ்கோ எனப்படும் கல்வி, கலாசார சமூக அபிவிருத்திக்கான ஐ. நா. நிறுவனத்தின் மாநாடுகள் ஆகியவற்றுள் ஆராயப்பட்டுள்ளது. கலாசாரச் சொத்துக்களை அவற்றுக்குச் சொந்தமான நாடுகளுக்குத் திரும்பப் பெற்றுக் கொடுப்பதிலும், சட்ட விரோதமாக எடுத்துச் செல்லப்பட்டவற்றை மீள ஒப்படைப்பதிலும் யுனெஸ்கோ நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக தீவிரமாகத் தலையிட்டுச் செயலாற்றி வருகிறது.

தான் திரும்பப் பெற விரும்பும் கலாசாரச் சொத்துக்களின் பட்டியலை முதன் முதலில் சமர்ப்பித்தது இலங்கைதான்.

தங்கள் கலாசார பாரம்பரியத்தையும் வரலாற்றையும் நிரூபிக்கவல்ல சான்றுகளாக விளங்கக்கூடிய பிரதான கலைப் பொக்கிஷங்களைப் பறிகொடுத்து நிற்கும் நாடுகளின் வாதங்கள் பரந்த அளவில் அரசியல் ரீதியிலும் மனச்சாட்சி ரீதியிலும் தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன எனலாம்.

மறுபுறத்தில், கலாசாரச் சொத்துக்களை அபகரித்து வைத்திருக்கும் நாடுகள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவையாக உள்ளன. சில நாடுகள் சட்டத் தந்திரங்களைக் கையாண்டு அந்தப் பொருள்களைத் தாமே தொடர்ந்தும் சொந்தம் கொண்டாட முனைகின்றன. உதாரணமாக பிரிட்டிஷ் தொல்பொருள்சாலை, தான் சேகரித்து வைத்துள்ள எந்தப் பொருளையும் வேறு யாருக்கும் உரித்தாக்குவதைத் தடை செய்யும் விதத்தில் சட்டப் பாதுகாப்புத் தேடியுள்ளது. பிரிட்டிஷ் பிரபு ஒருவர், "அவர்களுடைய உயிரைக் கொடுத்துவிட்டு, நாங்கள் கொள்ளைப் பொருளை வைத்திருக்க வேண்டும்" என்று அவதாரன தோரணையில் கூறியிருக்கிறார்.

பிற நாடுகளின் கலாசாரச் சொத்துக்களை இப்போது தம் வசம் வைத்திருக்கும் நாடுகள் இப்படியும் ஒரு வாதத்தை முன்வைக்கின்றனர்—

"சம்பந்தப்பட்ட பொருள்கள் நீண்ட காலமாக எங்கள் நாட்டில் இருந்ததால் எமது மக்கள் அவற்றைப் பார்த்துப் பல கருத்துக்களைத் தமக்குள் ஏற்படுத்தி விட்டனர். அதனால் அவை இப்போது எமது கலாசாரச் சொத்துக்களாகிவிட்டன" என்பதே அந்த வாதமாகும்.

"எமது நாட்டு மக்களில், தெற்காசிய வம்சாவளி மக்களும் அடங்குவர். அவர்கள் பெரும் எண்ணிக்கையில் இங்கு வாழ்கின்றனர். தங்களது சொந்த கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் பொருள்கள் இருக்க வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்" என்று பிரிட்டிஷ் தொல்பொருள் காட்சிச்சாலை அதிகாரிகள் மனத் துணிவுடனும் நெஞ்சுறுதியுடனும் கூறியுள்ளார்கள். திருமதி தாட்சரும் தேசிய முன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னணியினரும் இதுபற்றி என்ன சொல்வார்களோ நாமறியோம்.

"மற்றொரு நாட்டிடம் கலாசாரச் சொத்துக்களைத் திரும்ப ஒப்படைப்பதால் அந்த நாட்டின் பண்பாட்டு, கலாசார மேன்மைகளை உலகின் ஏனைய பகுதி மக்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பைக் குறைத்து, அவற்றை ரசிக்கும் சந்தர்ப்பத்தைக் கெடுத்துவிடும்" — பிரிட்டிஷ் தொல்பொருள் காட்சிச் சாலையினர் இப்படியும் ஒரு வாதத்தை முன்வைத்திருக்கின்றனர்.

காலனித்துவ அரசாட்சிக் காலத்தில் இலங்கையில் பணிபுரிந்த திரு. ஹியு நீவில்லி தாம் சேகரித்த பொருள்களை ஒன்றில் அன்பளிப்புகளாகப் பெற்றிருக்க வேண்டும். அல்லது விலை கொடுத்து வாங்கியிருக்க வேண்டும் என்றுதான் பிரிட்டிஷ் தொல்பொருள்சாலை அதிகாரிகள் கற்பனை செய்கிறார்கள் போலும்.



அ—பூரணத் தோற்றம், ஆ—தங்கத்தைக் கொண்டிருக்கும் பூட்டின் நெருங்கு தோற்றம்; இ—பூட்டுத் துப்பாக்கியின் குழாய், இல- என். சி. 437 வின்ட்சர் மாளிகையில் உள்ளவை.

யானைத் தந்தத்தால் கடையப்பட்ட பேழை பிரிட்டிஷ் தொல்பொருள்சாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அது அனேகமாக லண்டனில் வைத்துச் சுவீகரிக்கப்பட்டதாகவும், பெரும்பாலும் விலை கொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள், பாருங்களேன்.

தாரா அல்லது பத்தினிச் சிலை பிரிட்டிஷ் கவர்னராக இருந்த சேர் றொபேட் பிறவுண்றிக் என்பவரால் பிரிட்டிஷ் தொல்பொருள்சாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. அந்தச் சிலை எவ்வாறு பெறப்பட்டது என்பதை அறிவதில் அக்கறை காட்டாத பிரிட்டிஷ் தொல்பொருள்சாலை அதிகாரிகள் அதற்கான பதிவுகள் எதையுமே வைத்திருக்காத அவர்கள், 150 வருடங்களின் பின்னர் இப்போது புதிய வியாக்கியானம் கொடுக்கிறார்கள்.

"சேர் பிறவுன்றிக் அல்லது அவரது அதிகாரிகள், இராணுவ நடவடிக்கைக் காலங்களுக்குப் புறம்பான நேரங்களில் மேற்கொண்ட அமெச்சூர் தொல்பொருள் ஆராய்ச்சி வேலைகளின்போது இந்தச் சிலை கண்டுபிடிக்கப்பட்டது. கண்டியைக் கைப்பற்றியதற்கும் 1818 புரட்சியை முறியடிப்பதற்கும் சிறிது காலத்தின் பின்னர் இது நடந்தது" — என்று பிரிட்டிஷ் தொல்பொருள்சாலை அதிகாரிகள் கூறுகிறார்கள். எல்லாவற்றையும் தமதாக்கிக் கொள்ளும பேராசை பிடித்த தொல்பொருள்சாலை இயக்குநர்கள், பாதுகாப்பாளர்களின் போக்கிலிருந்து பிரிட்டிஷ் மக்களும், பிரிட்டிஷ் அரசாங்கத்தினரும் விடுபட்டுக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.

காலத்திற்குக் காலம் மற்றொரு வாதமும் முளைப்பதுண்டு. சம்பந்தப்பட்ட கலைப் பொக்கிஷங்களை இப்போது வைத்திருக்கும் நாடுகள் அந்தக் காலத்தில் அவற்றை எடுத்துச்செல்லவில்லை எனில், அவை எப்போதோ அழிந்தொழிந்திருக்கும் என்பதே அந்த வாதமாகும். இதனை ஆதாரபூர்வமானதாக்கும் முயற்சியில் எல்யின் பளிங்குகள் விஷயத்தை மாதிரி உதாரணமாக அவர்கள் கூறுவதுண்டு. உண்மையில், பார்திஞேன் பளிங்குக் கற்களில் பலவற்றை எல்கின் அழித்துவிட்டார் இப்போது பிரிட்டனில் எஞ்சியிருப்பவை மிகவும் குறைந்த எண்ணிக்கையினதேயாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கலாசாரச் சொத்துக்களில் பலவற்றை பிரிட்டிஷார் பாதுகாப்பதற்குப் பதில் அழித்தொழித்த சந்தர்ப்பங்களே அதிகமாகும். இதற்கு உதாரணம் காட்ட நெடுந்தூரம் செல்ல வேண்டியதில்லை. தொல்பொருள் ஆணையாளராக இருந்த திரு. எச். சி. பி. பெல் என்பார் நடந்துகொண்ட ஒரு சம்பவமே போதுமானதாகும். அனுராதபுரத்தின் பண்டைக்கால மகாபாதும பிரிவெனுவின் இடிபாடுகளாக இருந்த கற்களில் பத்து வண்டி கற்களை வீதி அமைப்பதற்குப் பாவிக்குமாறு மராமத்துப் பகுதிக்கு உத்தரவிட்டவர் அவர்தான். அந்தக் கற்களின் புராதனத் தன்மையைப் பாதுகாப்பதில் சிறிதும் அக்கறை இல்லாத அவரைத்தான் ஜோன் ஸ்டில் என்பவர், "லைசென்ஸ் பெற்ற புராதனப் பொருள் ஆராய்ச்சியாளர்" என்று ஏதோ பெரிதாகப் பாராட்டி இருந்தார். பெல் என்பவரின் முன் பயிற்சி இல்லாத அவரைத்தான் ஜோன் கவனமும் அக்கறையும் இல்லாத வேலைகளாலும பொலன்னறுவை திவன்கா ஆலயத்திலிருந்த சித்திர வேலைப்பாடுகள் வீணாகச் சிதைந்து போயின. எனவே கூட்டுமொத்தத்தில் அவர்கள் பாதுகாத்த புராதன பொக்கிஷங்களைவிட அழிந்தொழிந்தவையே அதிகம். மேலும் பாதுகாத்த தொல்பொருள்களில் பலவற்றையும் அவர்களே எடுத்துச் சென்றுவிட்டனர். இதுவே காலனித்துவ தொல்பொருள் ஆராய்ச்சிச் சரித்திரத்தின் சுருக்கமாகும். ஆலயங்களிலும் ஆலய வளவுகளிலும் உள்ள பொருள்களுக்கு நாயக்க தேரர்கள் உரித்துக் கொண்டாட முடியாது என்று கூறிய பெல் போன்றவர்கள் இங்கிருந்து எடுத்துச் சென்ற புராதனப் பொருள்கள் பிரிட்டனில் உள்ள தொல்பொருள் சாலைகளில் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை சட்ட நிர்ப்பந்தத்தின் பேரில் சுவீகரிக்கப்பட்டவையாகும்.

அண்மைக் காலத்தில் சில வருடங்களாக எமது அரும்பொருள்கள் சட்டவிரோதமான முறையில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. அதனால் எமது தொல்பொருள்கள் வேற்று நாடுகளுக்குப் போய்ச் சேரும் பிரச்சினை மேலும் பூதாகரமாகிவிட்டது. உல்லாசப் பயணத்துறை, கட்டுப்பாடற்ற வர்த்தக, சந்தைப்படுத்தல் முறை ஆகிய இரண்டினதும் பக்க விளைவே இதுவாகும். குறிப்பாக, சுதந்திர வர்த்தக நடைமுறையின் கீழ் வெளிநாட்டவர்கள், எமது நாட்டில் உள்ள கலைச் சின்னங்களை அழிக்கும் பேர்வழிகளுடன் சேர்ந்து கலாசாரப் பொக்கிஷங்களை வைத்து வர்த்தகம் நடத்த முடிகிறது. பண்டைக் காலத்து ஓலைச் சுவடிகள் பலவும் உல்லாசப் பிரயாணிகள் கைக்கு மாறுகின்றன. அவர்கள் தமது இலங்கைப் பிரயாணத்தின் ஒரு ஞாபக 'மலராக' அவற்றை வாங்கிச் செல்கின்றனர். பெறுமதி மிக்க பண்டைய ஓலைச் சுவடிகளை வைத்திருக்கும் பலரும், அவற்றின் அருமை பெருமையை உணராது உள்நாட்டுக் கலைப்பகைஞரின் வலையில் சிக்குண்டு அற்பசொற்ப பணத்துக்குக் கைமாற்றிவிடுகிறார்கள்.

உல்லாசப் பிரயாணிகளிடம் இருந்து பணம் சம்பாதிப்பதற்காக எமது கலைச் சின்னங்கள், கலைப் பொருள்கள் பாரிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதனால் அவற்றுக்குரிய தரம் குறைந்து போகிறது. அதன் விளைவாக எமது கலைத் திறமையை மற்றவர்கள் குறைத்து மதிப்பிட ஏதுவாகிறது. பாரிய அளவில் கலைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதால் எமது கலைத்தொழிற் திறமையும் தாழ்ந்து போகும் ஆபத்து ஏற்பட்டு வருகிறது.

இவ்விஷயத்தில் அணியிலக்கணத்துடன் எழுதுவதற்கோ அல்லது மேடைகளில் நின்று வாக்குவன்மையுடன் பேசுவதற்கோ எப்போதும் குறைவேற்பட்டதில்லை. எமது இப்போதைய தேவை எழுத்தும் பேச்சுமல்ல. எமது நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட அரும் பெரும் கலாசாரச் சொத்துக்களை எப்படியாவது திரும்பக் கொண்டுவந்து சேர்ப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான செயலில் இறங்குவதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. அது மட்டுமன்றி எமது வசம் உள்ள பொக்கிஷங்களை அவை இங்கிருந்து வெளியேறாமலும், கடத்திச் செல்லப்படாமலும் பேணிப் பாதுகாப்பதிலுமே காரிய சித்தி உண்டு.

வெளிநாடுகளில் உள்ள எமது புராதன அரும் பொருள்களில் பலவும், எமது கலாசார பாரம்பரியத்தை எடுத்தியம்பும் விசேஷத்துவம் வாய்ந்த — சிறப்பு மிக்க தொல்பொருள் வகைகளைச் சேர்ந்தவையாகும். அவற்றில் பலவும் தனிச் சிறப்பும் மதிப்பும் உள்ளவை. அவை இல்லாமல் கொழும்பு தொல்பொருள்சாலையின் அணிச் சிறப்பில் எப்போதும் வெற்றிடம் ஒன்று இருக்கவே செய்யும்.

நாம் இழந்த பிரஸ்தாப தொல்பொருள்களை மீளப் பெறுவதற்கு இருதரப்புப் பேச்சுவார்த்தைகளும் பலதரப்புப் பேச்சுவார்த்தைகளும் அவசியம். வெளிநாடுகளில் இப்போதுள்ள எமது கலாசாரச் சொத்துப் பொருள்களின் பட்டியல் ஒன்றை நாம் ஏற்கனவே வெளியிட்டபோதிலும் அது முற்றிலும் பூரணமானதல்ல. எமக்கு ஆக முதலில் தேவைப்படும் பொருள்கள் என்று சிலவற்றை விசேஷமாகப் பிரித்துக் கூறுவதனால் நாமே பாதகமாக நடந்துகொண்டதாகவும் முடியலாம்.

தனிப்பட்ட தொல்பொருள் சேகரிப்பாளர்களிடம் உள்ள பொருள்கள் பற்றிய விவரங்களை ஒன்று திரட்டுவதற்கான நடவடிக்கைகள், ஆராய்ச்சிகள் என்பன மிகக் குறைந்த அளவிலேயே இதுவரை செய்யப்பட்டுள்ளன. இதனை ஒரு தனி மனிதரோ அல்லது தனி ஒரு ஸ்தாபனமோ செய்து முடிப்பது இலகுவான காரியமல்ல. தேசிய தொல்பொருள்சாலை, அகழ்வாராய்ச்சித் திணைக்களம், பல்கலைக் கழகங்கள் ஆகிய மூன்றும் தம்மிடம் உள்ள நிபுணத்துவத்தை ஒன்று சேர்த்து இக்காரியத்தில் இறங்க வேண்டும். வெளிநாடுகளில் உள்ள எமது தூதராலயங்கள், மற்றும் சட்ட நிபுணர்கள், பேச்சுவார்த்தை நடத்துவதில் பயிற்சி உள்ளவர்கள் ஆகியோரின் உதவியையும் இதற்கு நாட வேண்டும்.

யுனெஸ்கோ பொதுச் சபை, கலாசாரச் சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்கனவே இரண்டு பிரகடனங்களை இயற்றி உள்ளது. கலாசாரச் சொத்துக்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்வது, இறக்குமதி செய்வது, உரிமையை மாற்றுதல் என்பனவற்றைத் தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் விதத்தில் முதலாவது பிரகடனம் அமைந்துள்ளது. அது 1970 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இரண்டு வருடங்களின் பின்னர் அதாவது 1972-இல் உலகின் கலாசார பாரம்பரியத்தையும் இயற்கைப் பாரம்பரியத்தையும் பேணிப் பாதுகாக்க வகை செய்யும் இரண்டாவது பிரகடனம் உருவாக்கப்பட்டது. இந்த இரண்டு பிரகடனங்களையும் வழிகாட்டிகளாக வைத்து, அவற்றைச் செயற்படுத்தக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது எமது கலாசார அமைச்சின் பொறுப்பாகும்.

இவ்விஷயத்தில் செயலில் இறங்குவதற்கு முதற்படியாக சட்டவிரோதமான முறையில் அரும்பொருள்கள் நாட்டிலிருந்து எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கும் தனியார்வசம் உள்ள தொல்பொருள், அரும்பொருள்களை அரச சொத்தாகச் சுவீகரிப்பதற்கும், அந்தப் பொருள்களின் பெரும் இடாப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கும் அதிகாரம் உள்ள நிறுவனம் ஒன்றை உருவாக்க வேண்டும். அதற்கேற்ற விதத்தில் அரும்பொருள்கள் சட்டத்தை வலுவுள்ளதாகத் திருத்த வேண்டும்.



மூனிச் ஸ்சாற்ஸ்கமர் டெர் ரெசிடென்சிலுள்ள 1242ம் இலக்கத்தையுடைய யானைத்தந்தப் பேழையின் குறுகிய பகுதியின் பக்கத் தோற்றம்.

இதில் இன்னொரு விஷயத்தையும் கவனத்திற்கொள்ள வேண்டும். சட்டத்தில் என்னதான் கடுமையான விதிகள் இருந்தாலும் அரும்பொருள்கள் அருகிப் போவதன் ஆபத்தை — அதன் விளைவை — அதன் உண்மையான தன்மையை மக்கள் உணராதவரை சட்ட விதிகளை அமுலாக்குவது மிகவும் கஷ்டமாகவே இருக்கும். எனவே இது குறித்து மக்கள் நன்கு அறிந்துகொள்ளும் வகையில் பரந்த ரீதியில் பிரசாரம் செய்யப்பட வேண்டும். இதற்கு தொலைக்காட்சி உட்பட மற்றும் பொதுசனத் தொடர்பு சாதனங்களின் உதவியையும் பெற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மேலும், எங்கள் தொல்பொருள் சாலைகளை விசாலித்து பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். கலாசாரச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாப்பதற்குத் தேவையான விஞ்ஞான, தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான வசதிகள் செய்யப்படுவதோடு தேவையான நிதியும் ஒதுக்கப்பட வேண்டும்.

எமது கலாசாரச் சொத்துக்கள் உள்ள வெளி நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கும் அந்தப் பொருள்கள் எமது நாட்டு மக்களுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதனை எடுத்துக் கூறும் பொறுப்பு எங்களுக்குண்டு.

மேற்சொன்ன நடவடிக்கைகள், ஏற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு திட்டத்தை அமுலாக்குவதற்கு அவசரப் பிரிவொன்றை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்ருகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்ருெழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

மக்கள் வங்கி வெளியீடு

விலை ரூ. 2/25

பொருளியல் நோக்கில் பிரசுரிக்கப்படுபவற்றைப் பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org